# கூட்டுறவுத்தீபம்



334.6
கூட்
SL/PR

கூட்டுறவாளர் **திரு. சி. சிவமகாராசா** அவர்களின்

- பாராளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டம் -

சேவைநலன் பாராட்டு விழாச்

# சிறப்பு மலர்

**2001**

# கூட்டுறவுத் தீபம்

தெல்லிப்பழை
கூட்டுறவாளர் திரு. சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின்
(பாராளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்)
சேவைநலன் பாராட்டு விழாச்

## சிறப்பு மலர்

**வெளியீடு**
**விழாச்சபையினர்**
**தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**தெல்லிப்பழை**
**2001.06.30**

# விழாச்சபையினர்

## தலைவர்

திரு.ச. தனபாலசிங்கம் அவர்கள் (சங்கத்தலைவர்)

## உபதலைவர்

திரு. மா. நாகேந்திரசீலன் அவர்கள் (சங்க உபதலைவர்)

## உறுப்பினர்கள்

திரு. செ. பத்திநாதர் அவர்கள் (சங்க இயக்குனர் சபை உறுப்பினர்)

திரு. செ. செல்வராசா அவர்கள் (பொது முகாமையாளர்)

திரு. ந. பாலகணேசன் அவர்கள் (தலைவர். கூ.ஊழியர் தொ. சங்கம்)

திரு. து. சிவகுமாரன் அவர்கள் (தலைவர். நலன்புரி சங்கம்)

திரு. க. துரைசிங்கம் அவர்கள் (தலைவர் சிக்கன க.உ.கூ.சங்கம்)

# மலர்ச்சபையினர்

## மலர் ஆசிரியர்

சைவப்புலவர் சு. செல்லத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்)

## உறுப்பினர்கள்

பண்டிதர் சி. அப்புத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. ஆர். எம். நாகலிங்கம் J.P (கூட்டுறவு விரிவுரையாளர்)
திரு. சு. சிவசுப்பிரமணியம் (செயலாளர், மாவட்டக் கூட்டுறவுச் சபை)

# கூட்டுறவாளர்
# திரு.சின்னத்தம்பி சிவமகாராசா (பா.உ) அவர்களின்
# சேவை நலன் பாராட்டுவிழா
# வாழ்த்து

இராகம்: ஆனந்தபைரவி — தாளம்: ஆதி

**பல்லவி**

சேவைக் கெனப் பிறந்தவரே சேவையினாலுயர்ந்தவரே
சேவையினைத் தவமாக்கிய சிவமகாராஜா வாழ்க

**அனுபல்லவி**

மாவைப்பதி உதித்தசிவ மகாராஜனே உங்கள்
மாட்சி நயந்து போற்றி மங்கலவிழாவெடுத்தோம்

**சரணங்கள்**

தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைநீர்
எல்லாத்துறைகளிலும் ஏற்றமுறவைத்ததனால்
நல்லதொரு சங்கமென நாடுபுகழக் கேட்டோம்
வல்லதலைவருமை வாழ்த்தியே போற்றுகின்றோம்.

எத்தனையோ பூகம்பங்கள் எங்கள் மண்ணைக் கலக்கிடவும்
அத்தனையும் எதிர்கொண்டே அஞ்சாமல் நிலைத்து நின்று
இத்தரையின் மக்களுக்கே உடல் பொருள் ஆவியென
நித்தமுமே சேவைசெய்த நேர்மைகண்டு போற்றுகிறோம்.

வலிவடக்கில் கால்நடைகள் வளர்ப்பவர்கள் சங்கத்திலும்
நலிந்தவர்க்குச் சேவைசெய்யும் செஞ்சிலுவைச் சங்கத்திலும்
வலுவிழந்தோர் புனர்வாழ்வு வழங்குகின்ற கழகத்திலும்
சலியாமற் சேவைசெய்த தலைவருமைப் போற்றுகிறோம்

கூட்டுறவின் குரலாய்இந்த நாட்டுப்பாராளுமன்றில்
நீட்டிவாதிட்ட செய்தி கேட்டுப் பெருமை கொண்டோம்
மீட்டும் வலிவடக்கில் மேன்மையாய் வாழவழி
காட்டுவீரென்றேயும்மைக் கனம்பண்ணுகின்றோம் வாழ்க

தந்தைசெல்வா காட்டிவைத்த சாத்துவிக நெறியில்நின்று
இந்தமண்ணின் விடிவுக்காக இதயசுத்தி யோடுழைத்து
சிந்தனை சொல்செயல்களெல்லாம் தனக்கன்றிப் பிறர்க்காக
எந்தநாளும் அர்ப்பணிக்கும் ஏந்தலேநீ வாழியவே.

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்வு ஊன்றிய தூண் என்ற வள்ளுவரின்
சொல்லுக்கிலக்கணமாய்த் தொண்டுக்கிருப்பிடமாய்
எல்லவரும் மகிழ்ந்தேத்த என்றென்றும் வாழியவே

வணக்கம்

இயற்றியவர் – சைவப்புலவர் சு.செல்லத்துரை
இசைத்தோர் – செல்விகள் ப. பத்மாதேவமலர், ந.மரியராணி.

# கூட்டுறவுத்தீபம்



## திரு. சி. சிவமகாராசா அவர்கள்

பாராளுமன்ற உறுப்பினர் - யாழ் மாவட்டம்

# பதிப்புரை

தன்நலம் கருதாமல் சமூக நலன் கருதி உழைப்பவர்கள் நாம் வாழும் சமூகத்தில் சிலரே உள். அவர்களில் எங்கள் வலி வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் முக்கியமான ஒருவராக கருதப்படுகின்றார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களைப் பாராட்டி கௌரவப்படுத்தலும் அவர்களது சேவையை வரலாற்றில் ஆவணப்படுத்தி வைப்பதும் எதிர் காலச் சமூக நலனுக்கு உயர்த்துவதும் வழிகாட்டலாக அமையும் என்பது சமூகவியல் அறிஞர்களின் கருத்தாகும்.

1968 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றவரை கூட்டுறவுத்துறையில் முன்நின்று பல மட்டங்களில் உழைத்து வரும் ஒரு சிறந்த கூட்டுறவாளர் திரு. சின்னத்தம்பி சிவமகாராசா என்பது யாவரும் அறிந்த செய்தியாகும்.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மிக நீண்ட காலம் கூட்டுறவுப் பணியாற்றிய சில கூட்டுறவுப் பெரியார்களையும் , சங்கப் பணியாளர்களையும் கௌரவிக்கும் இவ்வேளையில் இவர்களில் முன்னணியில் திகழும் சங்கத்தின் நீண்டகாலத் தலைவர் ஆகிய திரு. சி. சிவமகாராசா அவர்களையும் இரண்டாம் நாள் ஏனைய கூட்டுறவாளர்களையும் கௌரவிப்பதற்கும் அதன் நிமித்தம் ஒரு சிறப்பு மலர் வெளியிடுவதற்குமாக விழாச்சபையும் ,மலர்ச்சபையும் அமைத்து கருமங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

" கூட்டுறவுத்தீபம்" எனும் பெயர் தாங்கிய இம் மலரை தனித்து விழாச் செய்திகளை தாங்கியது மட்டுமல்லாது சங்கத்தின் வரலாற்றுடன் கூட்டுறவு பற்றிய பயனுள்ள பல கட்டுரைகள் உள்ளடக்கியதாக வெளிவிடவேண்டும் என மலர்ச்சபை முடிவு செய்தது.

இந்த வகையில் தொடர்ந்து முயன்று மலர் உருவாக்கப்பட்டுள்ளது. இம் மலரில் விழா நாயகர் பற்றிய சமய சமூக நல்லறிஞர்களின் ஆசிச் செய்திகளும் அவரது கூட்டுறவுச் சேவையுடன் ஏனைய சமூக சேவை பற்றிய அறிஞர்களின் கட்டுரைகளும் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முழுமையான வரலாற்றைத் தாங்கிய கட்டுரைகளும் கூட்டுறவுத்துறையின் நவீனத்துவம் வாய்ந்த கட்டுரைகளும் , வேறு கல்வி சார்ந்த கட்டுரைகளும் , வரலாற்றுச் செய்தி காட்டும் சில படங்களும் இடம் பெறுகின்றன.

இடம் பெயர்வு காரணமாக இழப்புக்களால் அழிந்தவை போகக் கிடைத்தவற்றையாவது ஆவணப் படுத்த வேண்டும் எனும் முனைப்புக்களுமே இம் மலரில் செயல் வடிவம் பெற்றுள்ளது.

கூட்டுறவாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் இம் மலர் பயன்தர வேண்டுமென விரும்புகின்றோம்.

இதற்கு வேண்டிய தகவல்களைத் தந்துதவிய சங்கத்தின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் சங்கத்தின் பல்வேறு துறைசார்ந்த அலுவலர்களுக்கும் , கட்டுரைகள் தந்துதவிய அறிஞர்களுக்கும் நன்றியுடையோம். இம் மலர் பலருக்கும் பயன் தருமாயின் அதுவே நமது உழைப்பின் பயனுமாகும்.

மலராசிரியர் –

# தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கீதம்

இராகம்: பூபாளம் தாளம்: ஆதி

**பல்லவி**

தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்க மெங்கள் சங்கமிதை
அல்லும் பகல் பாடுபட்டு அயராமல் வளர்த்திடுவோம் - தெல்

**அனுபல்லவி**

எல்லவரும் கூடியிங்கு என்றும் உறவாடி நின்று
நல்வாழ்வு வாழ்ந்திடவே நமக்குதவும் சங்கமிது - தெல்

**சரணங்கள்**

தெல்லிப்பழை மயிலிட்டி காங்கேசன் பிரதேச
எல்லைவரையுள்ள மக்கள் எங்கிருந்தாலுமவர்
தொல்லை துயர் துடைத்துக்கை தூக்கிவிடுவதற்கு
வல்ல தொரு சங்கமென வளர்த்திடுவோம் நாமே - தெல்

உறவுக்குக்கை கொடுப்போம் உண்மைக்கு உயிர்கொடுப்போம்
பிறருக்குமாக வாழும் பெருமைக்குரியராவோம்
திறமான சங்க மென்று திசைவென்று நின்றுபுகழ்
இறவாமல் காத்திடுவோம் என்றும் உழைத்திடுவோம் -தெல்

நாடுநலம் பெறவும் நம்மவர் உயர்ந்திடவும்
பாடுபடும் ஏழைமக்கள் பதவிகள் பெற்றிடவும்
வாடும் பயிர் வளர்க்கும் வான்மழை போல நாங்கள்
கூடியுழைத்திடுவோம் கோடிநன்மை கண்டிடுவோம் -தெல்

**ஆக்கம்: சைவப்புலவர் சு. செல்லத்துரை**
**இசையமைப்பு: - இசைக்கலை மணி. ஞான சொரூபன்**

# பொருளடக்கம்


விழாச்சபை

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கீதம்

விழா நாயகர் வாழ்த்து

பதிப்புரை

01. ஆசிச்செய்திகள்

ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரியார்

மகாராஜ ஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

பேராயர் அதிவண. எஸ். ஜெபநேசன்

அருட்கலாநிதி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்

திரு. வீ. ஆனந்த சங்கரி

திரு. மாவை சேனாதிராசா

திரு. க. சண்முகநாதன்

திரு. து.வைத்திலிங்கம்

திருமதி. பத்தினியம்மாதிலகநாயகம்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

திரு. எஸ்.தில்லைநாடராசா

பேராசிரியர். அ. சண்முகதாஸ்

திரு. ஆ. சுப்பிரமணியசர்மா

Mr. Jayantha C. C. Bulumolla

திரு. செ.கு.சண்முகநாதன்

திரு.சு.கணேசமூர்த்தி

பண்டிதர் சி. அப்புத்துரை

திரு. க. பரமலிங்கம்

திரு. ந.இரவிராஜ்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 02. | விழா நாயகர் சமூக சேவைக்குறிப்புகள் | | 01 |
| 03. | கூட்டுறவாளர்.................................... | திரு. சி. தனபாலசிங்கம் | 02 |
| 04. | ஒப்பற்ற சமூகத்தொண்டன் .......... | திரு.ஏ.சீ.விஜயராசசிங்கம் | 04 |
| 05. | எங்கள் வழிகாட்டி ............................ | தலைவர் கா. வ.கூ. சங்கம் | 05 |
| 06. | கூட்டுறவுச் சேவையில்...................... | திரு. சு.சிவசுப்ரமணியம் | 06 |
| 07. | பாராளுமன்றில் கூட்டுறவின் குரல் | | 09 |
| 08. | தெல்லிப்பழை ப.கூ.சங்கம் ........... | திரு.செ. பத்திநாதர் | 11 |
| 0⁰ | கூட்டுறவு முகாமைத்துவ................ | திரு. சி. கோணேஸ்வரன் | 34 |
| 10. | அறிவுசார் மூலதனம்....................... | திரு.க.தேவராஜா | 39 |
| 11. | கல்விச் சிந்தனையும்...................... | பேராசிரியர் சோ. சந்திரசேகரம் | 43 |
| 12. | Development of ........................ | Mr.Upali herath | 46 |
| 13. | PlanninG - Mr.P.V.Rajaguru | | 51 |
| 14. | Introduction of Co-op ................ | Prof.S.Sandrasegaram | 61 |
| 15. | சமஷ்டி வாதத்தின் ..................... | போராசிரியர் அ.சிவராசா | 62 |

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்*
*இரண்டாவது குருமஹா சந்நிதானம்*
*அவர்களின்*

# அருளாசிச் செய்தி

அன்பு நெஞ்சத்தீர்,

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் திரு சிவமகாராசா அவர்களின் இருபத்தைந்து வருட சேவையைப் பாராட்டி விழா எடுப்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகிறோம். மக்களின் சேவைக்காக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் காலத்தின் தேவையுணர்ந்து மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவாக செய்துகொண்டிருப்பதை யாவரும் அறிவர்.

தெல்லிப்பழை மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் கைகொடுத்து உதவுவதில் நிறைவுகாணும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நல்லதோர் தலைமைத்துவத்தைக் கொண்டதன் காரணமாக திறமையாக சேவையாற்றுகின்றது. இப்பணிக்காக தன்னை அர்ப்பணித்து சேவை செய்யும் திரு. சிவமகாராசா எல்லோருடனும் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர். இனிமையான பேச்சு, சீரான உடை, எடுத்த கடமையை நிறைவாகச் செய்வதில் மனநிறைவு கொண்டவர்.

இவரது 25 வருடகால சேவை பலரது துயர்களைத் துடைக்கக்கூடியதாக இருந்தது. தான் மட்டும் வாழாது, மொழியும் நாடும் வாழவேண்டும் என்பதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்து பல சேவைகளை தமிழ் மக்களுக்கு ஆற்றிவருகின்றார். இவரது பணிகள் மென்மேலும் மக்களுக்குக் கிடைக்கவும், சிறப்படையவும் இறைவனை வேண்டுகின்றோம். விழா எடுக்கும் விழா அமைப்பாளர்களை வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

2வது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தா
# மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
## *அவர்களின்*
## பிரார்த்தனையுரை

ஆராதனைக்கு விளக்கம் தந்த வியாஸ மகாரிக்ஷி "எந்தவொரு செயலை தெய்வீகமாகக் கொண்டு உணர்ச்சியோடும் மனநிறைவோடும் ஆற்றுகிறோமோ அந்தத் தர்ம கைங்கரியத்தால் இறைவன் மகிழ்ச்சியடையும் போது அதுவே ஆராதனையாகிறது" என்றார். ஆராதனை செய்வதற்கும் மனசும் சுத்தமனசாக வேண்டும். இத்தகைய சுத்த மனசோடு ஆராதனைகளை ஆற்றி வரும் பெருமகன்தான் மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி மண்ணில் சின்னத்தம்பிக்குப் புத்திரனாகப் பிறந்த சிவமகாராசா ஆவார்.

பெயரிலேயே சிவம் கலந்துவிட்டது. இந்த உத்தமன் தர்மங்களையாற்றி அன்பைக் கொண்டுள்ளார். அன்பு பெருகியவழியில் அருளும் பெற்றுவிட்டார். அருள் மூலம் தவவாழ்வையும் கொண்டுள்ளார். அறனும் அன்பும் அருளும் தவமும் கூடியதால் உள்ளத்தெளிவு கொண்டு ஆன்மீக வாழ்வினால் மற்றவர்களினது நலனில் அதீத நாட்டங் கொண்டு அதற்கேற்றவாறு ஆற்றிய சிவதர்மங்களை நாடு நன்கறியும். இவற்றினாற்றான் சிவமகாராசா திரு S.J.V செல்வநாயகத்தின் நம்பிக்கைக்கும் ஆளாகினார்.

1990ம் ஆண்டில் வலிகாமம் மக்கள் இடம்பெயர்ந்து அல்லலுற்ற வேளையில் சிவமகாராசா அவர்கள் "உச்சிமீது வானிடிந்து வீழ்ந்திடினும் அச்சமில்லை" அச்சமேயில்லை என்ற தாரக மந்திரத்தை ஏற்று, பிறந்த மண்ணிலேயே நின்று உடன்பிறப்புக்களோடு இணைந்து, உடல், பொருள், ஆவி அத்தனையாலும் அல்லற்பட்டோரது இடர்களை ஓரளவிற்கு தன்னாலான தொண்டுகளால் களைந்த செயல்களையும் எம்மவர் அறிந்துதான் வைத்திருக்கிறார்கள். காலத்தால் ஆற்றிய தர்மங்களால் சிவமகாராசா உயர்வுபெறுகிறார்.

கண்ணால் கண்டதை மனதிலேயேற்றி, அம்மனசு நினைத்ததை வார்த்தைகளுக்கு மாற்றி, அவ்வார்த்தைகளால் இதமாகக் கருத்துக்களைத்தந்து அல்லற்பட்டோரை ஆதரித்து, அரவணைத்து, அன்பினால் ஆனவற்றை நல்கிய இப்புனிதமகானை இன்றும் வலிகாமம் மக்கள் மனதில் நினைவில் கொண்டுதானிருக்கின்றனர்.

சிவமகாராசாவிடம் சந்தர்ப்பவாதம் இல்லை. ஆனால் சமயோசித புத்தியுண்டு. பிரபலம் வேண்டி அலைவதில்லை. ஆனால் பொறுமையோடு மற்றவனை நேசிக்கும் பண்புண்டு. சிரித்துக்கொண்டே கழுத்தறுக்கும் வித்தை தெரியாது. மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பும், ஒப்பற்ற சைவக் கலாசாரத்தினைப் பேணிநின்று எதையும் தாங்கும் சக்தியையும் கொண்டதனால் நல்ல எண்ணங்களைக் கொண்டு சத்தியமே வெல்லும் என்ற கொள்கையோடு வாழ்கிறார். எமது அன்பன் சி. சிவமகாராசா நீடூழி வாழ்ந்து நிறைந்த திருத்தொண்டுகளையாற்றி சிவதொண்டின் சின்னமாக உயிர் வாழவேண்டுமென எல்லாம் வல்ல மாவை முருகப் பெருமானை நினைந்து பிரார்த்திக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ சு.து . ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனகர்த்தா

உ
சிவமயம்

# ஸ்ரீ நகுலாம்பிகா சமேதஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில் ஆதீனகர்த்தா

## 'நகுலேஸ்வரகுரு' சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்

அவர்களின்

# ஆசிச் செய்தி

கூட்டுறவுச் சேவையில் இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்த மக்கள் சேவையாளன் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களுக்கு சேவை நலன்பாராட்டு விழா நடைபெற இருப்பதறிந்து அவருக்கு ஆசிவழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த யுகத்தில் தனக்கென வாழ்பவர்களையே காணமுடிகிறது. பிறர்க்காக வாழ்பவர்களைக் காணல் அரிதினும் அரிது. திருவாளர் சிவமகாராசா அவர்கள் தன் வாழ்வை தான் பிறந்த பிரதேசத்தின் மக்களுக்காகவே அர்ப்பணித்து வாழ்வது யாவரும் அறிந்தது. கூட்டுறவுத்துறையில் அவர் செய்த சாதனைகள் பல. அகில இலங்கையிலுமே தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னணியில் திகழச்செய்த பெருமை ஒன்றே அதற்குச் சான்றாகப் போதுமானதாகும்.

கூட்டுறவுத் துறையில் மட்டுமன்றி வலிகாமம் வடக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகவும், வலிகாமம் வடக்கு கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவராகவும் இருந்து செய்த அளப்பருஞ் சேவைகள் சொல்லில் அடங்கா.

அமைதியான, அடக்கமான, சாந்தமான போக்கும் – எந்த இடர் நிறைந்த வேளையிலும் துன்பத்தையோ, கோபத்தையோ வெளிக்காட்டாத உறுதியான உள்ளமும் இவருக்கே சொந்தமான இயல்புகள்.

சாதாரண கிராமத் தொண்டனாகச் சிறுவயதிலே அவர் தொடங்கிய சேவை, இன்று இந்த நாட்டின் பெருமைக்குரிய சேவையாளனாக அவரை உயர்த்தித் தேசியமட்டத்திலே பாராளுமன்ற உறுப்பினராக உயரவைத்துள்ளதென்றால் அவரது தொண்டுள்ளத்தின் பெருமையே அது எனல் சாலப் பொருந்தும்.

மக்கள் சொல்லொணாத் துன்பதுயரங்களில் தவிக்கும் இந்நேரத்தில் திரு சிவமகாராசா போன்ற உண்மைச் சேவையாளர்களின் உதவி ஒன்றே ஆறுதல் தரவல்லது.

அனைவர்க்கும் முன்மாதிரியான சேவையாளன் சிவமகாராசா அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழா சிறக்கவும், அவர் பல்லாண்டு காலம் நல்வாழ்வு வாழ்ந்து மேலும் மேலும் மக்கள் சேவை செய்து சிறக்கவும் எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை வணங்கி ஆசி கூறுகின்றேன்.

சுபம்

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்

# கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
# தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
# வாழ்த்துரை

உண்மையான உழைப்பினாலும் உறுதியான சொல்வன்மையினாலும் தன்னலங்கருதாத் தியாக சிந்தையினாலும் மக்கள் மனதில் உறுதியான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர் பெரியார் சிவமகாராஜா அவர்கள். ஆரம்பத்தில் தந்தைசெல்வா அவர்களின் அறநெறிப்பாதை இவருக்கு வழிகாட்டியாக அமைந்ததெனலாம். அடுத்து சொல்லின் செல்வரும், செயல்வீரருமாகிய அமரர் அமிர்தலிங்கத்தின் வழிகாட்டல் இப்பெரியாரை இந்நிலைக்கு உயர்த்தி விட்டதெனலாம். தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்திலே கால்நூற்றாண்டுக்கு மேலாக கண்ணியமாகக் கடமை புரிந்தவர் இப்பெரியார்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது "

என்பது வள்ளுவர் வாய்மொழியாகும். கனிந்த சில சொற்களினாலும் நிறைந்த தூய செயலினாலும் பெருமை பெற்றவர் இவர்.

சமயவழியை நாம் நோக்கினால் திரு. சிவமகாராஜா அவர்கள் உன்னதமான ஒரு இடத்தை வகிப்பவர். அத்துடன் ஆசாரசீலராக வாழ்ந்து ஏனையோருக்கும் வழிகாட்டிக் கொண்டு இருப்பவர். தனது தந்தையாரின் பக்திநெறியைப் பின்பற்றி வாழ்ந்த சிறப்புக்குரியவர். இவருக்கு உயிர்த்துணையாக நிற்பது வழிபாடும் கடமையுமே என்பதை நான் நன்கு அறிவேன்.

இன்று பாராளுமன்றத்தில் ஒரு இடத்தைப் பெற்றுள்ளார் என்றால் மக்கள் பணியை மேலாக மதித்த காரணத்தினாலேயே கிடைத்த பரிசு என்று கூறலாம். எம்போன்றார் அனைவராலும் "தலைவர்" என்று ஏற்றிப் போற்றப்படுபவர் இவர். எனவே மக்கள் சேவையை மகேசன் சேவையாக மதித்து தெய்வ நம்பிக்கையை உள்ளத்திலே பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பெரியாருக்கு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் விழா எடுப்பது வரவேற்கத்தக்கதாகும். பெரியார் அவர்கள் இன்னும் பல்லாண்டுகாலம் தேகசுகத்துடனும் அறச்சிந்தனையுடனும் வாழந்து பெருமை பெறவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி

# தென் இந்திய திருச்சபைப் பேராயர் கலாநிதி அதிவண. எஸ். ஜெபநேசன் அவர்களின் வாழ்த்து

பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் 25 வருட கூட்டுறவுச் சேவையைப் பாராட்டுமுகமாக 30/06/2001ல் ஒரு விழா நடைபெறவிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். திரு. சி. சிவமகாராசா கொள்கைப்பிடிப்பும் மனவுறுதியும் சேவை மனப்பான்மையும் கொண்டவர். தந்தை செல்வாவின் அரும் நினைவை பக்தி சிரத்தையுடன் காப்பாற்றி வருகின்றவர்.

இன்று தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மண் வளமும் நீர்வளமும், கல்வி வளமும், பண்பாட்டு வளமும் ஓங்கிய தெல்லிப்பழையின் இன்றைய நிலை வேதனையையளிப்பதாகும். இதனை மீட்டெடுத்து தெல்லிப்பழையின் பண்டைய பெருமையைக் காப்பாற்றுவது திரு. சிவமகாராசா போன்ற நாட்டுப்பற்றாளரின் கடமையாகும். திரு. சிவமகாராசா நீடூழி வாழ்ந்து கூட்டுறவுத்துறைக்கும், தெல்லிப்பழைக்கும் தமிழ் மக்களுக்கும் சீரிய தொண்டாற்ற வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

எஸ். ஜெபநேசன்

# இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் ஆசிச் செய்தி

"சேவை செய்வதே மேலான இன்பம்" என்னும் இலட்சியத்துடிப்புடன் இலங்குகின்ற உத்தமபுருஷசர்களில் திரு. சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களும் ஒருவராவர். இவரை வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் "கலங்கரை விளக்கு" என்று குறிப்பிடுவது தான் சாலவும் பொருத்தமானது ஆகும்.

செல்வப் பயிராம் வெற்றிலைச்செடி விரும்பி வளர்ந்தோங்கும் கொல்லங்கலட்டியே இவரது ஜென்மபூமி. இவர் என்றுமே சாதி, சமயப் பாகுபாடு காட்டுவதில்லை. ஏழைபங்காளனாக எப்பொழுதும் திகழ்பவர். இவர் தனது சிறப்பான சமூகசேவையால் தன் பெற்றோருக்கும் பிறந்த மண்ணுக்கும் பெருமையைத் தேடிக்கொடுத்துள்ளார். இவரது பெற்றோர், சின்னத்தம்பி – சுந்தரம் தம்பதியினர் உண்மையிலேயே பாக்கியவான்கள் ஆவர்.

1978இல் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு, கூட்டுறவுத் துறையினுள் பிரவேசித்த திரு. சிவமகாராசா அவர்கள், கூட்டுறவுக்காக அளப்பரிய சேவை ஆற்றினார். கால் நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவராகவும் இவர் நீண்டகாலம் பணிபுரிந்துள்ளார். இவர் யாழ் மாவட்டத்தில் ஒரு துறைதோய்ந்த கூட்டுறவாளனாக ஒளிர்ந்தது பாராட்டப்படவேண்டியது ஆகும்.

யுத்த அனர்த்தங்களினாலும் புலப்பெயர்வுகளாலும் நாளும் பொழுதும் நொந்து துடிக்கின்ற வலி. வடக்கு வாசிகளின் துயர் துடைத்திட இவர் என்றென்றும் துடிப்போடு சேவை புரிகின்றார். வலி. வடக்கு பிரதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகத் திகழ்ந்து சுறுசுறுப்புடன் இவர் ஆற்றிய சேவையை பிரதேச மக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருவர். இவர் பாராளுமன்ற உறுப்பினராக பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்டமை அத்தகைய நன்றிப் பெருக்கின் வெளிப்பாடு எனலாம்.

இவர் நல்ல உடல், உள நலத்துடன் நீடூழிகாலம் எம்மத்தியில் வாழ்ந்து, தன்னலமற்ற – உன்னத சேவையை தொடர்ந்தும் இப்பிரதேச வாசிகளுக்கு ஆற்றி அகமகிழ்ந்திட நான் இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்.

# யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
# தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத்தலைவர்
# திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களின்
# வாழ்த்துரை

பல ஆண்டுகளாக கூட்டுறவுத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த அருமைத் தம்பி சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக 1978 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற காலம் முதல் அத்துறையில் பெரும்பங்கு கொண்டு உழைத்தவராவார்.

தம்பி சிவமகாராசா அவர்களை ஏறக்குறைய 30 ஆண்டுகளாக நான் அறிவேன். அமைதியான போக்கும், சிறந்த பண்பும் கொண்ட அவர் கூட்டுறவு ஊழியர்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றவர். இவரது செல்வாக்கு தெல்லிப்பழைக் கிராமத்தோடு மட்டுமல்லாது யாழ். குடாநாடு முழுவதும் பரவியிருந்ததையும் நான் நன்கு அறிவேன்.

தம்பி சிவமகாராசா அவர்கள் கூட்டுறவுத்துறையில் மட்டுமல்லாது நீண்ட காலமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறந்த ஆதரவாளனாகவும் தொண்டனாகவும் பணிபுரிந்துள்ளார். ஒரு சிறுகாலம் வேறொரு அரசியற் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில் பதவி வகித்திருந்தாலும் அன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப பதவியைத் தாமாகவே துறந்தவருமாவார்.

அன்றைய அவருடைய வெற்றி அன்றைய சூழ்நிலையில் மக்களின் கருத்தைப் பிரதிபலித்ததேயன்றி அவர் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் முரண்பட்டவரல்ல என்பதை எடுத்துக்கூறவேண்டிய கடமை எனக்குண்டு. மக்கள் மத்தியிலே வாழ்ந்து பல துறைகளிலும் மக்களுக்குத் தொண்டாற்றிப் பெரும் செல்வாக்கை ஈட்டியவர் சிவமகாராசா அவர்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டிணியின் பாராளுமன்ற உறுப்பினராக இன்று அவர் செயற்பட்டாலும் கூட்டுறவாளர்களின் பிரதிநிதியாகவே நான் அவரைக் காண்கின்றேன். தற்போது வகிக்கும் பதவி காரணமாக அவர் தனது தலைமைப் பதவியைத் துறந்தாலும் கூட்டுறவுத் துறைக்கு அவரது தொண்டு தொடர்ந்திருக்கும் என்றும், எமது பூரண ஒத்துழைப்பு அவருக்கு என்றைக்கும் உண்டு என்றும் கூறி அவர் பல்லாண்டு வாழ்ந்து பல தொண்டு செய்ய, நீண்ட ஆயுளைக் கொடுக்க இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்க அவர் பணி

வீ. ஆனந்தசங்கரி,( பா.உ)

# யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா அவர்களின்

# வாழ்த்துரை

திரு.சிவமகாராசா அவர்களின் 25 ஆண்டு காலப் பொதுத் தொண்டு பற்றிக்குறிப்பாகக் கூட்டுறவுத்துறையில் ஆற்றிய பணியை வியந்து பாராட்டும் மலரொன்றை வெளியிட விருப்பதறிந்து மகிழ்வுற்றேன்.

பொதுத் தொண்டில் ஈடுபடச்சிந்தித்துச் செயலாற்றும் ஒருவருக்கு அதுவும் போர் அனர்த்தங்கள், அழிவுகள் விஞ்சியிருக்கும் காலத்தில் நீடித்து நின்று தொண்டாற்றும் திரு சிவமகாராசாவுக்கு வாழ்நாளிலேயே வாழ்த்தவும், பாராட்டவும் சிந்திக்கின்ற நன்றியுள்ள மனிதர்களின் எண்ணத்தைக் கூட வாழ்த்தியே ஆகவேண்டும்.

இலங்கையில் கூட்டுறவுத் துறை, யாழ்ப்பாணத்திலேயே எடுத்துக்காட்டாக வளர்ந்து, உயர்ந்து விளங்கியது வரலாறாகும்.

அந்த வரலாற்றுச் சுவடுகளின் அடியொற்றித் தெல்லிப்பழைப் ப.நோ.கூட்டுறவுச் சங்கமும் ஈடுகொடுத்து மக்களுக்கு அதுவும் போர்ச்சூழலில் அல்லற்பட்டு ஆற்றாது தவித்த நம் தமிழ்மக்களுக்கு ஆறுதலளித்து வாழ்வளித்ததென்றால் அது பாராட்டுக்குரியதுதான். இத்தகைய பாராட்டுக்குரிய கூட்டுறவுச் சங்கத்தை வழிநடத்துவதில் பெரும் பங்களித்த திரு. சிவமகாராசா அவர்களும் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியவராகின்றார்.

1970களில் தெ.ப.நோ.கூட்டுறவுச் சங்கம் பற்றிய நினைவுகள் இன்று வருகின்றன. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டரசு, கூட்டுறவுச் சங்கங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நடவடிக்கை எடுத்தது. தெல்லிப்பழை ப.நோ.கூட்டுவுச் சங்கத்திற்கு வழக்கறிஞர் சிதம்பரநாதன் அவர்கள் தலைமையில் ஒரு சபையை நிறுவியது. அந்தச் சபைக்கு ஐவர் மக்களால் தெரிவு செய்யப்படவும் வேண்டும். அந்த ஐவரும் எமது அணியைச் சேர்ந்தவர்களாகவே தெரிவு செய்யப்பட்டனர். அதில் நானும் ஒருவனாக இருந்தேன். 1972 மார்ச் 9ம் பிறை அன்றைய அரசியலமைப்புச் சட்டத்திற்கெதிரான போராட்டத்தில் அரசு முதன் முறை என்னைக் கைது செய்து இரண்டாண்டுகள் சிறையிலடைத்துவிட்டது. கூட்டறவுத்துறையிலிருந்து விலகியிருக்கவும் நேரிட்டது.

இதனைத் தொடர்ந்து தெல்லிப்பழைப் ப.நோ.கூட்டறவுச் சங்கங்கத்திற்குத் தலைவரை நியமிக்கும் பொறுப்பு அன்றைய காங். தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்குக் கிடைத்த பொழுது. திரு.சிவமகாராசா நியமிக்கப்பட்டிருந்த செய்தியை நான் சிறையிலிருந்த பொழுதே அறிந்திருந்தேன். அன்றிலிருந்து சென்ற 25 ஆண்டுகள் திரு.சிவமகாராசா கூட்டுறவுத்துறையின் முன்னேற்றத்திற்கு அயராதுழைத்து வந்ததை அறிந்துவந்துள்ளேன்.

திரு.சிவமகாராசாவும் நானும் ஒரே ஊரை மாவிட்டபுரம் மண்ணைச் சேர்ந்தவர்கள் என்பது மட்டுமல்ல, தந்தை செல்வாவின் தமிழரசுப் பாசறையில் வளர்ந்தவர்கள் என்பதாலும், காலத்தின் சூழலில் இடைக்காலமொன்றில் விலகியிருந்த பொழுதிலும் கொள்கை, இலட்சியப் பாரம்பரியத்திலிருந்து விலகாது, மீண்டும் ஒரே அணியில் 2000 ஆண்டில் த.வி.கூட்டணி மக்கள் பிரதிநிதிகளாக எம்மோடு திரு.சிவமகாராசாவும் தெரிவு செய்யப்பெற்றுப் பணிபுரிகின்றோம் என்பதாலும் அவரை வாழ்த்தவும், பாராட்டவும் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நானும் எங்கள் குடும்பமும். திரு.சிவமகாராசாவும் அவர் பெற்றோர், உடன் பிறந்தார் குடும்பங்களும் உற்ற நண்பர்களாய் என்றும் நின்று வந்திருக்கின்றோம் என்பதில் ஒரு மானசீக ஆதங்கம் எம் முன் இருந்திருப்பதை பல சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறேன். சென்ற சில மாதங்களுக்கு முன் கொழும்பு மருத்துவ மனையில் திரு.சிவமகாராசா அனுமதிக்கப்பட்ட நேரத்தில் நான் யாழ்பாணத்திலிருந்து வந்து பார்த்த பொழுது கண்கள் கலங்கிப்போனோம். அந்த உணர்வுகள் எப்பொழுதும் உறங்காதிருக்கும் என்று நம்புகின்றேன்.

திரு.சிவமகாராசா அன்று முதல் இன்று வரை தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருந்த பொழுதிலும் பொதுவாழ்வில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தந்தை செல்வாவின் கொள்கைவழி வழுவாத இலட்சியப் பற்றாளனாக வாழ்ந்து, எம் மண்ணில் தமிழ் மக்களின் ஒரு தலைமகனாக உயர்ந்து நிற்கின்றார். அவர் வாழ்க. என் இதயம் நிறைந்த நல் வாழ்த்துக்களை என்றும் சமர்ப்பித்து நிற்கின்றேன்.

அன்புடன்
மாவை சோ. சேனாதிராசா.

உ

# யாழ் அரசாங்க அதிபர்
# திரு. க. சண்முகநாதன் அவர்களின்
# ஆசிச் செய்தி.

கூட்டுறவின் வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சியாகும். இக்கூட்டுறவு ஒருங்கிணைக்கப்பட்டு சேர்ந்து ஈடுபடும் பொழுது மக்கள் நிறைவான பலன் பெறுகின்றனர். கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுறவுச் சேவையில் தன்னை ஈடுபடுத்தி கூட்டுறவுக்காக உழைத்தவர் திரு.சிவமகாராஜா அவர்கள். எந்தவொரு தன்னலமும் கருதாது மக்களின் சேவையே மகேசனின் சேவையெனப் பணியாற்றினார்.

திரு. சிவமகாராஜா அவர்கள் இரண்டுமுறை பாராளுமன்றத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டார். மறைந்த தந்தை செல்வா அவர்களின் வழியில் நடப்பதையே தான் கொண்ட கொள்கையாக இருந்தார். அவர் எங்கு சென்றாலும் மக்களுக்காக சேவையாற்றக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர்.

அவர் எங்கு சென்றாலும் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

க. சண்முகநாதன்.

# யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி

கூட்டுறவாளர் திரு. சி. சிவமகாராசா (பா.உ) அவர்களுக்குச் சேவைநலன் பாராட்டுவிழா நடத்திச் சிறப்பு மலரும் வெளியிடவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

சிவமகாராசா அவர்கள் நாடறிந்த சிறந்த தலைமைத்துவம் படைத்த கூட்டுறவாளர் தூய்மையான, எளிமையான, வாழ்வு வாழ்பவர். மக்கள் சேவையே தன் இலட்சியம் எனக்கொண்டு அயராது உழைத்து வருபவர்.

சொல்லொணாத்தடைகளும் துன்பதுயரங்களும் நிறைந்த போர்க்காலச் சூழ்நிலையிலும் இந்த மண்ணை விட்டகலாது, அஞ்சாது நின்று மக்கள் சேவை செய்து வருபவர்.

கூட்டுறவின் உண்மைத் தத்துவத்தை நன்கு உணர்ந்து அமைதியான, ஆழமான, தூரநோக்குடன் பணிசெய்து வருகின்றார். அண்மையில் பாராளுமன்றத்தில் அவர் கூட்டுறவு மறுசீரமைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி ஆற்றிய உரை அவருடைய ஆளுமையை எல்லாரும் அறியவைத்துள்ளது.

யாழ். குடா நாட்டில் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் வலி. வடக்கைச் சேர்ந்த இவர் மக்கள் தொண்டனாக மலர்ந்து, அந்த மக்களாலே பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமை இவருடைய சேவைக்குக் கிடைத்த விருது எனலாம். பொதுவாக இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் விடிவுக்கும், சிறப்பாக வலிவடக்கின் மீள் அமைப்புக்கும் தன்பங்களிப்பைச் செய்வார் என்ற நம்பிக்கையுடன் அவர்பணி தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

" தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் உண்மையின்
உண்டாலம்ம இவ்வுலகு - புறநானூறு"

பொ. பாலசுந்தரம்பிள்ளை

# யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்
# திரு. து. வைத்திலிங்கம் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், தற்சமயம் பாராளுமன்ற உறுப்பினராகவும் விளங்கும் கௌரவ பா. உ. திரு. சிவமகாராசா அவர்கள் ஒரு மக்கள் தொண்டன். தன்னை கூட்டுறவுத்துறையுடன் இணைத்துக் கொண்ட பெருந்தகையாளன். 1987 ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் இங்கு வந்தபோது பெரும்பாலான மக்கள் வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து சங்கானையிலே தங்கியிருந்தனர். அந்தநேரத்திலே நிவாரணப் பொருள்களை பெற்றுக்கொடுப்பதற்கு அவரை நாடியபோது தேவையான பிளாஸ்ரிக் கூடைகளை இலவசமாகத் தந்ததுடன் சிறுபிள்ளைகளுக்கான பிடவைகளைத் தனது சொந்த செலவிலேயே வாங்கித்தந்தார்.

எந்நேரமும் அவருடன் கூடுதலான மக்கள் இணைந்திருப்பார்கள். அப்படியான மக்கள் சேவையாளன். " கூட்டுறவு என்றால் சிவமகாராசா, சிவமகாராசா என்றால் கூட்டுறவு" என்று சொல்லுமளவுக்கு கூட்டுறவுடன் இணைந்து தனது சேவையைச் செய்தார். தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்துடன் தன்னை இணைத்து பல ஆண்டு காலமாக மக்களுக்கு சிறந்த சேவை செய்து வருகிறார்.

தந்தை செல்வா காட்டிய வழியிலே அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்தித் தனது பணியை செய்து வருகிறார். அவரது சேவையை வலிவடக்கு மக்கள் நன்கு அறிவார்கள். அவரது சேவை தொடர்ந்தும் மக்களுக்கு கிடைக்க அவருக்கு நீண்ட ஆயுளையும் சுபீட்சத்தையும் எல்லாம் வல்ல இறைவன் கொடுக்கவேண்டுமென வேண்டுகின்றேன்.

து. வைத்திலிங்கம்.

# வலிவடக்கு
# பிரதேசச் செயலர் (மேலதிக அரசாங்க அதிபர்)
# திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

**'பல்லாண்டு வாழ்க'**

வலிகாமம் வடக்கில் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வாழும் இடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் பல அமைப்புக்களின் தலைவராக விளங்கி, நீண்டகாலம் திறம்பட செயலாற்றியதுடன் தற்பொழுது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டு வலிகாமம் வடக்கிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

கடந்த காலங்களில் அவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவராகவும் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் தெல்லிப்பழை கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவராகவும் நீண்ட காலம் சேவையாற்றி ஆளுமையோடு இம்மண்ணிற்கு மெருகூட்டியதுடன் பொதுநல சேவைகளிலும் ஈடுபட்டுவந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

அவர் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின் மக்களுக்கு முழுமையாகச் சேவையாற்ற வேண்டி மேற்படி தலைமைப் பதவிகளிலிருந்து விடைபெறுவது நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை. அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வலிகாமம் வடக்கினதும் மக்களினதும் மீள்குடியேற்றத்திற்கும் புனரமைப்பிற்கும் புனர்வாழ்விற்கும் மண்பற்றோடு இரண்டறக்கலந்து சேவையாற்ற வேண்டுமென விரும்புவதுடன் அவர் மென்மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து பல்லோரும் வாழ இனிது தொண்டாற்ற வேண்டுமெனப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திருமதி . ப. திலகநாயகம்.

## கல்விஅமைச்சு கல்வி சேவைகள்
## மேலதிகச் செயலாளர்
## திரு. எஸ். தில்லைநடராசா அவர்களின்
# வாழ்த்து

### ஆக்க உணர்வும் ஆற்றல் திறனும் மிக்க தலைவன்

வட பகுதியில் கூட்டுறவு அமைப்புகள் ஆரம்ப காலம் முதல் எல்லோரும் பாராட்டத்தக்க வகையில் பன்மடங்கு சிறப்பாக சேவையாற்றியதை எளிதாக மறந்து விட முடியாது. அவ்வப் போது கூட்டுறவு பல்வேறு விதமான நெருக்கடிகள் நேர்ந்த போதும் கூட்டுறவுச் சங்கங்களின் மகத்துவமான பணிகளால் மக்கள் வாழமுடிந்தது: வாழ முடிகிறது என்பதும் மனங்கொள்ளத்தக்க உண்மையே.

கூட்டுறவுப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துத் தலைமை தாங்கியவர்களுள் திரு. எஸ். சிவமகாராசாவும் குறிப்பிடத்தக்கவர். குறிப்பாக எண்பதுகள், தொண்ணூறுகளில் தென்னிலங்கையை சேர்ந்தோரும் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றியும் அதன் தலைவராக கடமையாற்றிய திரு. எஸ். சிவமகாராசாவைப் பற்றியும் விதந்து பேசியதைப் பல முறை கேட்டிருக்கின்றேன். கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சேவையாற்றுவதற்கு நான் வருவதற்கு முன்பாகவும் கூட்டுறவுத் திணைக்களத்தில் சேவையாற்றிக் கொண்டிருந்த போதும் கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சென்ற பின்பும் பல சந்தர்ப்பங்களில் திரு. சிவமகாராசா அவர்களுடன் பழகக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

இரண்டு தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டாலும் அவர் மிகவும் எளிமையான பண்புகளை உடையவராகவும் கூட்டுறவுப் பணிகள் பற்றியே சதா சிந்தித்துக்கொண்டு இருப்பவராகவும் சிந்தனையின் விளைவாக நல்லவற்றை தேடி அறிந்து அவற்றை செயற்படுத்தும் ஆக்க உணர்வு , ஆற்றல் திறன் மிக்க செயல் வீரனாக இனங்கண்டிருக்கிறேன்.

இவரது பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

எஸ். தில்லைநடராசா

# யாழ். பல்கலைக்கழக உயர்பட்ட ஆய்வுபீடப் பீடாதிபதி
# பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்
# வாழ்த்துரை.

மாண்புமிகு திரு. சிவமகாராசாவை ஒரு சிறந்த கூட்டுறவாளராகவே முதலில் நான் அறிந்து கொண்டேன். தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கம் என்றால், திரு. சிவமகாராசாவை நினைக்காமல் இருக்க முடியாது. பல ஆண்டுகளாக இச் சேவையிலே அவர் ஈடுபட்டிருந்த காரணத்தாலே அவர் ஒரு மக்கள் சேவையாளராக ஆகிவிட்டார். மக்களும் அதனை ஏற்றுள்ளார்கள் என்பதற்கு அவருடைய பாராளுமன்ற உறுப்புரிமை சான்று சொல்கின்றது.

துன்பங்கள் துயரங்கள் வந்தபோது துர்க்கை அம்பாளின் அடித்தலங்களே தஞ்சமெனச் சில காலம் அவர் வாழ்ந்தவர். எந்த நேரத்தில் எப்படி வாழ வேண்டுமென்பதை அறிந்தவர். திரு. சிவமகாராசா ஒரு நல்ல கருத்துக்களைத் தன்னுடைய பட்டறிவினூடாகப் பல இடங்களிலும் சிறப்பாக எடுத்துக் கூறுபவர். ஆனால், தன்னுடைய பேச்சினை எல்லா இடத்திலும் வெளிப்படுத்துபவரல்ல. காலமறிந்து இடமறிந்து ஒழுகும் ஆற்றலுடையவர் அவர்.

மிகச் சிறந்த ஒரு கூட்டுறவாளருக்கு ஒரு மாட்சிவிதப்பு மலர் ஒன்று வெளியிடுவது பொருத்தமானதே. பல நற்குணங்களையுடைய ஒரு பண்பாளருடைய மாட்சி விதந்துரைக்க வேண்டியதே. இச்சிறப்பு மலருக்கு இச்சிறிய வாழ்த்துரையை எழுதுவதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அருள்மிகு துர்க்காதேவி அருளினால் திரு. சிவமகாராசா மேலும் மாண்புற வேண்டுமென வாழ்த்தி இதனை நிறைவு செய்கிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்.

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (வ.கி)
## திரு. ஆ. சுப்பிரமணியசர்மா அவர்களின்
# ஆசிச் செய்தி

கௌரவ சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் கூட்டுறவின் வளர்ச்சிக்கு கடந்த வருடங்களுக்கு மேலாக அருந் தொண்டாற்றிய சேவையாளன். பல படிநிலைகளில் கூட்டுறவுத்துறைக்காற்றிய சேவை மறக்கற்பாலது. இவரது சேவை நலன் பாராட்டு விழாவின்போது இவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர் சகல வழிகளிலும் சிறப்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வேண்டுமென வாழ்துகின்றேன்.

ஆ.சுப்பிரமணியசர்மா.

## யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
## திரு. செ. கு. சண்முகநாதன் அவர்களின்
# வாழ்த்து

திரு.சி.சிவமகாராசா அவர்கள் கூட்டுறவுத் துறையில் மிக நீண்ட காலமாக தன்னை ஈடுபடுத்தி அதன் மூலமாக மக்கள் பணியாற்றியவர். இவரது தலைமையின் கீழ் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் "கூட்டுறவுக்கோர் அறிமுகம் " என்ற நூலினை வெளியிட்டதன் மூலம் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிப் போக்கில் ஓர் முக்கிய இடத்தை பெற்றுள்ளது.

திரு.சி.சிவமகாராசா அவர்களின் மக்கள் சேவை அவரை பாராளுமன்ற உறுப்பினர் என்ற ஸ்தானத்திற்கு உயர்த்தியுள்ளமை அவரின் பொதுசன அணுகுமுறையின் வெற்றி என்றே கொள்ளல் வேண்டும். அவரின் மக்கள் சேவை தொடர எமது நல் ஆசிகள் பல.

ச.கு.சண்முகநாதன்

# கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப.தெ)
# திரு.சு.கணேசமூர்த்தி அவர்களின்
# ஆசிச்செய்தி

கூட்டுறவாளராகச் சேவையாற்றி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. சின்னத்தம்பி சிவமகாராஜா அவர்களின் பொதுச்சேவையினைப் பாராட்டி பொதுமக்களால் எடுக்கப்படும் விழா நிகழ்விற்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கூட்டுறவு அமைப்புக்களை தற்போதைய சூழ்நிலையில்பலம் பொருந்திய நிறுவனங்களாக ஆக்கும் பொருட்டு என்றும் அதற்காக உழைப்பீர்கள் என்பது எனது நம்பிக்கையாகும். மக்களுக்காக தொடர்ந்து சேவையாற்றி சகல நலன்களும் பெற்று நீண்டகாலம் வாழ்கவென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சு.கணேசமூர்த்தி

# இளவாலை - ஓய்வு பெற்ற அதிபர் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களின்

# வாழ்த்து

## மகாராஜனாகி வாழ்க

சிந்தனைச் சிற்பி சேய்த்தாய் வருவதைச் சொல்ல வல்ல
சுந்தர வுளத்துத் தந்தை தொழுதகை செல்வா பின்னாய்
நின்றனை நிழல தாகி நின்னலம் நினைந்தும் பாராய்
செந்திரு திகழுஞ் செல்வ சிவமகா ராஜ வாழி.

கூட்டுற வாளன் என்னுங் கொள்கையிற் குன்றம் ஆனாய்
வேட்டுவந் தணைந்து நின்னை வேண்டினர் விளைவு காண
ஊட்டினை உதவி நன்னீர் ஊர்நடு நிலைய தானாய்
நாட்டினர் நாவில் வாழும் நம்மகா ராஜ வாழி.

பலபல விற்குஞ் சாலை பல்லினத் தொழில்செய் கூடம்
அலகில தறஞ்சார் கல்வி அமைவிடஞ் சமைத்து வித்தை
குலவிட முனதாஞ் செவ்வி குழவிகள் பெறவும் வைத்தாய்
இலையுனைப் புகழ வார்த்தை எம்மகா ராஜ வாழி.

கல்விசார் நிறுவ னங்கள் கலைவளர் கவின்கூ டங்கள்
சொல்லினாற் சொல்ல வொண்ணாத் தொழும்நம தால யங்கள்
எல்லையி லேற்றங் காண இருந்தனை தலைமை பெற்றுத்
தெல்லியூர்ச் சங்க மானாய் சிவமகா ராஜ வாழி

சேவையின் முதிர்வு கண்டு செயத்தகும் இடமும் ஓர்ந்து
மாவையின் செல்வன் தந்தை மதித்துறை நகுலை தீர்த்தம்
ஆவயின் தேவை காண அமர்ந்தனை ஆளும் மன்றில்
தேவையை நிறைத்துச் செல்வ மகாராஜ னாகி வாழ்க.

பண்டிதர். சி. அப்புத்துரை

# IN APPRECIATION OF A BALANCE LEADER

**Jayantha C.T. Bulumulle**
**Municipal Commissioner.**

During the period of 1979 - 1984 when implementing the activities of the women's consumer Education and Information project through co - operatives in Sri lanka, I as the Project Director had the opportunity of working very closely with Hon. S.Sivamaharajah, then president of Tellippalai MPCS Ltd. Tellippalai Co - operative Society was one of the pioneering Societies participated in the project, aimed at enhancing women's participation in co - operative activities and the total development of women.

I am glad to that hear the Co- operators in Jaffna Peninsula is planning to celebrate 25 years of dedicated service of Hon. Sivamaharajah to the Co - operative movement especially to Jaffna district, and as a Member of the National Co - operative Council, to the Country as a whole. Hon. Sivamaharajah's commitment towards the successful implementation of the project activities, contributed immencely providing correct leader ship to its activities.

I can recollect the happy memories of active participation of Tellippalai Co - operative Society's Board of Directors and General manager downwards due to his able leadership. Without any extrageration. I am happy to note then president Mr. Sivamaharajah was the key person behind all the good activities carried out by the project in the area.

During the project period, through the Co - operative Society, variety of activities were carried out for the development of women members. Such as, Nutrution and Family Health Programmes Consumer Protection activities, Social and Cultural Programmes, Income Generation activities, Savings and Leadership development. Tellippalai Co - operative Society set an example to other Twenty Nine Pilot Societies which were situated all over the Country.

Similarly he gave the leadership and the guidance to other Co - operative Societies, in Jaffna District through the District Co - operative Council to spread similar activities in other areas, The project Staff including myself could learn and gained valuable experiences by working with him. When we heard Hon. Sivamaharajah has been elected as a Member of the Parliament, the highest legislation in the Country, we were delighted, because our country needs such committed leaders at this hour.

I wish Hon. Sivamaharajah every success and good health and hope his contributions will enhance the better understanding among different communities in Sri Lanka

# Mr.S.Sivamaharajah - Co-operative leader from the north.

Lionel Samarasinghe
President
National Co-operative Council of Sri Lanka.
14th June 2001.

Mr.S.Sivamaharajah, Hon. Member of Parliament is reaching 25 years of Co-operative service. We have association with him during his entire career, and worked together for the development of the Co-operative Movement of Sri Lanka. He started his Co-operative career from his village in Tellipalai during 1970s, and became the president of the Multi Purpose Co-operative Society, which he retained until he entered the parliament.

I have met him in his village as well as in Colombo, and found that he retained the identity with all concerned. We worked together as contemporaries in the District Co-operative Councils, when he was the president of District Cooperative Council, Jaffna. He tried his best to ensure improvement of the Co-operative societies, even at the time of conflicts, and was concerned about the welfare of his members. He also tried his best to obtain support to rebuild the premises the Co-operatives have lost, and negotiated for rehabilitation. With trying circumstances he served the people of Jaffna and other Northern areas with a true spirit of a coöperative leader.

Mr.Sivamaharajah served in the National Co-operative Council of Sri Lanka as aboard member in two occasions which was a great strength to us, not only to have an ethnic balance, but also to receive contributions from his wide experience for the betterment of the movement. In some occasions he represented the Co-operative movement of Sri Lanka in the international forums.

On behalf of the National Cooperative Council and the Co-operative movement of Sri Lanka, I take this opportunity to congratulate him for the achievements he has received in appreciation for his contribution to the Co-operative movement. I have no doubt that he would serve the interest of Co-operatives in the parliament too. We wish good health and strength to serve the people of Sri Lanka some more years to come.

Dear Co-operators,

Though it has been a short trip I have learnt a lot from your activities. I am impressed in the way you give support to women. This is something I shall take back to Africa.

Mrs.M.Zakia
Training Cificer
I.CA.Reginal Office,
Tanzania.

16th June 1982

I am very happy of the opportunity of observing the work of the society. From what we heard and saw it si obvious that the society is doing very well. The alert membership, dedicated leadership and efficient management have been responsible for the achievement of the society. As a Co-operator I am happy of the progress and wish society all success in the future too.

Lionel Gunawardana
Jt.Director I.C.A New Delhi.

23 July 1982

Visited Tellppalai M.P.C.S and inspected some of the pradestikas. Held a meeting with th Jaffna District Producers Co-operative Society in the premises of the society. Later attended a Womens' committee show which was quite interesting. The marriage taken place between the membership and the society is commendable. Wish all the best.

K.A.FERNANDO
C.C.D. & R.C.S.

Dear Friends and Co-operators,

This is too short a visit. I would have liked to spend more time with you to know about your activities. But from reports and documents I have read, I understand that your work has been well received. Good luck.

Folke Dubell
Education and Research Consultan
Swedish Co-operative Centre,
Stockholm, Sweden.

# வடக்கு கிழக்கு மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி கைத்தொழில் அமைச்சு செயலாளர் திரு.க.பரமலிங்கம் அவர்களின்

# வாழ்த்து

இலங்கையில் கூட்டுறவுத்துறை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து யாழ் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுக்கு கூட்டுறவுத்துறையின் செயல்பாடுகள் ஊடாக முன்மாதிரியான மாவட்டமாக இருந்து வந்துள்ளது. இதற்கு காரணம் யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னைய கூட்டுறவாளர்களினதும், கூட்டுறவுப்பணியாளர்களினதும் பங்களிப்பும், கூட்டுறவு திணைக்களத்தின் சிறந்த வழிகாட்டல்களுமே இவ்வாறு யாழ் மாவட்டத்தின் கூட்டுறவு வளர்ச்சிக்கு சிறந்து விளங்கிய கூட்டுறவாளர்களுள் ஒருவராக அன்பர் திரு. சி. சிவமகாராசா அவர்களை குறிப்பிடலாம்.

1979ம் ஆண்டு யாழ் மாவட்ட கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளராக நான் பொறுப்பேற்றதில் இருந்து திரு.சி.சிவமகாராசா அவர்களுடன் நெருங்கி பழகுகின்ற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அன்றில் இருந்து 1989ம் ஆண்டு நான் கமநலசேவை ஆணையாளராக திருகோணமலையில் பதவி ஏற்கும் வரை விவசாயத்துறை, கூட்டுறவுத்துறை என்பவை தொடர்பாக திரு. சி. சிவமகாராசா அவர்களுடனும், அவர் தலைமை தாங்கி செயல்படுத்தி வந்த தெல்லிப்பழை பலநோக்க கூட்டுறவுச்சங்கத்துடனும் கடமையாற்றுகின்ற வாய்ப்பு கிடைத்தது. அந்த உத்தியோக ரீதியாக இருந்த தொடர்பு காலக்கிரமத்தில் அவர்களுடனான நட்பிற்கு வழிசமைத்தது.

திரு.சி.சிவமகாராசா எளிமையான குணநலமும், எவரையும் நோகாது உரையாடும் பண்பும் இயல்பாகவே அமைந்த ஒருவராவார். தான் பொறுப்பேற்ற பணியை அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாக நிறைவேற்றுபவர். விடாமுயற்சியும், தன்னோடு இணைந்த ஏனையோரை தட்டிக்கொடுத்து நடாத்துகின்ற சிறந்த தலைமைப் பண்பும் கொண்டவராவார்.
இவரது சேவை கூட்டுறவு சேவையுடன் மட்டும் அல்லாமல் படிப்படியாக ஏனைய சமூக அபிவிருத்தி சார்ந்த துறையுடன் விஸ்தரிக்க தொடங்கியது. இதன் காரணமாக இவர் பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்ற ஒருவராக திகழ்கின்றார்.

இவரது சேவை தெல்லிப்பழை பிரதேசத்துடன் நின்று விடாது மாவட்டக் கூட்டுறவுச்சபை, தேசிய கூட்டுறவுச்சபை என்பவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் இவர் தேசிய கூட்டுறவுச் சபைப் பணிப்பாளராகவும் புடம் போட்டு காட்டப்பட்டுள்ளார். இவர் தற்போதைய பாராளுமன்றத்திலும் அங்கத்தவராக இருந்துள்ளார். இதன் மூலம் இவர் நாட்டின் அதி உயர் பீடத்திலும் அங்கத்தவராக இருந்து அரும்பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்கும் பாராட்டிற்கும் உரியதாகும்.

கூட்டுறவுத்துறையுடன் சமுதாய சமூக பணிகளுக்கு 25 ஆண்டுகளுக்கு மேலாக தன்னை அர்பணித்த இவருக்கு பாராட்டு விழா எடுப்பது கூட்டுறவுக்கு விழா எடுப்பதாக் கொள்ளப்படவேண்டும்.

திரு.சி.சிவமகாராசா அவர்கள் இல்வாழ்வில் பிரமச்சாரியாவர். அவருக்கு வாழ்க்கைத் துணையாக கூட்டுறவுத்துறை அமைந்ததால் அவர் தனது இல்லாளாக கூட்டுறவு என்னும் நல்லாளைத் தனதாக்கிக் கொண்டார் என்றால் அது மிகையாகாது.

இவரது பணி மேலும் உயர்வதற்கு எனது நல்லாசிகள்.

க. பரமலிங்கம்
செயலாளர்,
மாகாண பொதுநிர்வாக, உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி,
வீதி அபிவிருத்திக் கைத்தொழில் அமைச்சு வ.கி.மாகாணசபை
திருகோணமலை.

# யாழ். மாநகர முதல்வர்
# திரு. நடராஜா இரவிராஜ் அவர்களின்
# வாழ்த்து

சிறந்த கண்ணியம் மிக்க எமது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அண்ணன் சி. சிவமகாராசா அவர்கள் கூட்டுறவில் தன்னை இணைத்துக் கொண்ட காலத்தில் இருந்து மக்கள் சேவையில் தன்னை அர்ப்பணித்து சேவை செய்த உன்னதமிக்க சேவையாளன். செயல் வீரர்.

தான் தலைமை தாங்கிய தெல்லிப்பழை பல நோ.கூ சங்கத்தின் மூலம் மக்களுக்கு சேவையை வழங்கியது மாத்திரமின்றி யாழ் மாவட்டத்தின் கூட்டுறவை தனித்து நின்று தன்னாலான முயற்சியினால் உயர்த்தி முன் நிலைக்கு கொண்டு வந்த கூட்டுறவாளன்.

கூட்டுறவில் மாத்திரமின்றி சமய சமூக பணிகளின் முன்னோடி, தொண்டுஉள்ளமும், செயலாற்றும் திறனும் துணிவும் கொண்ட ஓர் மக்கள் சேவையாளன். நண்பர்களுக்கு உதவும் பண்பாளன்.

கடும் உழைப்பாலும் விடா ஊக்கத்தாலும், நெருக்கடி மிகுந்த இக்காலப்பகுதியில் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன

“கூட்டுறவின் ஒளிவிளக்கு
மக்கள் சேவையின் ஒளிவிளக்கு
சமயப் பணியின் ஒளிவிளக்கு”


என்றும் ஒளி வீச அவரது சேவை தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி.

ந. இரவிராஜ்
யாழ்.மாநகர முதல்வர்.

தெல்லிப்பழை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம்

1982



சங்க ஊழியர்களுடன் சங்கத்தலைவர்

# திரு.சி.சிவமகாராசா அவர்களின் சமூக சேவைக் குறிப்புகள்

1938.06.28 சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியரின் மூத்தமகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வி கொல்லங்காட்டி சைவவித்தியாசாலை, உயர்கல்வி – தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி.

1960 வதுகளில் மாவிட்டபுரம் கி.மு. சங்கச் செயலாளர். மாவை கொல்லங்கலட்டி அருள்நெறிக்கழக அமைப்பாளர்,மாவை கொல்லங்கலட்டி ச.ச.நிலையச் செயலாளர்.

1968 – 1971 மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்க தலைவர்(மாவிட்டபுரம் ப.நோ.கூ. சங்கம்).

1968 – 1971 தெல்லிப்பழைக் கிராமசபை தற்காலிக லிகிதர்

1971 – 1998 தெல்லிப்பழைக் கிராமசபை நூலக உதவியாளர்.

1978 – 1979 தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க நியமனத்தலைவர்.

1979 – 1991 தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தெரிவுத்தலைவர்

1981 வலி . வடக்கு பிரதேசசபைத்தலைவர்

1981 – 1989 ஸ்ரீலங்கா கூட்டுறவுச்சபை, யாழ். கிளைத்தலைவர்

1986 – வலிவடக்கு பிரசைகள் குழு ஒன்றியச் செயலாளர்

1986 – 1989 ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் சம்மேளனசபை பணிப்பாளர்.

1988 – 1991 வலிவடக்கு கால் நடை வளர்ப்போர் கூ.சங்கத்தலைவர்.

1989 – 1990 யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (சுயேச்சைக்குழு ஐ)

1989 – 1991 யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர்

1981 – 1991 யாழ்.மாவட்ட விளைபொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர்.

1989 – 199 ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபைப் பணிப்பாளர்.

1989 வலிவடக்குப் புனர்வாழ்வுக்கழகச் செயலாளர்.

1992 வலிவடக்குச் செஞ்சிலுவைச்சங்கத் துரித அங்கத்தவர்

1995 – 2000 வலி.வடக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தலைவர்.

1995 – 2000 வலி.வடக்கு கால் நடைவளர்ப்போர் கூ.சங்கத்தலைவர்

1996 – 2000 தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கத் தெரிவுத்தலைவர்

1997 தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை நியமனத்தலைவர்.

1997 வலிவடக்கு புனர்வாழ்வுக்கழகச் செயலாளர்

1998 – 2000 ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபைப் பணிப்பாளர்

2000 யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (தமிழர் விடுதலைக் கூட்டணி)

# கூட்டுறவாளர் சி.சிவமகாராசா

திரு. சி. தனபாலசிங்கம்
தலைவர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்.

### பிறப்பும் கல்வியும்

வலிகாமம் வடக்கில் சமூக சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்துள்ள பெருமைக்குரியவர் திரு.சி.சிவமகாராசா அவர்கள். இவர் சின்னத்தம்பி சுந்தரம் தம்பதி யினரின் மூத்த ஆண் மகனாகத் தந்தையின் ஊராகிய இளவாலையிற் பிறந்து தாயாரின் ஊராகிய கொல்லங்கலட்டியில் வளர்ந்தவர். கொல்லங் கலட்டி சைவ வித்தியா சாலையில் தன் ஆரம்பக் கல்வியைப் பெற்று உயர் கல்வியை மகாஜனக் கல்லூரியில் பெற்றார். அங்கு புகழ் பூத்த ஆசிரியர்களாக விளங்கிய எஸ்.நாகலிங்கம், கவிஞர் கதிரேசர்பிள்ளை, புலவர் சிவபாதசுந்தரனார் ஆகியோரிடம் கல்வி கற்றதன் பேறாகத் புலமைமிக்கவரானார். அத்துடன் இலக்கியம், நாடகம் மற்றும் கலைத்துறையிலும் அதிக ஈடுபாடும் இரசனையும் உடையவராக மலர்ந்தார்.

### உத்தியோகம்

தெல்லிப்பழைக் கிராம சபையில் 9.9.68 தொடக்கம் தற்காலிக லிகிதராக உத்தி யோகத்திலமர்ந்து 1.8.71 முதல் நூலக உதவியாளராகி 1998 வரை பதவி வகித்து ஓய்வூதியம் பெற்றார்.

சொந்த இடத்திலேயே உத்தியோகம் பார்த்ததால் இவருக்குச் சமூக சேவை செய்வதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது

### தொண்டுள்ளம்

இளமை முதலே சமய சமூக சேவையில் நாட்டங்கொண்ட இவர் தனது கிராமமாகிய கொல்லங்கலட்டியில் தொடங்கிய சமூக சேவையை வலி வடக்குப் பிரதேசம், யாழ். மாவட்டம், அகில இலங்கைத் தேசிய மட்டம் வரை விஸ்தரித்திருப்பதைக் காணமுடிகிறது.

அறுபதுகளில் மாவை கொல்லங்கலட்டி ச.ச.நிலையச் செயலாளராயும், மாவிட்டபுரம் கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளராயும் மாவை கொல்லங்கலட்டி அருள் நெறிக் கழக அமைப்பா ளராயும் இருந்து சேவை செய்தார். காலத்துக்குக் காலம் பல்வேறு பதவிகளில் இருந்து தனது கிராமத்திற்குச் செய்த சேவை இவரைப் பின்னாளில் தேசிய மட்டத்திற்கு உயர்த்தியது

மாவிட்டபுரம் கிராமோதய சபைத் தலைவராயிருந்து (1981) வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவராவதற்கும் அப்பதவி மூலம் பணி செய்வதற்கும் வாய்ப்பானது.

### கூட்டுறவுச் சேவை

1968 ஆம் ஆண்டில் மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத் தலைவராகக் கூட்டுறவுச் சேவையை ஆரம்பித்த இவர் தெல்லிப்பழைப் ப.நோ.கூ.சங்கத்தின் கொல்லங்கலட்டிக் கிளையி(கிளை இல.14) னூடாகப் பொதுச் சபை உறுப்பினராக ஆரம்ப காலம் முதல் (1972) இற்றைவரை (1973 இல் மட்டும் இல்லை) பணிபுரிந்து வரும் பெருமை இவருக் குண்டு. அத்துடன் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், 1978.02.20 தொடக்கம் தொடர்ந்து 1991.12.08 வரை தலைவராயும் மீண்டும் 1996.11.01 முதல் 2000.10.13 வரை தலைவராயும் இருந்த பெருமையுடையவர். ஏறக்குறையப் பதினெட்டு வருட காலம் தலைவராயிருந்து இந்த நாட்டின் தலை சிறந்த கூட்டுறவுச் சங்கமாக இதனை வழிநடத் தியமை யாவரும் அறிந்ததே. தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கம் என்றால் சிவமகாராசா, சிவமகாராசா என்றால் தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கம் என்று எல்லாரும் அறியும் அளவு பிரபல்யம் பெற்றமை இவரது சேவைக்குச் சான்று ஆகும்.

### மாவட்ட மட்டத்தில்

இவரது கூட்டுறவுச் சேவை தெல்லிப்ப ழைப் பிரதேசத்திலிருந்து யாழ் மாவட்டம் முழுவதும் விரிந்து பரந்தது யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முதலாவது தலை வராக(1989-1991) இருந்து அதனை வளர்த் தெடுத்தும் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் கிளைத் தலைவராக (1981 - 1989)இருந்தும் இயக்குனராக இருந்தும் செய்த சேவையும், யாழ் மாவட்ட விளை பொருள் உற்பத்திக் கூட்டுறவுச்

சங்க சமாசத்தின் முதலாவது தலைவராக (1982 1991)இருந்து ஆற்றிய அளப்பரும் சாதனைகளும் மாவட்டமட்டத்தில் இவரது சேவைக்குச் சான்றுபகர்வனவாகும்.

## தேசிய மட்டத்தில்

யாழ்.மாவட்ட மட்டத்தில் செய்த சேவையின் சிறப்பால் இவரது கூட்டுறவுச் சேவை நாடளாவிய மட்டத்தில் தேசிய மட்டச் சேவையாக மலர்ந்தது மட்டுமன்றித் தேசிய முன்னோடியாகவும் இவரை அறிமுகம் செய்தது எனலாம்.

ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் சம்மேளனப் பணிப்பாளர் சபை உறுப்பினராயும், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைப்பணிப்பாளராய் (1989 - 1991)ஒரு முறை மட்டுமல்ல மீண்டும் (1998 - 2000) பணிபுரிய வைத்ததும் இவரது திறமைக்கும் சேவைக்கும் கிடைத்த பரிசு எனலாம்.

"கூட்டுறவுக்கோர் அறிமுகம்" எனும் நூல் இவர் தலைமையில் தெல்லிப்பழைப் ப.நோ.கூ. சங்கத்தின் வெளியீடாக வந்தமை தேசிய மட்டத்தில் பெருமை சேர்த்துள்ளமை வரலாற்றுச் செய்தியாகும்.

## பன்முகப்பணிகள்

போர் அனர்த்தங்களால் துன்புற்ற மக்களின் துயர் துடைப்பதற்காக உருவாக்கப்பட்ட வலிவடக்குப் பிரசைகள் குழு ஒன்றியச் செயலாளராயிருந்தும் (1986) வலிவடக்குப் புனர்வாழ்வுக் கழகத்தில் செயலாளராய் 1989இலும் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பின்பும் (1997) மக்கள் துயர்தீர்த்த சேவை மகத்தானது.

தனது கூட்டுறவுச் சேவையுடன் சமய,கலை இலக்கியப் பணிகளிலும் பெரும் பங்காற்றிவருவதும் குறிப்பிடத்தக்கது. தெல்லிப் பழைக் கலை இலக் கியக்கழகப் போஷகராயும், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அறநிதியசபை உறுப்பினராயும் இருந்து செய்யும் அரும் பெருஞ் சேவை இதற்குச் சான்றாகும்.

## கால்நடை வளர்ப்போர் சங்கத்தில்

வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவராயிருந்து (1988 - 1991) அதனைத் திறன்பட நெறிப்படுத்தி யாழ் மாவட்டத்தில் முன்னணிச் சங்கமாக வளர்த்த சேவை மெச்சத்தக்கது ஆகும். பால் விற்பனை, கால்நடைத் தீவன உற்பத்தி, நல்லினக் கால்நடை விருத்தி, கால்நடைவளர்ப்போர் கடனுதவி முதலான பன்முகப் பணிகளின் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு இச் சங்கம் ஆற்றிய பங்களிப்பு காலத்தினாற் செய்த உதவி எனலாம்.

மீண்டும் தலைவராகிப் (1995 - 2000) பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகும் வரை இவர் சேவை செய்தமை பயனாளிகளின் நன்றிக்குரியதாகும்.

## செஞ்சிலுவைச் சங்கத்தில்

எண்ணில்லாத வகைகளில் பாதிப்புக் குள்ளான வலி.வடக்கு மக்களுக்கு அபயக்கரம் நீட்டி உதவிய வலிகாமம் வடக்கு செஞ்சிலுவைச் சங்கத்தில் 1992 முதல் துரித அங்கத்தவராயும், பின் தலைவராயும் (1995 - 2000) ஆயுட்கால அங்கத்தவராயும் இருந்து பணியாற்றியுள்ளார்.

வீடில்லாமக்களுக்கு வீமன்காமம் வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடமைத்துக் கொடுத்ததும், இந்திய இராணுவ காலத்தில் உலர் உணவு நிவாரண விநியோகத்தைப் பொறுப்பேற்று பாதிக்கப்பட்டோர்க்கு வழங்கியமையும் மறக்க முடியாத பெரும் பணிகள் ஆகும்.

## பாராளுமன்ற உறுப்பினர் பணி

தமிழ்மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பத்தையும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியையும் பாராளுமன்றத்தில் இடித்துரைப்பதன் மூலம் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் அறியும் படி செய்யவும், உலக நாடுகளுக்கு எடுத்து ரைக்கவும் வாய்ப்பாக சுயேச்சைக்குழு 1இன் மூலம் 1989 பொதுத் தேர்தலிற் போட்டியிட்டு வெற்றிபெற்று (1989.7.7 - 1990ஏப்ரல்) பாராளுமன்ற உறுப்பினராகப் பணிபுரிந்தார்.

மீண்டும் 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றிபெற்று யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகப் பணிபுரிகிறார்.

மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செய்த சமய சமூக சேவை இவரை எவ்வித சிரமமுமின்றிப் பாராளுமன்ற உறுப்பினராக்கியது எனில் மிகையாகாது.

# 'ஒப்பற்ற சமூகத் தொண்டன்'

சின்னத்தம்பி சிவமகாராசா கால் நூற்றாண்டு காலமாக வலிகாமம் மக்களுக்குத் தியாக அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவை நலம் பாராட்டு மலருக்கு எமது பாராட்டுகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வீட்டு வசதியில்லாத வறியவர்களுக்கு வீமங்காமம் தெல்லிப்பளையில் நோராட் (NORD) ஸ்தாபன உதவியுடன் மனித நேய வெளிப்பாடாக ஆயிரத்து தொளாயிரத்து எண்பதுகளில் வீடுகள் அமைத்துக் கொடுப் பதற்கு முன்னோடியாகச் செயற்பட்டார். அதன் பின் 1987இல் போரினாலும் அதன் பின் இந்திய அமைதிப் படை நடவக்கை காலத்திலும் இடம் பெயர்ந்து அல்லற் பட்ட மக்களுக்கு சுகாதார வசதிகளுடன் கூடிய நிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தூண்டு கோலாகச் செயற் பட்டார்.

1994 - 1995 இல் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி வடக்குப் பிரிவில் நிலவிய குழப்பமான நிலையில் அதன் தலைமைப் பதவியையேற்று தமது சாதுரியத் தாலும் தூர நோக்குடைய திட்ட நடவடிக்கைகள் மூலமும், சபையை சீரமைத்து அதன் பிரகாசமான பெருமை தரும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தார். அவர் தலைவராக கடமையேற்ற கால முதல் 2000 யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானதன் காரணமாகத் தாம் பதவி விலகும் வரை அயராத உழைப்பினால் இ.செ.சி. சங்க யாழ் கிளை, சர்வதேச செஞ்சிலு வைக்குழு, யாழ் கிளை ஆகியவற்றின் ஊடாக உதவியற்ற ஏழை மக்களுக்கு உணவு உறைவிடம் வைத்திய சேவை வழங்கவும் இடம் பெயர்ந்த வருக்கு நிவாரணம் பெறுவதற்கும் உதவி செய்துள்ளார்.

கூட்டுறவு இயக்கம் அவருடைய மக்கள் சேவைக்கு அடித்தளமாக அமைந்து, அவர் அத்துறையில் ஆற்றிய நற்பணிகள், அவரை தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்தமை அவரது சேவைக்கு மணி மகுடமாக அமைந்துள்ளது.

அவரது சிந்தனைகளும் செயற்பாடு களும் எந்தப் பிரச்சினையை அணுகும் போதும் எவருடைய உணர்வுகளையும் பாதிக்காத முறையில் வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதாகவே அமைந்துள்ளமை கவனிக்கப் பாலது. இதுவே அன்னாரது சமூக சேவையின் அதி உயர்ந்த உயர்வுக்கு அடிப்படையாக அமைந்தது.

அன்னார் நற் பண்பாளனாகவும், சமுதாய சமூக பணியாளனாகவும், உண்மை யுள்ள அரசியல் வாதியாகவும் திகழ்வதைக் காண்பது எமக்கு மகிழ்தலைத் தருகிறது.

அன்னார் ஆயுள் ஆரோக்கியத்துடன் பல்லாண்டுகள் நீடுழி வாழ இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

வாழிய பெருமை நீ !

ஏ.சீ. விஜயராசசிங்கம்
தலைவர்,
இ.செ.சி.சங்கம் வலி வடக்குப்பிரிவு

# எங்கள் வழிகாட்டி

உயர்திரு.சி.சிவமகாராசா, நாடாளுமன்ற உறுப்பினர், தனது இளம் பராயத்திலிருந்தே திருப்பணிகளிலும், பொதுப் பணிகளிலும் ஈடுபாடுடையவராக திகழ்ந்தார். குறிப்பாக தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயப் பணிகளில் அதிக ஈடுபாடுடையவராக திகழ்ந்தார். தனது சுகதுக்கங்களை புறம் தள்ளி தனது முழு நேரத்தையும் செலவு செய்தார் என்றால் அது மிகையாகாது.

தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராக திரு.சி.சிவமகாராசா தெரிவு செய்யப் பட்ட பின் அச்சங்கத்தின் பொற்காலம் ஆரம்பித்த தெனலாம். பல புதுத்துறைகளில் சங்கத்தின் செயல்களை வலிவு படுத்தி சங்கத்தை வளர்த்து, யாழ் மாவட்டத்தில் முன்னணிச் சங்கமாக்கியதோடு அதன் எல்லைப் பரப்பிற்குள் வசித்து வந்த மக்களுக்கும் திறமையான சேவைகள் பலவற்றை வழங்கி கணிசமான தொகையினருக்கு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தி வந்ததின் காரணமாக, தெல்லிப் பளை ப.நோ.கூ சங்கம் என்றால் திரு.சி. சிவமகாராசா என்ற நினைவையே ஏற்படுத்தியது.

திரு.சி. சிவமகாராசாவின் பெருமுயற்சியில் 1988ம் ஆண்டு உருவாகியதுதான் எமது வலி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம். ஆரம்பகாலத்திலிருந்தே (ஒரு குறுகிய காலம் தவிர) இச்சங்கத்தின் தலைமையை ஏற்று அயராது உழைத்து பல தடைகளையும் இன்னல்களையும் தாண்டி இன்று யாழ் மாவட்டத்தில் இயங்கும். ஒரு சில முன்னணிக் கால்நடை வளர்ப்போர் சங்கங்களில் ஒன்றாக உயர்த்திய மைக்குரிய பெருமை திரு.சி.சிவமகாராசாவையே சாரும்.

1988 - 1990 ஆண்டுகளில் மாதாந்தம் ஒன்றுக்கு 7000 லீற்றர் பால் வரை சேகரித்து பண்ணையாளருக்கு சுமாரான வருமானத்தைத் தேடிக் கொடுத்து ஊக்குவித்து பாவனையாளர்களுக்கும் நியாயவிலையில் பால் கிடைக்கச் செய்தமையும் அவருடைய ஆற்றல்மிகு விடா முயற்சி யினாலே சாத்தியமானது.

அரச உயர் பதவிவகிப்பவர்களுடன் நல்லுறவை வளர்த்து தான் வழி நடத்தும் சங்கங்களிற்கு என்னென்ன உதவிகள் நலன்கள் பெறமுடியுமோ அவ்வற்றையெல்லாம் பெறுவதில் வல்லவர்.

இன்று இச்சங்கம் பின்வரும் துறைகளில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறமைக்கும் இதுவே காரணம்
இயற்கையாக ஆடு சினைப்படுத்தல்
கோழிக்குஞ்சு வளர்ப்பு
தீவன உற்பத்தி (பாவனைக்கும்,விற்பனைக்கும்) பொரிகருவிமூலம்-குஞ்சு பொரித்தல், கால்நடை மருந்து விற்பனை. கால்நடைகளுக்கு தடைமருந்து திணைக்களம் இருந்து எடுத்து வழங்கல், தீவனத்திற்குரிய உபபொருட்கள் தயாரித்து விற்பனை செய்தல், இறைச்சிக் கோழி விற்பனை,பால் சேகரிப்பு/ விற்பனை, உற்பத்தி பொருட்கள் தயாரிப்பு, ஐஸ்கிறீம், பைக்கற் பால்,சர்பத், தயிர், குளிர்பானங்கள், யூஸ், பாலில் ஆடை நீக்கி சுத்தமான நெய் தயாரித்தல்.

எல்லாப் பொது மக்களுடனும் இன்முகத்தோடு சமனாகப் பழகி அவர்களுடைய நன்மதிப்பை முழு அளவில் பெற்ற ஒரு தனி மனிதராக திகழ்கின்ற காரணத்திலேயே திரு.சி.சிவமகாராசா இருமுறை சிரமம் ஏதுமின்றி நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த தேர்தலில் அபேட்சகர்கள் கூட்டங்கள் போட்டு வீடுவீடாகத்திரிந்து வாக்கு கேட்ட வேளையில் திரு.சி.சிவமகாராசா பெரிதாகச்சிரமம் ஏதும் இன்றி, தான்போட்டியிடுவதையும், தனக்குரிய சின்னத்தையும் பத்திரிகைகள் மூலம் வாக்காளர்களுக்கு தெரிவு படுத்தியதுடன், மக்கள் அவரை அதி கூடிய விருப்பு வாக்கில் தெரிவு செய்து தங்கள் பெருமதிப்பைக் காட்டியுள்ளனர் திரு.சி.சிவமகாராசாவுக்கு மக்களிடமிருந்த செல்வாக்கை உணர்ந்து அரசியல் கட்சிகள் இவரைத் தங்கள் கட்சியில் அபேட்சகராக நிறுத்த போட்டி போட்டமை சிலரே அறிவர்.

திரு.சி.சிவமகாராசா நீண்டகாலம் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தனது மக்கள் தொண்டை தொடர வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**தலைவர்**
**வலி. வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.**
**தெல்லிப்பளை**

# கூட்டுறவுச் சேவையில் பற்றுறுதி உடைய பண்பாளர்

திரு.க.சிவசுப்பிரமணியம்
மாவட்டச் செயலாளர்
யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை.

அரிய பிறவியாகிய மானிடப் பிறவியை பெற்ற நாம் வாழும் காலத்தில் ஏனையோருக்கு பயனுள்ளவராக வாழ்வை அமைத்துக் கொள்வதே தர்மமாகும், இந்நிலையில் நின்று வாழ்பவர்களை மக்கள் போற்றத் தவறுவதும் இல்லை. இந்த வகையில் தனக்கென வாழாது தான் வாழும் சமூகத் திற்காக தன்னை அர்ப்பணித்து, சமூகத்திற்காக பணிகள் பல ஆற்றிவரும் மதிப்புக்குரிய திரு.சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் சேவையை கூட்டுறவாளர் போற்ற முன்வந்தமை மகிழ்ச்சிக்குரியதே.

மனித தர்மங்கள், மனிதப்பெறுமானங்கள். மனித கௌரவங்கள், மனித விழுமியங்கள் போன்றவை மதிக்கப்படுகின்ற சமூகத்தில் சமூகப் பணியை இலகுவாகவே ஆற்றமுடியும். ஆனால் இவை அனைத்தும் இன்று அவமதிக்கப்படுகின்ற அல்லது அருகிவருகின்ற சூழ்நிலையில் சமூகப் பணியை ஆற்றுகின்றவர்களும் அருகியே வருகி ன்றனர். எனினும் மக்கள் சேவையில் தம்மை அர்ப்பணித்து சுயநலமற்ற, ஆடம்பரமற்ற அமைதி யான, நியாயமான முறையில் சேவைகளை ஆற்றி வருவர்கள் சிலரும் எம்மத்தியில் இருக்கின்றார்கள். அத்தகைய சிலரில் ஒருவராகவே எமது மதிப்பிற்குரிய திரு.சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் காணப்படுகின்றார். அவர்கள் பல்வேறு சமூக, சமய நிறுவனங்களினூடாக தனது சேவையை விரிவுபடுத் திக் கொண்ட போதுங் கூட்டுறவுத்துறையே அவர்களின் அதிக ஈடுபாடு டைய அமைப்பாகும்.

திரு.சி.சிவமகாராசா அவர்களின் கால் நூற்றாண்டுகால கூட்டுறவுச் சேவையில் கூட்டுறவுத் துறையின் பணியாளன் என்ற வகையில் நான் அவருடன் இணைந்து பணி புரிந்த காரணத்தினால் அவரது கூட்டுறவுச் சேவையை நன்கு அறிந்தவன் என்ற வகையில் அவரது கூட்டுறவுப்பணிகளை இம்மலரில் குறிப்பிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதனுடன் கூடிப்பிறந்த ஒன்றாக, மனிதப் பண்பை மதிக்கின்ற ஒன்றாக, மனித மேம்பாட்டிற்கு உதவுகின்ற ஒன்றாக, மனித சமத்துவம் பேணுகின்ற ஒன்றாக, மனிதர்கள் என்ற நிலையில் இணைந்து இயங்கும் ஒரு அமைப்பே கூட்டுறவு வெறுமனே இது ஒரு அமைப்பு மட்டுமன்றி மக்களின் இதயத்தில் எழுகின்ற ஊக்க உணர்வுமாகும். இத்தகைய கூட்டுறவு அமைப்பில் தன்னை இணைத்து கிராமிய, பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் தனது கூட்டுறவுப்பணியை அணிசெய்தவர்.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு, பொதுச்சபை என்பவற்றில் பணிபுரிந்து 1978ல் தலைவராக உயர்ந்து தன் கூட்டுறவுப்பணியை தொடர்ந்தவர். தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பல ஆண்டுகள் தலைவர் பதவியில் இருந்த இவர் சங்க வளர்ச்சிக்கும், அதன் தொழிற்பாட்டு அபிவிருத் திக்கும் குறிப்பாக அப்பிரதேச சமூக பொருளாதார கலாசார மேம்பாட்டிற்கும் சிறந்த பணிகளை ஆற்றி வந்தவர். அங்கத்தவர், கிளைக்குழு, பொதுச்சபை என்பவற்றிற்கும் சங்கத்திற்கும் இடையே உள்ள தொடர்புகளை வலுப்படுத்த காலத்திற்கு காலம் கலந்துரை யாடல், பயிற்சி வகுப்பு, கூட்டங்கள் நடாத்தியும், சங்கத்தின் நிலைகளை அங்கத்தவர், கிளைக்குழு, பொதுச்சபை அறிந்து கொள்ள வேண்டும் என்பதிலும், அவர்களது கருத்தை பெற்று தீர்மானங்களை எடுப்பது பொருத்தமானது என்பதிலும் பெரிதும் நம்பிக்கை உடையவராக செயல்பட்டு கூட்டுறவுச்சங்க தொடர்பு பணிகளை மேம்படுத்தி வந்தமை அவரது கூட்டுறவுப் பண்பை எடுத்துக்காட்டும் அம்சமாகும்.

அத்துடன் சங்கத்திற்கு வினைத்திறன் மிக்க பணியாளர் குழுவை கட்டியெழுப்புவதிலும், கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சிறந்த சம்பள சமூக நல வசதிகளை பெற்றுக் கொடுப்பதிலும் அதிக கவனம் உடையவர். மேலும் சங்கத்துடன் தொடர்பு டைய எல்லா நிறுவனங் களுடனும் சிறந்த தொடர்பு முறைகளை ஏற்படுத்தி தொடர்புடைய நிறுவனங் களின் ஒத்துழைப்பை சங்க வளர்ச்சிக்கு பெற்றுக் கொள்வதில் பெரு வெற்றி கண்டவர். தெல்லிப் பழை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் மட்டுமன்றி வலிவடக்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம், கூட்டுறவு வைத்தியசாலை போன்ற பல்வேறு கூட்டுறவு அமைப்புக்களிலும் இணைந்து பிரதேச மட்டத்திலும் தனது கூட்டுறவுப் பணியை ஆற்றி வந்தார்.

சங்க பிராந்திய மட்டங்கள் மட்டுமன்றி மாவட்ட மட்டத்தில் அவர் ஆற்றிய கூட்டுறவுப்

பணிகள் இம்மாவட்ட கூட்டுறவாளர்களால் என்றும் போற்றப்படும் ஒன்றாக உள்ளது. 1981ம் ஆண்டு இலங்கை தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ்ப்பாண கிளையாக யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை இருந்த காலத்தில் அதன் பணிப்பாளராக இணைந்து கொண்டார். மாவட்டத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்துடனும் இணைந்து எந்தவித வேறுபாடுகளும் இன்றி மாவட்ட மட்டத்தில் அனைத்து கூட்டுறவாளர் களையும் இணைத்து கூட்டுறவு அமைப்பின் தேவைகளிற்கு குரல் கொடுத்தும், செயலாற்றியும் வந்துள்ளார். தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ்ப் பாண கிளையின் தலைவராக இவர் பதவி ஏற்ற காலம் குறிப்பாக 1986- 1989 ம் ஆண்டு காலம் சபைக்கு மிகவும் சோதனை மிகுந்த காலமாகவே இருந்தது. நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையில் வீரசிங்க கட்டிடம் கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரி என்பன மிகவும் சேதமடைந்தன. மிக நெருக்கடி யான நேரத்தில் வீரசிங்க மண்டப கட்டிடத்தில் இருந்தும் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் இருந்தும் தளபாட உபகரணங்களையாவது எடுத்து பாதுகாக்க வேண்டும் என்பதில் கருத்து டையவராய் தானே நேரில் நின்று செயல் படுத்தியவர். இத்தகைய இக்கட்டான நிலைகள் பல சந்தர்ப்பங்களில் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்ட போது பிரச்சி னைகளை கண்டு பயந்து ஓடி விடாது தனது உயிரையே துச்சமென மதித்து பணியாளர் களையும் உற்சாகப் படுத்தி அவர்களுடன் உடன் இணைந்து கூட்டுறவுத் துறையின் சொத்துக்களை இயன்றவரை பாதுகாப் பதற்கு அவரால் எடுக்கப்பட்ட பெரு முயற்சிகளை கூட்டுறவு சமூகம் நன்கறியும்.

எத்தகைய நெருக்கடியான நிலையிலும் கூட்டுறவுச் சபையின் சேவையும், கூட்டுறவுக் கல்வி நடவடிக்கையும் தொடர வேண்டும் என்பதில் அக்கறை உடையவராக இருந்து வருபவர். கூட்டுறவு இயக்கம் சுதந்திரமான அமைப்பாகவும், கூட்டுறவாளர்களால் நிர்வகிக்கும் அமைப்பாகவும் செயல்பட வேண்டும் என்பதில் தீவிர கருத்து டையவர். தேசிய கூட்டுறவுச் சபையின் நிர்வாக கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு மாவட்டக் கூட்டுறவுச் சபைகள் அந்தந்த மாவட்ட கூட்டுறவா ளர்களால் நிர்வகிக்கும் சுதந்திர அமைப்பாக உருவாக வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்ற காலத்தில் நடைபெற்ற கருத்தரங்குகள், கலந்துரை யாடல்களில் கலந்து ஆதரவு அளித்து மாவட்ட கூட்டுறவுச் சபைகளின் உருவாக்கத்திற்கு ஆதரவாக இருந்து உதவியவர்.

1989ம் ஆண்டு மாவட்டக் கூட்டுறவுச் சபை பதிவு செய்யப்பட்ட போது அதன் முதல் தலைவ ராக தெரிவு செய்யப்பட்டவர். அக்கால கட்டத்தில் சபை தனது நடவடிக்கைகளை தொடர வேண்டிய நிதி, பௌதிக, ஆளனி வளங்களில் மிகவும் பலவீன நிலையில் இருந்தது. இத்தகைய நிலையை போக்குவதற்கு மாவட்டத்தின் கூட்டுற வாளர்களினதும், கூட்டுறவுச் சங்கங்களினதும் ஒத்துழைப்புகளை சிறப்பாக பெற்றுக் கொண்டமை யோடு தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக பல உதவிகளை வழங்கி சபையின் ஸ்திர தன்மைக்கு பெரிதும் உதவியவர்.

மாவட்டத்திலுள்ள அனைத்து கூட்டுறவா ளர்களும் இணைந்து ஒற்றுமையாக கூட்டுறவு நிறுவனங்களை வளர்க்க வேண்டும் என்ற பெரும் ஆசை உடையவர். அதற்காக தன்னாலான பணிகளை தொடர்ந்து செய்பவர். மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை, அல்லது ஏனைய கூட்டறவு சங்கங்களுக்கு விநியோகிப் பதற்கு நுகர்ச்சி பொருள் தட்டுப்பாடு போன்றவை ஏற்பட்டகாலங்களில் தன்னாலான பணிகளைச் செய்ய முன்னின்றுழைத்தவர். இதே போன்று விவசாய உள்ளீடுகள் பெற்றுக் கொடுத்தல், விவசாய உற்பத்திகளை சந்தைப் படுத்தல் போன்ற வற்றை கூட்டறவு நிறுவனங் களுடாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக பல முயற்சிகள் மேற் கொண்டவர்.

கூட்டுறவுச் சங்கங்களினதும், பணியாளர் களினதும், கூட்டுறவாளர்களினதும் நன்மை, தீமைகள் எதிலும் எந்தவித பாகுபாடும் காட்டாது உரிய நேரத்தில் உரிய இடத்தில் சமுகமாயிருந்து தனது பங்களிப்பை வழங்கும் உயர்ந்த கூட்டுறவுப் பண்பு அவர்களிடம் நிறையவே உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்திரமாகவும், ஒற்றுமை யாகவும் அதே நேரத்தில் சமூக மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்ற வேண்டும் என்பதில் அவர்காட்டும் ஆர்வம் அதிகம். இத்த கைய தன்மைகள் ஆரம்பத்தில் சிலரால் எதிர்க்க ப்பட்ட போதும் தற்போதைய கூட்டுறவுக் கொள்கை யின் ஏழாவது அம்சமான சமூக மேம்பாடு என்ற அம்சம் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் அதன் மூலம் அவரது முன்னய கருத்து தற்போது அனைவ ராலும் மனம் கொள்ளப்படுகின்றது. கூட்டறவுக் கொள்ளையில் அதிக பற்றுள்ள இவர் கூட்டுறவுக் கல்விக்கு எப்பொழுதுமே முக்கியத் துவம் அளித்து வந்துள்ளார். பொதுமக்கள், அங்கத்தவர், பதவி வகிப்போர், பணியாளர் அனைவருக்கும் காலத்தின் தேவைக்கு ஏற்ப நவீன முறையிலான கல்வியும் பயிற்சியளிப்பும் அவசியம் என்பதை வலியுத்தும் அவர் அதன் செயல்பாட்டிற்கு அதிகம் பங்களிப் பவர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை யின் தலைவராகவும், பணிப்பாளராகவும், தேசிய கூட்டுறவுச்சபையின் பணிப்பாளராகவும்

இருந்து பணியாற்றிய காலங்களில் சபையின் அபிவிருத்தி க்கும், கூட்டுறவுக் கல்விப்பணிக்கும் சிறந்த ஆலோசனைகளையும்,வழிகாட்டல் களையும் வழங்கி வந்தார். யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கல்விப் பயிற்சியளிப்பு தேவைக்கு வேண்டிய நிதி, நவீன சாதனங்கள் என்பவற்றின் ஒரு பகுதியை தேசிய கூட்டுறவுச் சபையில் இருந்து பெற்று தந்தவர்.

கூட்டுறவாளர் வீரசிங்க மண்டப கட்டிடத் தொகுதியின் புனரமைப்புக்கு, புனரமைப்பு குழுவி லும் சபையின் பணிப்பாளர் சபையிலும் இருந்து வேண்டிய ஆலோசனைகளை வழங்கிய தோடு, தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக ரூபா ஒரு லட்சம் நிதியை முதலில் வழங்கி கூட்டுறவு நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக செயல் பட்டு ஆக்கபூர்வமான பங்களிப்பு மூலம் ஊக்கம் அளித்தவர்.

கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் சேவை வழங்கி வரும் அவர் கூட்டுறவுத்துறையில் பெண்கள் பங்களிப்பை அதிகரிக்கும் செயல்பாடுகளிலும் முன்மாதிரி யாகவே செயல்பட்டவர். 1980ம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுறவுத்துறையில் மகளிர் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக தேசிய கூட்டுறவுச்சபையினால் முன்னெடுக்க ப்பட்ட கூட்டுறவு மகளிர் பாவனையாளர் கல்வித்திட்ட செயல்பாட்டிற்கு பெரிதும் ஊக்கம் கொடுத்தவர். இலங்கையில் பரீட்சார்த்தமாக தெரிவு செய்யப்பட்ட ஐந்து பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களில் ஒன்றாக தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்கமும் தெரிவு செய்யப்பட்டது. தெல்லிப்பளை ப.நோ.கூ சங்கத்தில் இத்திட்டம் வெற்றியளித் தமையால் யாழ் மாவட்டத்தில் அளவெட்டி, மல்லாகம், நீர்வேலி, நல்லூர், கட்டை வேலி, நெல்லியடி ஆகிய நான்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் இத் திட்டத்தில் இணைக்கப்பட்டன. அத்துடன் கூட்டுறவு மகளிர் செயல்திட்ட மூலம் மகளிர் சுய அபிவிருத்தி, மகளிர் பொருளாதார அபிவிருத்தி, மகளிர் தலமைத்துவ அபிவிருத்தி போன்ற வற்றை மேம்படுத்த பொருத்தமான கல்விப் பயிற்சியளிப்பு திட்டங்களை சங்கமட்டத் திலும், மாவட்ட மட்டத்திலும் நடைமுறைப் படுத்தி அதில் வெற்றியும் கண்டார். சிறந்த மகளிர் தலைவிகள் உருவாகவும், சங்கத்தின் பொதுச்சபை, பணிப்பாளர் சபை போன்றவற்றில் மகளிர்கள் இடம்பெற்று செயல்படவும், கூட்டுறுவுத்துறையில் பெண்களின் ஈடுபாட்டை அதிகரிக்கவும் இவர் ஆற்றிய பணிகள் பாராட்டப்படக் கூடியவை.

கூட்டுறவுப் பெரயார் வீரசிங்கம் அவர்களது கூட்டுறவுச் சேவை மீது மிகுந்த மதிப்பும், பற்றும் உடைய இவர் அவரது வழி நின்று கூட்டுறவுத் துறையில் பல்வேறு பதவிகளையும் பொறுப்பேற்று வெறுமனே கதிரைகளை அலங்கரிப்பவராக அல்லாது பதவியில் பெருமை பெற்றும், பதவிக்கு பெருமை சேர்த்தவரும் ஆவார்.

கூட்டுறவுத் துறையோடு மட்டுமன்றி வலிவடக்கு செஞ்சிலுவைச் சங்கம், வலிவடக்கு புனர்வாழ்வுக் கழகம் போன்ற பொது நிறுவனங்கள் ஊடாக சமூகப்பணி ஆற்றி வரும் இவர் சிந்த சமயப் பற்றும் நிறைந்தவர். தனது சமூகப்பணிகளோடு சமையப்பயிகளுக்கும் அமைதியாக துணைநின்று உழைப்பவர். இவரது இத்தகைய கூட்டுறவு, சமூக, சமய பணிகளுக்கு அணிகலனாக அமைந்தவை அவரது சிறந்த தலைமைத்துவத் திறனே.

பழகுவதற்கு இனியவரான இவர் பக்குவமான மனப்பாங்குள்ள பண்பாளன். செயல் வீரரும் ஆவர் பல்வேறு கருத்துள்ள மனித உள்ளங்களை ஏககாலத்தில் கவர்ந்து அவர் களை தான் தலைமை தாங்கும் நிறுவனங்களின் நோக்கங்களிற்காக பயன்படுத்துவதில் பட்டறிந் தவர். சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒன்றாக இவரிடம் காணப்படும். எவரையும் துதி செய்யும் மனப் பக்குவம் இல்லாத இவர் பிழைகளை நேரில் சுட்டிக் காட்டவும், அதற்கான எதிர்ப்பை ஏற்றுக் கொள்ளவும் தயங்கமாட்டா தவர். வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்கும் மனநிலை உடையவர். இவர் பிழை என்று கருதுவதை விட்டுக்கொடுக்க மறுப்பவரும் கூட. ஆனால் சரி என தனக்கு தோன்றுவதை செயல்படுத்த தாமதிப்பவரும் அல்லர். இத்தகைய சற்று கடுமையான போக்குமத் உள்ள இவர் அளவாகப் பேசி அதிக செயலாற்றும் வல்லமை இயல்பாகவே பெற்றவர். என்றும் எளிமையான தோற்றம், எளிமையான வாழ்க்கை வாழும் இவர் நலிந்த மக்களுக்கு அவர்களின் மேம்பாடு கருதி எதையாவது செய்ய வேண்டுமே என்று சதா துடிப்புடையவர்.

தனது பண்பால், மற்றவர்கள் மீது காட்டும் அன்பால், சமூகத்தின் மீது உள்ள பற்றால் கூட்டுறவுச் சேவையால் பதவிகள் பல பெற்று பணிகள் பல புரிந்து பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையும் ஒருங்கு சேர இன்று தான் சேவை புரிந்த கூட்டுறவுச் சமூகத்தின் பாராட்டுகளை பெற்றுக்கொள்கிறார். தற்காலத்தில் வேதனத் திற்காக செய்யும் சேவைகளுக்கே விழாக்களும் பாராட்டுக்களும் மலிந்துள்ள சூழ்நிலையில் எந்தவித பிரதி பலனும் இன்றி படோபகாரம் இல்லாது அமைதி யாகவே கூட்டுறவுத் துறைக்கு தம்மை அர்ப்பணித்து உண்மையான கூட்டுறவுப்பணியை செம்மையாக ஆற்றிவரும் கூட்டுறவாளர்கள் பலர் நம்மத்தியில் இருப்பதையோ அன்றி அவர்களது சேவைகளையோ சீர் தூக்குவது குறைவாகவே உள்ளது. இந்நிலையில் கூட்டுறவாளராகிய திரு.சி. சிவமகாராசா அவர்களின் சேவையை பாராட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள் ஏனைய கூட்டுறவாளர்களையும் உற்சாகப்படுத்துவ தோடு, கூட்டுறவுச் சேவைக்குள் ஏனையோரும் புகுந்து கொள்ள ஊக்கமளிப்பதாக அமைகிறது. எனவே இத்தகைய முயற்சியை பாராட்டுவதோடு இவ்வாறான பெருமைகள் ஒரு கூட்டுறபாளனுக்கு அணிசெய்கின்றதே என்ற வகையில் மட்டற்ற பெருமிதம் அடைகின்றேன். திரு. சி. சிவமகாராசா அவர்கள் சேவை எமது சமூகத்திற்கு தொடர எல்லாம் வல்ல இறைவன் சகல வல்லமை களையும் அவர்களுக்கு வழங்க இறைவனை பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

## சங்கத்தின் செயல் நடவடிக்கைகளில் சில நினைவுகள்




01 ம.பா.த.க. திட்டத்தின் முதலாவது ஆண்டு நிறைவுப் பொருட்காட்சியினைத் திட்ட இயக்குநர் செல்வி ஜயந்தா சி தென்னக்கோன் அவர்கள் திறந்து வைத்தல்.

02. மலேஷியா நாட்டுப் பிரதிநிதி செல்வி பத்மா தம்பித்துரை சங்கத்திற்கு விஜயம் செய்தபோது உரையாற்றுதல்.

03. வெளிநாட்டுக் கூட்டுறவாளர்கள் சங்கத்தின் மொத்த நிலையத்தைப் பார்வையிடல்.

04 எமது சங்க ம.பா.த. திட்டத் தலைவி திருமதி சகிதேவி கந்தையா சர்வதேசக் கூட்டுறவு ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றுகின்றார்.

05 ம.பா.த திட்டத்தினை எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ.அமிர்தலிங்கம் திருமதி அமிர்தலிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைத்தல்.

06 ம.பா.த.க. திட்டத்தின் மதிப்பீட்டுக் குழுவினருடன்.

07. தன்சானியா நாட்டுப் பிரதிநிதி திருமதி சறியாவுடன் தென்னிலங்கை கூட்டுறவாளர்களும் சங்கத்திற்கு விஜயம் செய்தல்.

# பாராளுமன்றில் கூட்டுறவின் குரல்

பாராளுமன்றத்தில் கூட்டுறவாளர் சி. சிவமகாராசா(பா.உ) அவர்கள் ஆற்றிய உரை
வியாழக்கிழமை 29 மார்ச் 2001
தொகுதி 135 - இல.9
பக்கம் - 1572
ஹன்சாட் *(Hansard)*
அதிகார அறிக்கை

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, கூட்டுறவு இயக்கத்தில் நீண்டகால ஈடுபாடு உடையவன் என்ற வகையில் இந்தச் சந்தர்ப் பத்தில் நான் கூட்டுறவு இயக்கம் பற்றிய சில கருத்துக்களைச் சொல்லி வைக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன். இந்த நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவுத் துறை முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்தக் கூட்டுறவுத் துறை சம்பந்தமாக இந்தப் பொதுசன ஐக்கிய முன்னனி அரசாங்கம் ஒரு நிலையான கொள்கையை வகுத்துக் கொள்ளவில்லையென் பதைக் கூறி வைக்க விரும்புகின்றேன். எனக் குத் தரப்பட்ட நேரம் குறுகியதாக இருப்பதனால் சில குறிப்புக்களை மட்டும் கூற எண்ணு கின்றேன்.

கூட்டுறவு இயக்கச் செயற்பாடுகள் இப்போது மாகாண மயப்படுத்தப்பட்டிருக்கின்றன. மாகாண சபைகளுக்கு கூட்டுறவுக் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும். அவற்றை நாங்கள் சீர்திருத்தினால் தான் கூட்டுறவுத் துறையினால் உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கின்றேன்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் அங்கு கூட்டுறவு ஆணையாளர் ஒருவர் மட்டுமே இருக்கிறார். பிரதி ஆணையாளர்கள் இல்லை. கூட்டுறவு அலுவலர்கள் பெருந் தொகை யானோர் பற்றாக் குறையாகவுள்ளனர். 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட ஆளணித் திரட்டுக்கு அமைவாகவே கூட்டுறவு உத்தியோகத்தர்கள் அங்கு இருக்கிறார்கள். எனவே, ஆளணித் திரட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும். கூட்டுறவு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். கூட்டுறவுத் துறை உண்மையிலேயே நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கின்ற ஒரு துறை யாகும். எனவே, அத்துறையை வளர்ப்பதற்கு வேண்டிய உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு இந்த கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு உண்டு. அந்த வகையில் வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய விசேட வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டு மென்று கௌரவ அமைச்சரவர் களிடம் கேட்டுக் கொள்கின்றேன். அந்த மாகாண சபையின் கீழ் இயங்கும் கூட்டுறவுத் துறையில் பிரதி ஆணையார்களும் இல்லை. ஆகவே, மாகாண சபையில் பிரதி ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவு அலுவலர்கள் இதுவரை காலமும் கூட்டுறவுப் பரிசோதகர்கள் என்றே அழைக்கப்பட்டு வருகின்றார்கள். Police Inspector, Sanitary Inspector என்பது போல் Co-operative Inspector என்று கூட்டுறவு உத்தியோகத்தர்கள் அழைக்கப் படுகின்றார்கள். இவ்வாறு ஒரு Inspector என்ற வகையில் கூட்டுறவு உத்தியோகத்தர்களைக் குறிப்பிடுவதை மாற்றிக் கொள்ள வேண்டும். அவர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் களாகக் கணிக்க வேண்டும். அவர்களைக் கூட் டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் என்று அழைப் பதே பொருத்தமானது. ஆனபடியால், அவர்களு டைய பதவிப் பெயரை மாற்றியமைப்பது


பொருத்தமானது என்று எண்ணுகின்றேன்.

வருங்காலத்தில் கூட்டுறவுத் துறையைக் கணனி மயப்படுத்த வேண்டும். நவீன கால மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் கூட்டுறவுத் துறை மறுசீரமைக்கப்பட வேண்டும். கூட்டுறவுத் துறை நீண்டகாலமாக முன்னேற்றம் ஏற்படுத்தப்படாமல் கவனிப்பாரற்று கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றது. இந்தக் கூட்டுறவுத் துறையை மறுசீரமைப்பது காலத்துக்கேற்ற தேவையாகும். உற்பத்தித் திறனை வளர்ப்பதற் கேற்ற கல்வித் திட்டங்கள் முன்னெடுக்கப்படு வதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்பட வேண்டும். இதுவரை காலமும் பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரி, சகல கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கும், கூட்டுறவு அலுவலகங்களுக்கும் உரிய பயிற்சிகளை வழங்கி வந்தது. இப்பொழுது அது மாகாண மயப்படுத்தப் பட்டதனால் வவுனியாவில் தமிழ்ப் பகுதிக் கென்று ஒரு கூட்டுறவுக்கல்லூரி நிறுவப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டுறவுக் கல்லூரியின் தேவைகள் அதிகமாக உள்ளன. கூட்டுறவுக் கல்வி விரிவுரையாளர்கள் மற்றும் கூட்டுறவு நூலகம், கல்லூரிக்கு வேண்டிய ஏனைய தளபாட உபகரண வசதிகள் என்பன அங்கு தேவையாக உள்ளன. ஒரு கல்லூரி உடனடியாக ஆரம்பிக்கப்படும்போது அங்கு பல குறைபாடுகள் இருக்கும். அவற்றை நிவர்த்தி செய்வதற்கு விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கூட்டுறவுத் துறையிலே முக்கியமானவர்கள் அதன் பணியாளர்கள். அவர்களுடைய சம்பளம் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கிறது. இதனால் அவர்களு டைய சம்பளத்தை உயர்த்துவதற்குப் பல சம்பள மீளாய்வு அறிக்கைகள் வெளி வந்தன. வடக்கு- கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், 31/99 ஆம் இலக்கச் சுற்று நிருபத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட சம்பளமீளாய்வு இன்னும் பணியாளர்களுக்குக் கிடைக்கவில்லை. சம்பள மீளாய்வு செய்யும் போது பல்வேறு காரணங்களைக் கருத்தில் எடுத்துத்தான் அது செய்யப்படுகிறது. அதன் பின்னர் சங்கங்கள் இலாபத்தில் இயங்கினால் தான் சம்பளம் கொடுக்கலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. ஆனபடியால், வடக்கு-கிழக்கு மாகாணத்திலேயுள்ள சகல கூட்டுறவுச் சங்க பணியாளருக்கும் இந்த சம்பள உயர்வு உடனடியாகக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதைவிட வடக்கு-கிழக்கு மாகாண த்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவு இயக்க ங்கள் இந்த யுத்தத்தினால் பல அனர்த்தங்களை எதிர்நோக்கியிருக்கின்றன. நிதி நெருக்கடிக ளுக்கு உள்ளாகியிருக்கின்றன. ஆனபடியால், அங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்க ளுக்கும் தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம், மீனவர் கூட்டுறவுச் சங்கம் போன்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும். நிதி வசதி செய்து, அவற்றைச் சீராக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும். ஏனெனில், கூட்டுறவுச் சங்கங்கள் தான் யுத்த காலத்திலும் இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்ற காலத்திலும் மக்களுக்கு தொண்டா ற்றி வருகின்றன. மீனவர்கள், விவசாயிகள் போன்ற பல்வேறு துறையினருக்கு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன இந்த வேளையில், கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மட்டும் இந்த ஓய்வுதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் ஏன், காலதாமதம் ஏற்படுகிறது என்பது புரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் எடுத்து கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வேண்டிய ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புக்கிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்னும் பல தேவைகள் இருக்கின்றன. முக்கியமாக, கணக்கு வைப்பு முறையில் கட்டுப்பாட்டுப் படிவங்கள் 32, 42 என்ற வகையில் பல படிவங்கள் இருக்கின்றன. காலத்தின் தேவைக்கேற்ற வகையில் கணக்கு வைப்பு முறையை மாற்றியமைக்க வேண்டும். அவற்றை கணனி மயப்படுத்த வேண்டும். இந்தப் படிவங்களின் தொகைகளைக் குறைக்க வேண்டும். சங்க ஊழியர்களின் வேலைப் பளுவைக் குறைத்து, விரைவான சேவை செய்யக் கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டு எனது உரையை முடிக்கின்றேன்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1982



கிளைக்குழுத் தலைவர்களும் செயலாளர்களும்

# தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

## வரலாறு:

கூட்டுறவுப் பண்டகசாலைகளின் வளர்ச்சிக் காலம் என வரலாற்று ஆசிரியர்களால் கூறப்படும் 1942-44ம் ஆண்டுகளில் வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி பிரிவிலும் பல கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இப் பண்டகசாலை களுக்கு ஒரு மொத்த விற்பனை நிலையம் தேவை என்பதைக் கூட்டுறவாளர்கள் உணர்ந்து 4-3-1944ம் தேதி சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை யில் கூடி ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை சமாசம் நிறுவ வேண்டுமெனத் தீர்மானித்தனர். 7-7-1944ம் தேதி 21 கூட்டுறவுப் பண்டகசாலைப் பிரதிநிதிகளைக் கொண்ட பொதுச்சபைக் கூட்டம் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில், ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை நிலையச் சங்கத்துக்கு வலிகாமம் வடக்குக் கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கங்களின் சமாசம் எனப் பெயர் சூட்டப்பட்டது. தெல்லிப்பளை, சுன்னாகம் ஆகிய இடங்களில் இரு மொத்த விற்பனை நிலையங்களை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இப்பொதுக் கூட்டத்திற்கு அந்நாள் கூட்டுறவு உதவிப் பதிவாளர் (ஆணையாளர்) திரு. F.A. சந்திரசேகரா அவர்களும் கூட்டுறவுப் பரிசோதகர் திரு.எம்.சின்னத்தம்பி அவர்களும் சமூகமளித் திருந்தார்கள். அக்கூட்டத்தில் திரு.S.கந்தவனம் அவர்களைத் தலைவராகவும், திரு. S.K.இராசையா அவர்களைக் காரியதாசியா கவும் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

கூட்டுறவு வரலாற்றில் 1957ம் ஆண்டு இன்னெரு வளர்ச்சிக் காலமாகும். ஒரு நோக்குக் கொண்ட சங்கங்களை விடப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம். இம்மாற்றங்கள் வலிகாமம் வடக்குப்பகுதியிலும் ஏற்பட்டன. பண்டக சாலைச் சங்கங்கள் சில பலநோக்குக் கூட்டறவுச் சங்கங்களாக மாற்றிய மைக்கப்பட்டன. புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகின. சிலமட்டும் பண்டக சாலைச் சங்கங்களாக இருந்தன. இந்நிலையில் வலிகாமம் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாசம் தனது துணை விதிகளைத் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இச்சமாசத்தின் பெயர் வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என மாற்றப்பட்டது. மின்தறி நெசவு நிலையமொன்று அமைப்பதற்குரிய முயற்சியில் இச்சமாசம் ஈடுபட்டு அதற்குரிய நடவடிக்கையில் இறங் கியது. அரசாங்க அனுமதி பெற்று இயந்திரங்கள் இறங்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொ ண்டது. 1969ம் ஆண்டு இச்சமாசம் தன் வெள்ளி விழாவை விமரிசையாகக் கொண்டாடியது. வெள்ளி விழாக் கொண்டாடி ஈராண்டு பூர்த்தியா கவில்லை. கூட்டுறவுச் சங்கங்களின் மறு சீரமைப்பின் விளைவாக வலிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பதிவழிக்க ப்பட்டு அச்சமாசத் தொழிற்பரப்பில் மூன்று ஆரம்பப் பேரளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகின. அவையாவன,

1. தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
2. சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
3. அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

தெல்லிப்பளைப் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கம் தெல்லிப்பளை, மயிலிட்டி, காங்கே சன்துறை உள்ளூராட்சி மன்றங்களைத் தொழிற் பரப்பாகக் கொண்டு 12-3-1971ம் தேதி ஜே/1558 ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டது. இத் தொழிற்பரப்பிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள் யாவும் இச்சங்கத்துடன் இணைக்கப்பட்டு. அவற்றின் பதிவு அழிக்கப்பட்டு, அவற்றின் சொத்துக்க ளையும், பொறுப்புக் களையும் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

## தற்காலிக இயக்குனர் சபையின் நிருவாகக்காலம்

தற்காலிக இயக்குனரவை ஒன்றை ஆணையாளர் நியமித்து அதனிடம் சங்க நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. இதன் ஆரம்பக்காலத் தலைவராக திரு.C.லிங்கதாசன் A.I அவர்களும், உப தலைவராக

திரு.A.ஜெயரத்தினம் R.D.O அவர்களும் நியமிக்கப்பட்டனர். 30.4.71ம் தேதி திரு.ம.சிதம்பரநாதன் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். திரு.சு.சிவகுரு அவர்கள் உபதலை வராக நியமிக்கப்பட்டார். 1972ம் ஆண்டு வரை ஆணையாளரால் நியமிக்கப்பட்ட தற்காலிக இயக்குனரவையே பொதுச்சபையின் அதிகாரங்க ளையுங் கொண்டிருந்தது.

## இரட்டை அதிகார நிருவாகக் காலம்

1972 ம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் இச்சங்கத்தின் பொதுச்சபைப் பிரதிநிதிகளில் இருந்து இயக்குனர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக முதல் முறையாகப் பொதுச்சபை கூட்டப்பட்டது. இப்பொதுச் சபை இயக்குனர் சபை உறுப்பினர்களில் ஐந்து பேரை மட்டும் தெரிவு செய்ய துணை விதி அனுமதியளித்தது. பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட முதல் இயக்குனர் சபை உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு.

1. சி.சிவஞானம்
2. பண்டிதர் இ.நமசிவாயம்
3. மாவை சோ.சேனாதிராசா
4. சு.மாணிக்கம்
5. ம.மரியாம்பிள்ளை

1973ம் ஆண்டு நியமன உறுப்பினர்கள் 9 பேரையும் பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட 5 பேரையும் கொண்ட இயக்குனர் சபை நிருவாகப் பொறுப்பை ஏற்றது.

1973ம் ஆண்டில் திரு.த.பூ.முருகையா உபதலைவராகக் கடமையாற்றினார். 1974ம் ஆண்டு யூலையில் தலைவராக திரு.த.பூ. முருகையா பதவி ஏற்றார். திரு.அ.கணபதிப் பிள்ளை உபதலைவராகப் பதவியேற்றார். 1976ல் திரு.இ.பசுபதி உபதலைவராகப் பதவியேற்றார். 1973ம் ஆண்டு தொடக்கம் 30-7-77ம் தேதி வரையுள்ள காலம் இரட்டை அதிகார நிருவாக காலம் என அழைக்கப்பட்டது. அதிகாரத்தின் இரு கூறுகளான இயக்குனர் சபை பொதுச் சபை இரண்டுக்குமிடையே அதிகார முரண்பாடுகள் தோன்றக்கூடிய நிருவாக அமைப்பு இக் காலத்தில் இருந்தது. பொதுச்ச பையின் அதிகாரத்திற்குட்படாத நியமன உறுப்பி னர்கள் பெரும்பான்மையினர் இயக்குனர் அவையில் இருந்த மையே அதிகார முரண்பாட்டிற்குக் காரணமாக இருந்தது. இம் முரண்பாட்டின் காரணமாக சில பொதுச்சபைக் கூட்டங்கள் இக்காலகட்டத்தில் ஒத்திவைக்கப் படுஞ் சூழ்நிலைகள் ஏற்பட்டன. 1975, 1976, 1977ம் ஆண்டுகளில் பொதுக் கூட்டங்களோ, கிளைக்குழுத் தேர்தல்களோ நடைபெறவில்லை. அக்காலத்தில் கூட்டுறவுக்கு அளிக்கப்பட்டிருந்த சிறிதளவு ஜனநாயக உரிமைகளையும் பொதுச்சபை பயன்படுத்துவதற்குக் கூடச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. ஆயினும் இக்காலட்டத்தில் சங்கத்தில் சில அபிவிருத்தி வேலைகள் நிகழ்ந்துள்ளன என்பதையும் ஞாபகத்திலிருத்த வேண்டும். அவையாவன:

1. 1973ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கிராமிய வங்கி ஆரம்பித்தமை.
2. இரும்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டமை.
3. எரிபொருள் நிரப்பு நிலையம் ஆரம்பிக்க ப்பட்டமை.
4. புத்தக உபகரண விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டமை.
5. மின்தறி நிலையம் திறக்கப்பட்டமை.(1975)
6. சங்கத்தின் மேல்மாடிக் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டமை.
7. சிற்றுண்டிச்சாலை ஆரம்பிக்கப்பட்டமை.
8. புதிய கிளைகள், விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட்டமை.

வலிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமுயற்சியால் இறக்குமதி செய்யப்படவிருந்த மின்தறிகள் அச்சங்கம் குலைக்கப்பட்டதால் தெல்லிப்பளை பலநோக் குக் கூட்டுறவுச் சங்கம் 1972ம் ஆண்டு இறக்குமதி செய்து 1975ம் ஆண்டில் இத்தொழிற் சாலை ஆரம்பிக்க ப்பட்டது. 1975ம் ஆண்டில் பணியாளர் பிரதிநிதி ஒருவர் இயக்குனராகப் பணியாளரால் தெரிவு செய்யப்பட்டு, ஆணையா ளரால் நியமிக்கப்பட்டார். இவ்வாறு முதல் நியமிக்கப்பட்ட பணியாளர் பிரதிநிதியான இயக்குனர் திரு.நா.பாலகணேசன் ஆவார். 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் நியமன இயக்குனர் சபை உறுப்பினர்கள் தமது பதவிகளில் இருந்து விலகினர்.

## இடைக்கால இயக்குனர் சபை

நியமன உறுப்பினர்கள் விலகியதும் இடைக்கால இயக்குனர் சபை ஒன்று நியமிக்க ப்பட்டது. தலைவராக உதவி அரசாங்க அதிபர் திரு.க.மகாதேவா அவர்களும், உப தலைவராக திரு.அ.மாணிக்கவாசகர் (கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களும், உறுப்பினராக திரு. P.V. நவரத்தினம் (கூட்டுறவு அதிகாரி) அவர்களும் நியமிக்கப்பட்டனர். இவர்களுடன் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் சபை உறுப்பினர்கள் ஐவரும் கடமையாற்றினர். இவர்கள் 1977ம் ஆண்டு ஆகஸ்ட் தொடக்கம் 1978ம் ஆண்டு பெப்ரவரி வரை கடமையாற்றினர்.

## புதிய இயக்குனர் சபை

1978ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் புதிய இயக்குனர் சபை ஒன்று அமைக்கப்பட்டது. ஆணையாளரின் நியமன உறுப்பினர்கள் 9 பேரையும், தெரிவு செய்யப்பட்ட இயக்குனர்கள் 5 பேரையும் கொண்ட இயக்குனர் சபை அமைக்கப்பட்டது. சங்கத் தலைவராக திரு.சி.சிவமகா ராசா பதவியேற்றார். உபதலைவராக திரு.சி.சிவஞானம் பதவி வகித்தார். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறாது இருந்த சங்கப் பொதுச்சபை கூட்டப்பட்டது. சுமார் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறாதிருந்த கிளைக்குழுத் தேர்தல்களை நடாத்துவதற்கு இயக்குனர் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1979ம் ஆண்டு கிளைக்குழுத் தேர்தல்களை நடாத்தி, அக்கிளைக்குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட பொதுச்சபைப் பிரதிநிதிகளைக் கொண்ட வருடாந்தப் பொதுக் கூட்டமொன்றை 21.10.79ம் தேதி நடாத்தியது. இதில் ஐந்து இயக்குனர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் திரு.சி.சிவமகா ராசாவைத் தலைவராகவும், திரு. நா.நடராசாவை உபதலைவராகவும் தெரிவு செய்தனர். 15.12.79ம் தேதி நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் ஏழு பேர் கொண்ட இயக்குனர் சபை தெரிவு செய்யப்பட வேண்டும் என துணை விதி திருத்தப்பட்டது. முன் தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்களை விட மேலும் இரு உறுப்பினர்கள் பின்னர் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். இப்பொழுது தெரிவு செய்ப்பட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இயக்குனர் சபையினரால் நிருவாகம் நடாத்தப்படுகின்றது.

## சங்கப் பொது முகாமையாளர்

இச்சங்கம் பதிவு செய்யப்பட்டதும் கூட்டுறவு இலாகா வினால் சங்கப் பொது முகாமையாளராகக் கடமையாற்றக் கூட்டுறவுப் பரிசோதகர் திரு.அ.மாணிக்கவாசகர் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரது நியமன காலம் முடிய 1973ம் ஆண்டின் பிற்பகுதியில் திரு.ச.நவரத்தினம் அவர்கள் பொது முகாமையாளராகப் பதில் கடமையாற்றினார். பின் அவரே நிரந்தரப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

திரு.சி.நவரத்தினம் அவர்கள் பொது முகாமையாளர் பதவியிலிருந்து விலகிய பொழுது திருமதி.மகாதேவா வள்ளிநாயகி என்பவர் சிறிது காலம் தற்காலிகப் பொது முகாமையாளராக 1984ல் கடமையாற்றியுள்ளார். 1.4.1985 தொடக்கம் திரு.செல்லத்துரை செல்வராசா என்பவர் இன்று வரை(2001) பொதுமுகாமையாளராக கடமையாற்றி வருகின்றார்.

## சங்கத் தொழில் முயற்சிகள்

1. நுகர்ச்சிப் பொருள் விநியோகம்:-
   நிவாரணப் பொருள் விநியோகம்
2. கட்டிடப் பொருள் விநியோகம்
3. எரிபொருள் விநியோகம்
4. விவசாயப் பசளை கிருமிநாசினி விநியோகம்
5. விவசாயப் பொருள்கள் சந்தைப்படுத்தல்
6. வங்கிச் சேவை கடன்வழங்கும் சேவை
7. சிற்றுண்டிச்சாலை.
8. புத்தக உபகரணங்கள் விற்பனவு.
9. பாண் உற்பத்தி
10. கைத்தறி நெசவு உற்பத்தி.
11. மின் தறி நெசவு உற்பத்தி
12. ஒப்பந்த வேலை
13. மோட்டார் வாகன சேவை
14. உடை தயாரிக்கும் சேவை
15. பாலர் கல்வி நிலையம்
16. கோழித்தீன் உற்பத்தி

## நுகர்ச்சிப் பொருள் சேவை

சங்கம் தமது எல்லைப் பரப்பிலுள்ள அங்கத்தவர் அங்கத்தவரல்லாதவர்க்கும் நுகர்ச்சிப் பொருட்களை விநியோகிக்கின்றது. இதன் பொருட்டு 44 சில்லறை விற்பனை நிலையங்களையும் 2 புடவை நிலையங் களையும் மாதிரிக்கடைகளையும் நடத்துகின்றது. அத்துடன் 25 உத்தரவு பெற்ற வியாபாரிகள் மூலம் நுகர்வுப் பொருட்களை விநியோகம் செய்துள்ளது.

30.12.90ல் பங்கீட்டு அட்டைகளுக்குப் பதிலாக அங்கத்தவர்களுக்கு கொள்வனவு அட்டைகள் வழங்கப்பட்டு பொருள்கள் விநியோகம் செய்து வருகின்றது. 17530 கொள்வனவு அட்டைகள் வழங்கப்பட்டு 70570 உறுப்பினர்களுக்கு பொருட்கள் விநியோகம் செய்து வந்துள்ளது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து தற்போது சங்கத்தின் எல்லைப் பரப்பிலும் எல்லைப்பரப்பிற்கு வெளியே யும் கிளைகளை அமைத்து நிவாரணப் பொருள் விநியோகத்தையும் மேற்கொண்டு வருகின்றது.

## பிடவை விற்பனவு

ஆரம்பகாலத்தில் பெரியஅளவில் பிடவை

விற்பனவு நிலயத்தை தெல்லிப்பளைப்பகுதியில் அமைத்து மக்களுக்குத் தேவையான துணி வகைகளை விநியோகம் செய்துள்ளது சில்லறை விற்பனை நிலையங்களில் சிறிய அளவில் பிடவை, பாலுணவுப் பொருள்கள் அலங்காரப் பொருள்கள் போன்ற பலவகைப் பொருட்கள் விநியோகித்துள்ளது. இடம் பெயர்வின் பின்னர் இச் சேவைகள் யாவும் தடைப்பட்டன. இருப்பினும் இயன்ற அளவில் இன்நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்ட போது மக்களுக்கு தேவை யான பொருட்களை விநியோகம் செய்து வந்துள்ளது.

## கட்டிடப் பொருள் விநியோகம்

கட்டிடப் பொருள்களை விநியோகம் செய்வதற்காக தெல்லிப்பளையில் இருப்பு விற்பனை நிலையம் ஒன்றைத்திறந்து அதன்மூலம் மக்களுக்கு சேவையாற்றி யுள்ளது. கட்டிடப் பொருள் விற்பனைக் கூட்டுத்தாபன முகவராகவும் நியமனம் பெற்றுள்ளது. கட்டிடத்திற்கு தேவையான பெருமளவு சீமெந்தை கிளை நிலையங்கள் ஊடாக உறுப்பினர்கள் பெறுதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளது. இடம் பெயர்ந்த போது இந் நிலையம் மூடப்பட வேண்டி ஏற்பட்டது. இதன் பின்னர் இச் சேவை புதிதாக அமைக்கப்பட்ட நிலையங்கள் மூலமாக செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமந்த பின்னர் மக்கள் தமது கட்டிடங்கள் திருத்துவதற்கு வேண்டிய மூலப்பொருள்கான சீமெந்து மணல் இரும்பு வகைகளை சிறந்த முறையில் கொள்வனவு செய்து மக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

## எரிபொருள் விநியோகம்

எரிபொருள் விற்பனவு நிலையமொன்றை காங்கேசன் துறைப்பகுதியில் அமைத்து செயற்பட்டு வந்துள்ளது. இந்நிலைய மூலம் மக்களுக்கு தேவையான மண்ணெய், பெற்றோல், டீசல் என்பன விநியோகம் செய்து வந்துள்ளது. தட்டுப்பாடான நேரங்களில் விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்ப டையில் மண்ணெய் விநியோகம் செய்து வந்துள் ளது மண்ணெய் கொழும்பிலிருந்து வெற்றுப்பரல் மூலம் கொள்வனவு செய்து அருந்தலான காலங்களில் விநியோகம் செய்துள்ளது. 1990ல் பின்னர் சேவை செய்து வந்த எரிபொருள் நிலையம் இடம் பெயர்வினால் செயலிழந்தது. இருப்பினும் சங்கம் செயல்பட்ட இடங்களில் சேவையைக் தொடர்ந்து செய்து வந்துள்ளது.

## விவசாய கிருமிநாசினி உர விநியோகம்

தமது எல்லைப்பரப்பில் வாழும் விவசா யிகளுக்கான கிருமி நாசினி உரம் போன்ற வற்றை சில்லறை விற்பனவு நிலைய ங்கள் மூலம் விநியோகம் செய்து வருகின்றது. விவசாயப் பொருட்கள் சந்தைப்படுத்து முயற்சியிலும் ஈடுபட்டு வந்துள்ளது. கிருமி நாசினி உரம் என்பன கட்டுப்பாடான காலங்களில் கட்டுப்பாடாக விநியோகித்து விவசாயிகளின் தேவைகளை செவ்வனே செய்து வந்துள்ளது.

## கிராமிய வங்கி

கிராமிய வங்கி மூலம் வங்கிக் சேவைகளை நடத்தி வருகின்றது. அடைவு முற்பணம் வழங்கும் தொழிற்பாட்டை அரம்பத்தில் செய்து வந்துள்ள போதும் மக்கள் வங்கியின் உத்தரவுக்கு இணங்க நிறுத்தி வைத்துள்ளது விரிவாக்கத்துடன் விவசா யக்கடன் அங்கத்தவர்களிடமிருந்து வைப்புகள் பெறல், வழங்குதல் ஓய்வூதியம் வழங்குதல் போன்ற சேவைகளை செய்து வருகின்றது.

## சிற்றுண்டிச்சாலை

சிற்றூண்டிச் சாலையை அமைத்து மக்கள் சேவை மனப்பான்மையுடன் நடத்தி வந்தள்ளது. தனிப்பட்டவர் களின் உணவு நிலையங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடனே இச்சேவை தொடர்ந்து நடைபெறுகின்றது.

நவீனமயப்படுத்திய குளிர்பானசாலை ஒன்றும் அமைக்கப்பட்டு நடத்தி வந்துள்ளது.

## கைத்தறி உற்பத்தி

கைத்தறி உற்பத்தி நிலையமும் நடத்தி வந்துள்ளது போதியளவு மூலப்பொருட்கள் கிடைக்கப்பெறாமையினால் இப்பகுதியானது நட்டத்தில் இயங்கி வந்துள்ளது. இத்தொழிற் பாடு தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது.

## மின்தறி

சங்கத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் மின்தறி வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. தரமான துணிவகைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்து போதியளவு இலாபத்தை ஈட்டியுள்ளது.

## மோட்டார் வாகன சேவை

மோட்டார் வாகன சேவை சங்கம் சீரான முறையில் செய்து வருகின்றது. சங்கத்தின் தேவைகளுக்கும் உறுப்பினர் ஊழியர்

தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1989ம் ஆண்டு காலப் பகுதியில் ரூபா 757500 பெறுமதியான லொறி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

## பாலர் பாடசாலை

சங்கத்தின் எல்லைப்பரப்பில் சிறுபிள்ளை களின் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்காக பாலர் பாடசாலைகள் மூன்றினை நடத்தி வந்துள்ளது. இலாபத்தை அடிப்படை யாகக் கொள்ளாது சேவை மனப்பான்மையுடனேயே பாலர் பாடசாலைகள் நடத்தப்பட்டன. உடை தயாரிப்பு சேவையும் சிறிய அளவில் செயல்படுத்தப் பட்டன.

## அங்கத்தவர் உறவுகள்

சங்கத்தின் முதுகெலும்பாக விளங்கும் அங்கத்தவர் களின் கருத்துக்களை அறிய சங்கம் பல்வேறு பட்ட வசதிகளை கையாண்டு வருகின்றது.

1. கிளைகளிடையே கருத்தரங்குகளை நடத்தி சங்கத்தின் நோக்கங்களை அறிய வைத்தல்
2. கிளைக்குழு அங்கத்தவர்களுக்கான கருத்த ரங்கு களை காலத்துக்கு காலம் நடத்துதல்
3. கிளைக்குழுத் தலைவர் காரியதரசி கிளை முகாமையாளர் ஆகியோரைக் கொண்ட சிறு குழுக்களை ஏற்படுத்தி அதன் மூலம் இவைக ளின் அபிவிருத்தி பற்றி கலந்து ரையாடல்.
4. பொதுச்சபைப்பிரதி நிதிகளுடன் கருத்தரங்குக ளையும் கலந்துரையாடலையும் காலத்துக்கு காலம் ஏற்படுத்தி வருகின்றது.
5. கிளைக்குழுக்களின் கடிதங்கள் அறிக் கைகளை பரிசீலனை செய்து உடனுக்குடன் பதிலளித்தல்
6. இயக்குனர் சபைக்கு ஆலோசனை வழங்கும் உப குழுக்களில் இயக்குனர்களுடன் பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கும் இடம ளித்தல்.
7. கூட்டுறவு தினவிழாக்களை பரந்த அளவில் நடாத்தி அங்கத்தவர்கள், கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தமது திறன்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளித்தல்
8. உறுப்பினர்கள் கிளைக்குழுக்கள் ஆகியவர்க ளின் முறைப்பாடுகளை விசாரணை செய்து உடன் நடவடிக்கை எடுத்தல்
9. உறுப்பினர்கள் தமது ஆலோசனைகளை இலகுவாகச் சங்கத்திற்கு அறிவிக்கும் வகையில் கிளைகள் தோறும் ஆலோசனைப் பெட்டிகளை அமைத்திருத்தல்
10. கிளைகளின் அபிவிருத்தியிலும் நிருவாக த்திலும் கிளைக்குழுக்களுக்கு முக்கியபங்கு அளித்தல்.

இவை போன்ற செயற்பாட்டு முறைகள் மூலம் சங்கத்திற்கும் அங்கத்தவர்களுக்கும் இடையேயுள்ள தொடர்புகளை அதிகரிக்கச் செய்ய சங்கம் முயன்று வருகின்றது.

## ஊழியர் தொடர்பு

சங்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரண கர்த்தராக விளங்குபவர்கள் ஊழியர்களே. ஊழியர்களின் கடமையில் கண்ணியம் கட்டு ப்பாடு என்பனவற்றினால் சங்கத்தின் வளர்ச்சி அமைந்து ள்ளது. இதனை உணர்ந்து சங்கம் அவர்கள் பெறவேண்டிய வசதிகளைச் செய்து ள்ளது.

1. பண்டிகைமுற்பணம் வழங்கல்
2. இலாபத்தில் நற்றொழில் வேதனம் வழங்கல்
3. கடமை நேரத்தில் தேநீர் வழங்கல் அல்லது தேநீர் சகாயப்பணம் வழங்கல்
4. கிளை நிலைய முகாமையாளர்கள் தலைமைக் காரியாலயத்திற்கு பணம் கொண்டு வந்து செலுத்துவதற்கு அபாயப்படி வழங்குதல்
5. சங்கத்தின் விருப்புக்குரிய சம்பள உயர்வு களை வழங்குதல்
6. ஊழியர்களின் பொதுத் தேவைக்களுக்காக சங்க மோட்டார் வாகனங்களைப் பயன்ப டுத்தும் வசதிகளை அளித்தல்
7. ஊழியர்களின் வினைத்திறன் அறிவு வளர்ச்சியின் பொருட்டு கூட்டுறவு ஊழியர் சாதாரண உயர்தர பரீட்சை பயிற்சி வகுப்புகளுக்கு சம்பளத்துடன் கூடிய லீவு வழங்கல்
8. ஊழியரின் வினைத்திறன் அறிவு வளர்ச்சி என்பனவற்றின் பொருட்டு காலத்துக்கு காலம் பயிற்சி வகுப்புகள் கருத்தரங்குகள் என்பவற்றை நடத்துதல்
9. ஆடி அமாவாசைத்தினத்தை ஊழியர் வசதிக்காக பொதுவிடுமுறை தினமாக்கியமை
10. புதுவருட பிறப்பிற்கு கைவிஷேடம் வழங்குதல்
11. ஊழியர்களின் நெருங்கிய உறவினர்களின் மரணச்சடங்குகளில் ஏனைய ஊழியர்களும் கலந்து கொள்ளும் பொருட்டு குறுகிய கால லீவு வழங்குதல்.
12. மின்தறி உற்பத்தி நடைபெற்ற காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பிடவைகளை குறிக்கப்பட்ட ஊழியர்களுக்கு வருடமொரு முறை உற்பத்தி விலையில் வழங்குதல்.

மேற்கூறப்பட்ட வசதிகளை சங்கம் ஊழியர் களுக்கு வழங்கி ஊழியர்கள் கடமைகளை ஆர்வத்துடனும் கண்ணியத்துடனும் சிரத்தை யுடனும் செய்ய சங்கம் முயற்சி எடுத்து வருகி ன்றது.

## சமூக கலாசார பொதுமுயற்சிகள்

சங்கத்தின் தொழிற்பரப்பிலும் தேசிய ரீதியிலும் இவ்வித முயற்சிகளுக்கு சங்கம் இயன்றளவு முயற்சி செய்து வருகின்றது. சங்கத்தின் எல்லைப்பரப்பினுள் விளையாட்டுக் கழகங்கள் கலை கலாசார நிலையங்கள் கல்லூரிகள் என்பன நடாத்தும் கலை, கலாசார நிகழ்ச்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அவற்றுக்கு பரிசில்கள் உதவி ஊக்குவிக்கின்றது. அகதிகள் நிதி அனாதைகள் நிதி போன்றவற்றிற்கு ஊதியங்கள் உறுப்பினர்கள் மூலம் நிதி திரட்டி உதவுகின்றது.

மயிலிட்டி மக்கள் இடம் பெயர்ந்து யா/நுணைசெ அகதிமுகாமில் தங்கி இருந்த பொழுது 50K அரிசி அன்பளிப்பு செய்துள்ளது. சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கு பரிசில்கள் வழங்கி யுள்ளது. வசாவிளான் ஞானவைர ஆலயத் திருப்பணிக்கு ரூபா 5000 அன்பளிப்பு செய்துள்ளது.

புற்று நோயாளர் சங்கம் மதியம் போசனம் வழங்குதல் ஆசிரியர் தினவிழா அன்பளிப்பு, நாதஸ்வர கலைஞர் மணிவிழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு சங்கம் அன்பளிப்புகள் வழங்கியுள்ளது.

## கூட்டுறவு மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டம்.

இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவுசபை கூட்டுறவு இலாகா என்பவற்றால் இச்சங்கம் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. வட.கீழ் மாகாணங்களில் இத் திட்டத்தை செயற்படுத்தும் முதலாவது சங்கம் இதுவேயாகும்.

கூட்டுறவு மகளிர் பாவனையாளர் தகவல் திட்ட இயக்குனர் செல்வி ஜெயந்தா தென்னக்கோன் அவர்களால் 27-1-80 தேதி இச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப் பட்டது.

இத்திட்டம் சுமார் 15 கிளைகளில் ஆரம்பிக் கப்பட்டது இத்திட்டம் ஆரம்பித்த கிளைகளில் கருத்தரங்குகள் பயிற்சிவகுப்புகள் செய்முறை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இச்சங்கத் தொழிற்பரப்பில் இருந்து மகளிர் தலைவிகள் தெரிவு செய்யப்பட்டு பெப்ரவரி 23,24ம் தேதிகளில் பொல்கொல்லைக்கூட்டுறவு கல்லூரியில் பயிற்சி பெற்றனர். பயிற்சி பெற்ற மகளிர் தலைவிகள் விபரம்.

1.செல்வி. வ.கந்தையா
2.செல்வி.இ.கணபதிப்பிள்ளை
3.திருமதி.ப.வேலுப்பிள்ளை
4.திருமதி.றோசாமலர் ஜெயநாதிராசா
5.செல்வி ம.ஞானரூபி
6.செல்வி ச.செல்லத்துரை

இத்தலைவிகளுக்கு காலந்தோறும் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக கிளை உறுப்பினர்களிடமிருந்து மத்திய குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. மத்தியகுழு உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சியும் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. மே 15,16ம் தேதிகளில் திட்ட இயக்குனர்கள், ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவு சபையினர், உதவியாணையாளர்கள், மகளிர் பாவனைத்தகவல் கல்வித்திட்ட உறுப்பினர்கள் அடங்கிய கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும் நடைபெற்றது.

இத்திட்டம் சிறந்த முறையிலும் பயன் தரத்தக்க முறையிலும் சங்கம் நடத்தி வருகின்றது. கூட்டுறவுக் கொள்கைகளை இலகுவாகவும் சிறந்தமுறையிலும் உறுப்பினர்களிடையே பரவச் செய்வதற்கு இத்திட்டம் பெருமளவில் உதவும்.

1984 ஆம் ஆண்டில் மகளிர்குழு 25 கிளைகளில் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு கிளைகளிலிருந்து 15 பேர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெற்றனர். 8 பாலர் பாடசாலை இயங்கியது. தெரிவு செய்யப்பட்ட மகளிருக்கு மாலையில் தையல் நூல் வேலை, வைக்கோலில் உருவங்கள் அமைத்தல், பற்றிக்ஸ், பிறின்றிங், சுருக்கெழுத்து, தட்டெழுத்து போன்ற பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. ஜனவரி, பெப்ரவரி, யூன் மாதங்களில் 32 பேர் லண்டன் பிற்மன் பரீட்சைக்குத் தோற்றி 6பேர் 1ம் வகுப்பிலும் 26 பேர் 2ம் வகுப்பிலும் சித்தியடைந் துள்ளனர். 1984 கலவரத்தின் போது பாதிக்கப்பபட்ட அகதிகளுக்கும் முதலுதவிகளை மகளிர் குழு செய்துள்ளது.

இராணுவ நடவடிக்கையின் நிமித்தம் மகளிர் குழு தமது முழுமையான செயற்பாட்டைச் செய்ய முடியாத போதும் தட்டெழுத்து வகுப்பும் சிறுவர் பாடசாலையும் நடத்தி வந்துள்ளது.

வளர்ந்தோர் கல்வியின் 43 மகளிர் ஆளுமைத் தலைமைத்துவம், சுற்றாடல் சுகாதாரம் நோய்காரணி தடுப்பு, சுற்றாடல் சுகாதாரம் விவசாயக் கண்ணோட்டம், வீட்டுத் தோட்டம் தாய் சேய் போசாக்கு, சுத்தமாக வாழ்வு, முதலுதவி, புற்றுநோய்க்கான காரணங்கள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக விரிவுரைகள் விரிவுரையாளர் களினால் நடத்தப்பட்டு சான்றிதல் வழங்கப்பட்டது. மகளிர்

தினம் கொண்டாடப்பட்டு 23.7.85 மகளிர் ஆண்டு விழாவும் கொண்டாடப்பட்டது.

## பணியாளர் நலன்புரிச் சங்கம்

இச் சங்கம் 1982 இல் ஆரம்பிக்கப் பட்டது. சங்கப்பணியாளர், சங்கத்தின் உறுப்பி னர், அவை அங்கத்தவர், சேம மூலம் நிதி திரட்டப்பட்டது இச் சங்கத்தின் சேவைக ளாவன.

1. அங்கத்தவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கப்பட்டு தவணையடிப் படையில் அறவிடுதல்.

2.சேவை முடிவுறும் பணியாளருக்கு பாராட்டு விழாவும் கௌரவிப்பு அன்பளிப்பும் செய்தல்.

3.சேவைக்காலத்தில் மரணமடையும் அங்கத்த வர்களுக்கு இறுதிக்கிரியை ரூபா 10,000/= வழங் குதல்.

4.பணிக்கொடை வருடம் 100/= சங்கத்திட மிருந்து பெற்று அங்கத்தவர்களுக்கு வழங்கியது. தற்பொழுது இது 250/= ஆக அதிகரிக் கப்பட்டுள்ளது.

5.நலன்புரிச்சங்கம் காலத்துக்குக் காலம் அங்கத்தவர்களுக்கு தேவையான அத்தியா வசியப் பொருட்களைப் பெற்று கடன் அடிப்படையில் வழங்கி வருகின்றது.

மேற் குறித்தவற்றை ஒப்பு நோக்கும் பொழுது பாதகமான விளைவுகளை களைவதென்பது கூட்டுறவாளர்களுக்கு கடினமானதோர் பணியன்று. கூட்டுறவாளர்கள் அனைவரும் ஒருமித்துச் செயற்படின் பல்வேறு பிரச்சனைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும். கூட்டுறவுச் சங்கங்கள் தாம் மக்களுக்காக இயங்கும் புனிதமான அமைப்பு என்பதை மக்களுக்கு நிரூபிக்க வேண்டும். இதற்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் மத்தியில் நிலவும் விரும்பத்தகாத நிகழ்வுகள் களையப்பட வேண்டும். இதற்கு நாணயம், நேர்மை, நம்பகத் தன்மை உள்ளவர்கள் கூட்டுறவு அமைப்புக்களில் சேர்த்துக் கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும். முகாமையின் போது முரண்பாடுகள் எழுவது வழக்கம். ஆனால் இந்த முரண்பாடுகளைக் களைவது முகாமையின் ஒரு கலையெனக் கருதாது தமக்குள் முட்டிமோதிக் கொள்ளும் நிலைமையை பல சங்கங்களில் காண முடிகிறது. முரண்பாடுகள் சங்க நன்மைக்காக இடம்பெற வேண்டுமே ஒழிய சங்க நடைமுறைகளை பாதிக்கும் வண்ணம் அமையலாகாது.

இவ்வாறு மேற்கூறப்பட்டவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட்டால் சிறந்த கூட்டுறவு அமைப்புக்களை கட்டியெழுப்ப முடிவதுடன் ஏற்படவுள்ள சவால்களுக்கு முகங்கொடுத்து கூட்டுறவு சங்கங்களும் வியாபாரத் துறையில் வீறுநடை போட முடியும் என்பதை நிரூபிக்க கூட்டுறவு அமைப்புக்கள் முன்வர வேண்டும்

01. தலைவரும் பொன்.கணேசமூர்த்தி அவர்களும்

02. கூட்டுறவு பரிசோதகர் ஏ.சின்னத்தம்பி மங்களவிளக்கேற்றல்

04. திரு. ஆ.சி. நடராசா அவர்கள் உரை

05. தலைவருடன் கூட்டுறவு ஆணையாளர் ஒஸ்கின் பெர்னாண்டோவு சட்டத்தரணி ச.மு. ஆலாலசுந்தரம் அவர்களும்

06. தலைவர் கலாநிதி A.T. ஆரியரத்னாவை வரவேற்றல்

07. சங்க உப தலைவர் மா. நாகேந்திரசீலன் உரை

08. திரு.க.க.வேலாயுதபிள்ளை (கி.சே) கிளை 8. திறத்தல்

09. 25 வருட கூட்டுறவுச் சேவையில் தங்கப்பதக்கம் பெற்ற பணியாளர்களும் விருந்தினர்களும்

10. புனர்வாழ்வுக்கழகத் தலைவர் திரு. சு. பரமநாதன்

1 . மாவட்டக் கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி உரை



1



5



9



2



6



10



3



7



11



4



8



12

# அறிவுசார் மூலதனம்
# Intellectual Capital

க.தேவராஜா
தலைவர்,
வணிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## 1.0 அறிமுகம்

மனிதவள முகாமைத்துவமே நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையானது என தற்கால முகாமைத்துவம் கருதுகின்றது. உயர் உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்ள மனிதவள முகாமைத்துவம் வகை செய்வதாக உள்ளது. இதன் காரணமாகவே அறிவுசார் மூலதனத்தின் மீது தற் கால நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன. ஒவ்வொரு ஊழியர்களிடையே தகைமையினையும் அர்ப்பணிப்பினையும் ஏற்படுத்த முயற்சிப்பதே அறிவுசார் மூலதனமாகும். அல்லது Intellectual Capital = competency + commitment என்ற சமன்பாடு நிறுவப்பட்டுள்ளது. நிறுவனமொன்றின் இலக்கினை அடைவதற்கு தன்னை அர்ப்பணித்த பயிற்றப்பட்ட ஊழியர்களே நிறுவனமொன்றுக்கான பிரதான சொத்தாகும். அறிவுசார் மூலதனமே நிறுவனமொன்றின் தேய்வுக்கு உட்படாத பெறுமானம் அதிகரித்துச் செல்லும் தன்மை கொண்டதாகவும் குறைவடையாப் பண்பு கொண்டதாகவும் காணப்படும். அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட ஊழியர்கள் என்றுமே தன்னிச்சையான ஒத்துழைப்பை வழங்குபவர்களாக இருப்பர். இதன் காரணமாகவே தற்காலத்தில் அதிவுசார் மூதனம் என்பது தற்கால நிறுவனங்களின் வளர்ச்சிக்கு மிக வேண்டப்படுவதாக உள்ளது.

## 2.0 வரைவிலக்கணம்.

ஊழியர்களின் தகைமையும் அர்பணிப்புத் தன்மையும் நிறைந்ததுதான் அறிவுசார் மூலதனமாகும் தகைமை அதிகமாகவும் அர்ப்பணிப்புத் தன்மை குறைவாகவும் இருந்தால் திறமையுள்ள ஊழியர்கள் செய்வதற்கு எதுவும் இருக்கமாட்டாது. மாறாக உயர்ந்த அர்ப்பணிப்பும் குறைந்த அளவான தகைமையும் காணபபட்டால் திறமை குறைந்தவர்களே பெரும்பாலான வேலைகளைப் பெற்றுக்கொள்வர். இவை இரண்டுமே ஆபத்தானவை என்பதால் அறிவுசார் மூலதனமானது இரண்டையுமே அதாவது தகைமையினையும் அர்ப்பணிப்பையும் உச்சமாக வைத்துக்கொள்ளும் நடவடிக்கையே அறிவுசார் மூலதனமாகும். இத்தகைய அறிவுசார் மூலதனத்தை உச்சமாக்குவதன் மூலம் வாடிக்கையாளர் நம்பிக்கை, உயர் உற்பத்தித் திறன், இலாபத் தன்மையின் அதிகரிப்பு ஆகியவற்றை அடைத்து கொள்ள முடியும்.

அறிவுசார் மூலதனத்தைக் கொண்டிருப்பதனூடாக பின்வரும் பண்புகளை நிறுவனம் கொண்டி ருக்க முடியும்.

ஏனைய சொத்துக்கள் போல் அல்லாது அறிவுசார் மூலதனத்தின் பெறுமதி தொடர்ச்சியாக உயர்ந்து செல்லும்.

அறிவுசார் மூலதனத்தின் பண்புக்கேற்ப ஊழியர்களின் வேலைத்திறன் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும்.

அறிவுசார் மூலதனத்தைக் கொண்டுள்ள ஊழியர்கள் தொண்டர்கள் போல் தன்னலமற்ற சேவையை வழங்க முன்வருவதனால் அர்ப்பணிப்பு பெருகிவரும்.

அறிவுசார் மூலதனத்தின் வழியாகவே முகாமையாளர் உலகளாவிய போட்டி, நுகர்வோரின் அதிகரித்த தேவைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்ய இயலும்.

அறிவுசார் மூலதனத்தின் மூலமாகவே நிறுவனத்தின் நோக்கத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஊழியர்களை உருவாக்க முடியும்.

அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களே ஊழியர்கள் கூட்டிய இயங்க வகைசெய்யும்.

என்ற வகையில் அறிவுசார் மூலதனத்தின் பண்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

## 3.0 தகைமையை அதிகரித்தல்

அறிவுசார் மூலதனத்தில் தகைமையை அதிகரித்தல் என்பது ஒரு முக்கிய பண்பாகும். இதன்படி திறமைகளை வியாபார தந்திரோ பாயங்களுக்கு ஏற்ப வரிசைப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் போட்டித் தன்மையானது பல பொறிமுறைகள் ஊடாக வளர்க்கப்பட வேண்டும். பின்வரும் ஐந்து பண்புகளும் தகைமையை வளர்ப்பதற்கு பெரிதும் உதவும்.

### 3.1 வாங்குதல் - Buy

திறமையான நபர்களை உள்வாங்குதல், தெரிவுசெய்தல் ஆகியவற்றைக் குறைப்பதே வாங்குதல் என்பதாகும். இந் நடவடிக்கை புதிய எண்ணங்களை உருவாக்குதல், பழைய கலாசார முறைகளை நீக்கிவிடுதல் என்பவற்றை அடக்கும், புதியவர்களை உள்வாங்குவதன் மூலம் நிறுவனத்திற்கு புதிய சிந்தனை ஆற்றல் கொண்டவர்களை அதிகரிப்பதுடன் புதிய தந்திரோபாயங்களும் உருவாக்கப்பட முடியும்.

### 3.2 உருவாக்கல் - Build

முகாமையாளர்கள் நிறுவனத்தில் தொடர்ந்திருக்கக்கூடிய வாறும் ஊழியர்கள் புதிய நுட்பங்களைத் கற்றுக் கொள்ளக் கூடியவாறும் நடவடிக்கை எடுப்பதே இதுவாகும், வழிகாட்டுதல், பயிற்சியளித்தல் போன்றவற்றுக் காக நிறுவனங்கள் பெருமளவு நிதி வசதிகளை ஒழுங்கு செய்தல் இத்தகைய நிலையை அடைவதற்கேயாகும். பாரிய நிதிச் செலவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஊழியர்களி டையே புதிய எண்ணங்களை உருவாக்கவும் நடத்தைகளை மாற்றியமைக்கவும், முகாமை யாளர்களுடன் இணைந்து பணியாற்றவும் தூண்டும் எனக் கொள்ளப்படுகின்றது.

### 3.3 பெறப்படல் - Borrow

நிறுவனங்கள் புதிய எண்ணங்கள், உபகரணங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நடவடிக் கையே இதுவாகும். வெளியிலிருந்து ஆலோசனைச் சேவை (Consultancy Service) பெறுவது இதில் முக்கியம் பெறுகின்றது. நிபுணர்களை வரவழைத்து கருத்துக்களைப் பரிமாறுதல், கருத்துக்களை நாடாத்துதல், புதிய வடிவமைப்புக்களை உருவாக்குதல் போன்ற வற்றை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளலே பெறப்படலாக அமைகின்றது. இந்த நிலையில் பெருமளவான பணச் செலவும் நேரவிரையமும் ஏற்படலாம். சொந்தமாக எண்ணங்களை உருவாக்கும் திறன் மழுங்கடிக்கப்படலாம். இருந்த போதும் வெளி நிறுவனங்களது அனுபங்களைப் பெற்றுக் கொள்வது அறிவுசார் மூலதனத்தின் விருத்திக்கு அடிப்ப டையில் அமையும்.

### 3.4 நீக்குதல் - Bonnce.

நிறுவனங்கள் நியம பெறுபேறுகளை அடையாத நபர்களைக் கொண்டிருப்பது நன்மை தரமாட்டாது என்பதனால் அவர்களை நீக்கிவிடுதல் வேண்டும். சில நேரங்களில் ஊழியர்கள் திறமைகளை வளர்க்கவும், புதிய நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவும் தவறிவிடு கின்றனர். வேறு சில சமயங்களில் சரியான முறையில் மாற்றங்களை அறிமுகப்படுத்தத் தவறியவர்களை நிறுவனங்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. அதாவது இவர்கள் நிறுவனத்தில் தொடர்ந் திருப்பது பெரும் பாதிப்பைக் கொண்டுவரும் என்தாகும்.

### 3.5 கட்டுதல் - Bind

பயிற்றப்பட்ட ஊழியர் எல்லா மட்டங்க ளிலும் நிறுவனங்களுக்கு முக்கியமாவர். இத்தகையவர்களை சிரேஷ்ட முகாமையாளர் களுடன் பழகவிடுவதன் மூலம் அவர்களின் திறமையை அறிவது, அணுகு முறைகளைக் கற்றுக் கொள்வது, தொழில்நுட்ப அறிவைப் பெறுவது போன்றன சாத்தியமாகின்றன. நிறுவனத்தை விட்டு வெளியேறுகின்ற ஊழியர் களை பேட்டிகண்டு அவர்களைத் தொடர்ந்து நிறுவனத்தில் பணியாற்றுவகற்காக தூண்டுவது கட்டுதல் என்பதைக் குறிக்கின்றது. இதன்படி தொழிலாளர் புரள்வை இழிவுமட்டத்தில் வைத்துக்கொள்ள முடியும்.

## 4.0) அர்ப்பணிப்புக்கு எதிராக அழித்தல் - (Commitment Versus Burnout.)

அறிவுசார் மூலதனத்தை அதிகரிப் பதற்கான இன்னொரு வழியே அர்ப்பணிப்பு என்பதாகும் கூடுதலான அர்ப்பணிப்பினைக் கொண்ட ஊழியர்கள் பொறுப்புக்கள் இல்லாத போதும் நன்றாக பணியாற்றுவர். தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்கள் திறமைசாலிகளாக இருந்தாலும் ஒரு குழுவைப் போல் பெறுபேறு களைப் பெறமுடியாது. இதன்படி ஊழியர்கள் எவ்வாறு மற்றையவர்களைப் பற்றி உணர்கின்றா ர்கள். எவ்வாறு அவர்களுடன் நடந்துகொள்கி றார்கள் என்பது கவனிக்கப்படுகின்றது. மூலதனம் அதிகரிப்பால் ஊழியர்களின் பொறுப் புக்கள் குறைந்துவிடக் கூடும்.

ஊழியர்களின் பொறுப்புக்களை உயர் த்து வதற்குப் பல வழிகள் பின்பற்றப்பட முடியும். உலகளாவிய போட்டி, வாடிக்கையாளர் நலன், நெகிழும் தன்மை, உயர் கற்றல் செயற்பாடு, கூடிய குழுச் செயற்பாடு, கூடிய உற்பத்தித்திறன் என்பவற்றை ஏற்படுத்தும் பொறுப்பு அவசிய

மாகின்றது. இந்த அனைத்து சவால்களையும் சமாளிப்பதற்கு அறவுசார் மூலதனமானது ஊழியர்களிடையே உடல், உள எழுச்சிகளை அதிகரிக்க வேண்டியு ள்ளது. பெரும்பாலான முகாமையாளர்கள் இவற்றைக் கருத்திற் கொள்ளாது ஊழியர்களிடம் தொடர்ந்து மேலதிகமான செயற்பாடுகளையே எதிர்பார்க் கின்றனர். இதனால் ஊழியர்களிடம் சோர்வுத் தன்மையும் பொறுப்பற்ற தன்மையும் உருவாக முடியும். எப்பொழுதுமே ஊழியர்களிடம் அர்ப்பணிப்பு குறைவாக இருக்குமாயின் அதற்கான காரணத்தை கண்டறிதல் வேண்டும். இளந்தொழிலாளர் விரைவாக தொழிலின் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் என்பதனால் அதனை நிவர்த்திக்க -நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிறுவனங்களிலே ஊழியர்களது அர்ப்ப ணிப்பை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்படமுடியும். குறிப்பாக

**i) தேவைகளைக் குறைத்தல்** - Reduce Demand

ஊழியர்கள் வேறுபட்ட முக்கியத்து வத்தின் அடிப்படையில் தேவைகளைக் கொண்டிருக்க முடியும், இதனால் தேவையற்ற வற்றை நீக்கி அவசியமான தேவைகளை மட்டுமே கொண்டிருக்க வகைசெய்ய வேண்டும்.

**ii) முதன்மைப்படுத்தல்** - Priorities.

இதன்படி சில தேவைகள் நீக்கப் பட்டுவிடும் ஒரு குழு நல்ல பெறுபேறுகளைப் பெறுமாயின் மற்றைய ஊழியர்களும் அதனுடன் இணைவதன் மூலம் நல்ல பெறுபேற்றினைப் பெறுவர். இதன்படி குழுவுக்கு பயிற்சி வழங்கப்படும் போது மற்றைய ஊழியர்களும் அதில் இணைந்துகொள்வர்.

**iii) வளங்களை அதிகரித்தல்** - Increase Resources.

வளங்களின் பற்றாக்குறையானது ஊழியர்களிடையே அதிருப்தியைக் கொண்டு வரும், இந்த அதிருப்தி அர்ப்பணிப்பினைக் குறைத்துவிடும் என்பதனால் வளங்களை இயலுமான வரை அதிகரித்தல் அவசிய மாகின்றது.

**iv) தந்திரோபாயம்** - Strategy

ஊழியர்கள் தொலைநோக்குக் கொண்ட வர்களாக மாற்றப்படுதல் வேண்டும். தொலை நோக்குக் கொண்ட ஊழியர்களே கடுமையான வேலைசெய்யும் மனப்பாங்கையும் அர்ப்பணிப் பினையும் கொண்டிருப்பான்.

**v) வேலையில் போட்டி** - Challenging Work

ஊழியர்களிடையே புதிய திறன்களை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் வேலை யில் போட்டியைக் கொண்டுவருதல் வேண்டும். இதன் மூலம் ஊழியர் அர்பணிப்பு தானாகவே உருவாகும்.

**vi) குழுவேலை** - Team Work

ஊழியர்கள் ஒன்றாக கூடி வேலை செய்யும் நிலையை உருவாக்குதல் வேண்டும். குழுக்களாக வேலைசெய்தல் ஊழியர்களி டையே அர்ப்பணிப்பினைப் பெரிதும் வளர்க் கின்றது.

**vii) வேலைக் கலாச்சாரம்** - Work cultures

இது வேலை செய்வதற்கான சூழலை உருவாக்கும் நடவடிக்கையாகும். நல்ல வேலைச் சூழ்நிலையில் பணியாற்றும் ஊழியர் கள் அர்ப்பணிப்பினை வளர்த்துக் கொள்வர்.

**viii) இலாபப் பங்கு**

நிறுவனங்கள் உழைக்கும் இலாபம் *தனியே முதலீட்டாளருக்கு மட்டுமன்றி ஊழியருக்* கும் பகிரப்பட வேண்டும். நிறுவனத்தின் இலாப உழைப்புக்கு பெரிதும் பாடுபட்டவர்கள் ஊழியா களே என்பதனால் அவர்களது அர்ப்பணிப்பை மேலும் உயர்த்த இலாபத்தில் பங்குபெறுதல் வேண்டும்.

**ix) பயிற்சியும் அபிவிருத்தியும்.**

ஊழியர்கள் தமது வேலையைத் திறனுள்ளதாக மாற்றுவதற்கு பயிற்சி மிக அவசி யமாகும். இப் பயிற்சியே அவர்களது வேலை யைத் திறமையாக மேற்கொள்வதனை உறுதிப்ப டுத்துவதுடன் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பு மனப்பான்மையையும் வளர்க்கும்.

**x) ஆள்நோக்கிய தலைமைத்துவம்** - Concern for People

ஊழியர்களது கௌரவத்தை பேணக் கூடிய நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும், நிறுவனத்தில் இலாப உழைப்பையே கருத்தில் கொள்ளாது ஊழியர் நலனில் அக் கறை காட்டும் நிர்வாக முறைமை அர்ப்பணிப்பை வளர்க்க உதவும்.

**xi) தொடர்பாடல்** - Communication

ஊழியர்களுடன் தொடர்ச்சியாக செய்திப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் சாத்திய மானது அர்ப்பணிப்பினை அதிகரிக்கின்றது. திற னுள்ள தொடர்பாடலைக் கொண்ட நிறுவனங்க ளெல்லாம் ஊழியர் அர்ப்பணிப்பனை உச்ச அளவில் கொண்டிருப்பதனைக் காணமுடியும்.

### xii) தொழில்நுட்பம் - Technology

ஊழியர்களது வேலைகளை இலகுவாக்கக் கூடிய தொழில்நுட்பம் புகுத்தப்படுமானால் அது ஊழியர்களது அர்ப்பணிப்பினை உயர்த்தும், இதன்படி புதுமைகளைப் புகுத்துதல் எப்பொழுதுமே ஊழியர்களுக்கான வேலையை இலகுவாக்கி அவர்களிடையே வேலைக்கான அர்ப்பணிப்பினை உயர்த்தும்.

### xiii) கட்டுப்பாடு - Control

ஊழியர்கள் எப்படித் தமது வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இங்கு கட்டுப்பாடாகும். ஒவ்வொரு ஊழியரும் தான் செய்ய வேண்டிய வேலையின் அளவை அறிந்து கொள்டார்களாயின் அதுவே அவர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பைக் கொண்டுவரும்.

மேலே கூறப்பட்ட காரணிகள் எல்லாம் ஊழியர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பை விருத்தி செய்கின்ற காரணிகளாகக் கொள்ளப் படும் ஜப்பானிய முகாமைத்துவம் வேலை நிறைவேற்றத்தில் அதிகம் வெற்றிபெறக் காரணம் அவர்களிடையே தோற்றுவிக்கப்படும் விசுவாசமும் அர்ப்பணிப்புமேயாகும்.

## 5.0 முடிவுரை

அறிவுசார் மூலதனமானது தற்கால மனிதவள முகாமைத்துவத்தில் பிரபலம் பெறுவதாகும், ஊழியர்களிடையே தகைமையும் அர்ப்பணிப்பும் உயருமாயின் அது அறிவுசார் மூலதனத்தை விருத்திபெறச் செய்யும் எப்பொழுதுமே அறிவுசார் மூலதனத்தின் அங்கமான அர்ப்பணிப்பை விருத்திசெய்ய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். குறிப்பாக நிறுவனத்தைவிட்டு வெளியேறுவோர்களிடமிருந்து தகவலைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதே நேரம் குடும்பத்தின் தேவைகளை நிறுவனங்கள் பொறுப்பேற்று பூர்த்தி செய்தல் வேண்டும். அத்துடன் பிரதான தீர்மானங்களில் ஊழியர் பங்குபற்றலை அதிகரித்துக் கொள்ளல் வேண்டும். இவற்றின் அடிப்படையில் ஊழியர்களின் அர்ப்பணிப்பு உயர்த்தப்பட முடியும், எனவேதான் அர்ப்பணிப்பினையும் ஊழியர் தகைமையினையும் அதிகரிப்பதனால் உருவாகும் அறிவுசார் மூலதனம் ஒரு நிறுவனத்தில் விருத்தி செய்யப்படுமாயின் அது ஊழியர் நிர்வாகத்தை சிறப்படையச் செய்துவிடும். இது நிறுவனங்களின் இலக்கினை அடைவதற்கான மிகச் சிறந்த வழியாக அமைவதுடன் உற்பத்தித் திறனை மிகச் சுலபமாக உயர்வடையச் செய்துவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

References:-

1.) Quinn J.B.Intelligent Enterpizer, New York Press, 1992.
2.) Drucker PF. Toward the New Organisation, Sanfrancisco Jossey - Bass - 1997.
3.) Stewart T.Intellectual Capital, New York, Doubleday Currency - 1997
4.) Urichid, Greenfield.H, " From Training and Development to Development old Learning" American Journal of Management Development. vol 1995.

# கல்விச் சிந்தனையும் செயற்பாடும் நேற்று, இன்று, நாளை

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

இத்தலைப்பில் கல்விச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் கடந்த காலங்களிலிருந்து எவ்வாறு சமூக, பொருளாதார, காலாசார மாற்றங்களுக்கேற்ப வளர்ச்சியடைந்தன? மாற்றம் பெற்றன என்பதை சுருக்மாக நோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும். வெறுமனே கால மாற்றங்கள் மட்டும் கல்விச் சிந்தனையில் புதிய வளர்ச்சிகளை ஏற்படுத்தி விடுவதில்லை. மனித சமூக வரலாற்றில் ஏற்பட்டு வந்துள்ள பொருளாதார, சமூக, பண்பாட்டு மாற்றங்கள் அவை ஏற்படுத்திய தேவைகள் என்பவற்று க்கேற்ப கல்விச் செயற்பாடுகளில், குறிப்பாக நிறுவன முறையாக அமைந்த பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வி நிலையில், மாற்றங்கள் ஏற்பட்டன. கல்விச் சிந்தனைகளை வகுத்தவர் களும் சூனியத்திலிருந்து அவற்றை உருவாக்க வில்லை, தமது கால சமூக, பொருளாதார, கலாசார சூழல், நிலைமைகள், தேவைகள் என்பவற்றைப் பொறுத்தே தமது கல்விச் சிந்தனைகளை உருவாக்கினர்.

மற்றொரு விடயத்தையும் வலியுறுத்த வேண்டும். சமூக மாற்றத்துக்கும் மேம்பாட்டுக்கும் கல்வி வளர்ச்சி தேவை என்பதை மறுப்பதற்கில் லை. அதே வேளையில் கல்விச் செயற்பாடுகளும் சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களைத் தொடர்ந்தே புதிய வடிவம் பெறுகினறன என்பதும் கல்வி வரலாறு கண்ட உண்மையே யாகும்.

இத் தலைப்பில் பாடசாலைக்கல்வியின் சகல அம்சங்கள் - அவற்றுக்கடிப்படையான சிந்தனைகள் எவ்வாறு மாற்றமைடைந்தன. என்பதை நோக்குவோம்.

## கல்வியின் விரிவு

நேற்றைய அல்லது கடந்த கால நோக்கில் பார்க்கும்போது 20ஆம் நூற்றாண்டு வரை சிந்தனை கல்வி ஒரு சிலருக்குரியது என்பதாகும். இது மேலைச் சமூகங்களுக்கும் கீழைச்சமூகங்களுக்கும் பொதுவானவை. நவீன கால வரலாற்றில் கூட ஐக்கிய அமெரிக்காவில் வாழும் ஆபிரிக்க அமெரிக்கர்கள், தென்னாபிரிக்க கறுப்பு இனத்தவர்கள், இந்தியாவில் தலித் மக்கள் என பல்வேறு நாடுகளிலும் கல்வித்துறையில் பாரபட்சத்துக்குள்ளாகி யிருந்த மக்கட்குழுவினர் அதிகம், கீழ்ப்பிரிவு களைச் சேர்ந்த மக்கள், "உயர்குல" மக்களுக் குரிய கல்வி நெறிக ளையும் படித்து பயன்பெறும் தரமுடையவர்கள் அன்று. கல்வி இயல்பாகவே அவர்களுக்கு வராது, சில சிறுபான்மையினர்கள் இன்னும் முழுமையாகப் பரிணாமம் அடையாதவர்கள், அவர்களுக்கு உயர்தரமான ஏட்டுக்கல்வி எட்டாதென்றும், பொருத்தமற்றதும் கூட என்ற கருத்துக்கள் நவீன காலங்களுக்கும் உரியனவே.

குடியேற்ற ஆட்சியாளர்கள் சிறந்த கல்வி, வாழ்கைப் பயனுடைய உயர்கல்வி யாவும் ஒரு சிலருக்கே என்பதை அதிகார பூர்வமாக நடைமுறைப் படுத்தினர். இதன் விளைவாக ஆங்கிலக் கல்விகட்டணம் செலுத்த வசதியுள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது "யாவருக்குமே ஆங்கிலக் கல்வி" என்ற பேச்சுக்கே ஆங்கில ஆட்சியல் இடமிருக் கவில்லை. ஆசிய, ஆபிரிக்க கண்டங்களின் குடியேற்ற நாடுகளில் ஏறத்தாழ இதே கொள் கைகள் கடைப்பிடிக்கப்பட்டது. இந்தியா வில் ஒரு சில வசதியடைந்த இந்தியர்களுக்குக் கல்வி வழங்கி "ஆளுகின்ற வெள்ளையர் களுக்கும் ஆளப்படுகின்ற பாமர இந்தியர்களுக் கும் பலமாக விளங்கக்கூடிய ஒரு புதிய மத்திய வகுப்பினரை உருவாக்கியது ஆங்கிலேயர் கால கல்விக் கொள்கையாக அமைந்தது.

இதற்கு அடுத்த கட்டத்தில் 2ம் நூற்றாண்டின் முற்பகுதி தொடக்கம் கல்வி மனிதனின் பிறப்பு நிலை அடிப்படை உரிமை: அரசாங்கங்கள் ஒன்பதாண்டுக் கல்வியையாவது யாவருக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் வழங்க வேண்டும் இதில் சாதி,மத வேறுபாடு களுக்கு இடமில்லை. நாடுகளின் அபிவிருத் திக்கு அனைத்து மக்களின் பங்களிப்பும் தேவை அனைவரும் இப்பங்களிப்பினைச் செய்ய கல்வியறிவு அவசியம்: கல்வியறிவுடையவர் களே தேசிய சொத்து, கல்வி என்பது பொருளா தாரப் பயனுடைய மனித வள விருத்திக்கு உதவும் : சட்டத்தின முன் யாவரும் சமம்: எனவே சகலருக்கும் கல்வியுரிமை உண்டு: கல்வியின் மூலம் தனது ஆற்றலையும், அறிவையும் பெருக்கிக் கொள்ள உரித்துடையவன்; சனநாய கப் பாங்கிலான சிவில் சமூகங்களை அமைக்கப் பரவலான கல்வி தேவை: இவ்வாறு ஏற்பட்ட சிந்தனை மாற்றம் அதற்கு துணையாக அமைந்த சமூக, பொருளாதார வளர்ச்சிகள் யாவருக்கும் குறைந்த பட்சம் ஒன்பதான்டு அடிப்படைக் கல்வி என்ற ஜனநாயகப் பாங்கான கல்விச் சிந்தனைக்கு வழிவகுத்தன. கல்வி பெற உரிமையும் தகுதியும் அற்றவர்கள் எனச்

சூட்டப்பட்ட வகுப்பினர் அனைத்து கல்வி வாய்ப்புக்களுக்கும் உரித்துடையவர்களாக்கப் பட்டனர். கல்வித்துறையில் சாதிப் பெயரை உச்சரிப்பதே குற்றமாக்கப்பட்டது. இது சனநாயக சித்தாந்தங்களுக்கு மட்டுமன்றி காலங் காலமாக ஒடுக்கப்பட்டு வந்த மக்களுக்கும் கிடைத்த பெரிய நிவாரணமாகும்.

மேலை நாடுகள் அபிவிருத்தியடைந்த செல்வந்த நாடுகளாயின. மரபு வழிப்பண்பாடு பேணிய கீழைத்தேச மற்றும் தென்னாசிய நாடுகள் உதவிநிதி வேண்டி மேலைநாடுகளின் கட்டுப்பாடுகளுக்குள்ளாகின்றன. மேலைநாடுகள் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற நெப்போலியன் காலக் கோட்பாடுகளின் அடிப்படையில் தனிமனித சுதந்திரத்திற்கு இடமளித்தன. இதன்விளைவாக அனைத்து சமூக உறுப்பினரும் சமமான சுதந்திரத்துடன் வேறுபாடின்றி அபிவிருத்தி முற்சியில் பங்கேற்க முடிந்தது. ஆனால் கீழை நாடுகளில் நிலவிய ஆண்டான் அடிமை/ குடிமை என்ற Master - Servant சமூகத் தொடர்புகள், மனிதகலாசார மேம்பாட்டுக்கு உகந்தவையல்ல: அனைத்து சமூக உறுப்பினர்களும் வகைப்படுத்தப்பட்டு கல்வி வழங்கப்படும் போது உண்மையான ஆற்றல் பல வெளிப்பட வாய்ப்புஇரா. இந்த மானிய முறைப்பண்புகள் - நில உடமையாளன், நிலமற்ற விவசாயி - இன்றும் கூட கீழைத்தேச (குறிப்பாக இந்திய) சமூகங்களில் நிலைபெற்றுப் பின்தங்கிய வகுப்பினரின் கல்வி வாய்ப்புகளுக்கு எதிராகச் செயற்படுகின்றன. கீழைநாடுகள் அபிவிருத்தியில் மேலை நாடுகளை எட்டாமைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். கீழைத்தேய சமூகங்களில் தேசிய அபிவிருத்தியை விட சாதி, இன பேதங்கள் பற்றிய சிந்தனைகளே வலுப்பெற்று அவற்றின் பொருளாதார, நாகரிக வீழ்ச்சிக்குக் காரணமாயின.

கல்வியின் விரிவை உலகளாவிய போக்காகக் கூறும் போது உயர்கல்வி பற்றியும் கூறவேண்டும். ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் உயர்கல்வி வயதெல்லையினரில் 60 சதவீதமானவர்களாவது உயர்கல்வி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்: எமது நாடுகளில் யாவருக்கும் அடிப்படை ஆரம்பக்கல்வி என்றால் ஐக்கிய அமெரிக்காவில் 'யாவருக்கும் உயர்கல்வி' - Universal higher education - என்ற கோரிக்கையும் கருத்தாக்கமும் 1970 களிலேயே உருவாகிவிட்டன. உயர்கல்வியின் விரிவுக்கான சில விபரங்கள்:

| நாடுகள் | உயர்கல்வி வயதெல்லையினரில் உ. கல்வி கற்போர் % |
|---|---|
| 1. மேற்கைரோப்பிய நாடுகளில் (இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி) | 25% வரை |
| 2. கிழக்காசிய, முன்னேறிய நாடுகளில் (சிங்கப்பூர், தைவான்) | 8% வரை |
| 3. தென்னாசிய நாடுகளில் (இந்தியா, பாகிஸ்தான்) | 5% வரை |
| 4. இலங்கை | 2 % வரை |

ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது இது குறைந்த சதவீதமாயினும் இப் புள்ளிவிபரங்கள் கல்வியின் விரிவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நிச்சயமாகக் காட்டுகின்றன.

வளர்முக நாடுகள் அனைத்தும் இத் தசாப்தத்தின் இறுதிக்கு முன்னராவது 5- 14 வயதெல்லையிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் ஒன்பதாண்டு அடிப்படைக்கல்வியை வழங்கவுள்ளன. நடைமுறைப்பிரச்சினைகள் எவ்வாறிருந்த போதிலும் யாவருக்கம் அடிப்படைக் கல்வி என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

பாடசாலைக் கல்வியைப் பல்வேறு தரப்பினர் மத்தியில் விரிவுபடுத்தும் இன்றைய சிந்தனையுடன் யாவருக்கும் எழுத்தறிவு, யாவருக்கம் விஞ்ஞானக் கல்வி, யாவருக்கம் கணினிக் கல்வி, வாழ்நாள் முழுவதும் கல்வி தேவை என்பதை வலியுறுத்தும் வாழ்க்கை நீடித்த கல்விக் கோட்பாடு, முறையான பாடசாலையில் கல்வியைக் கற்று முடிக்காதவர்களுக்குச் சமாந்திரமான திறந்த பாடசாலை (உதாரணம் இந்தியத் திறந்த பாடசாலை) போன்ற கருத்தாக்கங்களும் ஏற்பாடுகளும் 'கல்வி என்பது ஒரு சிலருக்கே' என்ற பழைய கோட்பாட்டை வழக்கொழியச் செய்து விட்டன.

இவ்வாறான கல்வியின் விரிவும் சனநாயகப்படுத்தலும் இத்துடன் முற்றுப் பெறாது

எதிர்காலத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்படவுள்ளன. வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் யாவருக்கும் அடிப்படைக் கல்வி என்ற இலக்கை அடையக் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இலங்கை தவிர்ந்த ஏனைய சக தென்னாசிய நாடுகளும் இம்முயற்சிகளில் ஈடுபட வேண்டியுள்ளது. மேலை நாடுகளில் கல்வியின் விரிவைப் பொறுத்த வரையில் உயர்கல்வியை விரிவாக வழங்கும் முறையிலும் தொழில் செய்யும் வளர்ந்தோருக்கு வாழ்நாள் முழுவதும் கல்வியை வழங்கும் முறையிலும் உயர்கல்வி அமைப்புகள் புதிய மாற்றங்களிலிருந்து வரும் வழமையான பட்டதாரி மாணவர்கள் தொகைக்கு ஈடான முறையில் கல்வியை முடித்துத் தொழில் புரியும் வளர்ந்தோரும் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து குறுங்காலப் பயிற்சி நெறிகளையும் பயிலுகின்றனர். 21ஆம் நூற்றாண்டில் பல்கலைக் கழகங்கள் இவ்வாறு வாழ்க்கை நீடித்த கல்வியை வழங்கும் கோட்பாட்டை நடைமுறை ப்படுத்த உள்ளமை புதிய நூற்றாண்டுக்கான பிரதானமான உயர்கல்வித்துறை மாற்றமாகும். மேலை நாடுகளில் பிறப்பு வீதம் வீழ்ச்சிடை ந்துள்ள நிலையில் வளர்ந்த மாணவர்களின் தொகை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய புதிய உயர்கல்வியின் போக்குகளின் காரணாமாக மரபுவழிப் பல்கலைக்கழகங்கள் புதிய மாணவர்கள், புதிய நிலைமைகள் என்வற்றுக்கேற்பத் தமது பாடத்திட்டம் கற்பித்தல்முறை என்பவற்றை மாற்ற வேண்டியுள்ளது. பல்வகைப்பட்ட மாணவர் தொகையின் அதிகரிப்பின் காரணமாக சுவீடனிலும் இங்கிலாந்திலும் 'ஆசிரியர் பணிக்கு மட்டும் ஆசிரியர்கள்' பல்கலைக்கழங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஏனைய விரிவுரையாளர்கள் போன்று ஆராய்ச்சிகளில் ஈடுபடத் தேவையில்லை. வேறு சில நாடுகளில் ஈடுபடத் தேவையில்லை. வேறு சில நாடுகளி பகுதி நேர ஆசிரியர்கள் ஏராளமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இம் மரபுவழிப் பல்கலைக்கழகங்கள் இருக்கத்தக்கதாக, இப்புதிய நிலைமைகளை எதிர் கொள்ளப் புதிய பல்கலைக்கழகங்கள் வெற்றிகரமாக ஏற்படுத்த ப்பட்டுள்ளன. (1)

சுருங்கக் கூறின், இடைநிலைக் கல்வி நிலையங்கள் புதிய நூற்றாண்டில் வளர்ந்தோர் உட்பட வேலையில் அமர்ந்துள்ள அனைவ ருக்கும் வாழ்க்கை நீடித்த கல்வியை வழங்கும் (Life long learning institutions) நிறுவனங் களாக மாற உள்ளன. கைத்தொழில் நிலையங்கள் கூட தமது ஊழியர்களுக்கு மறு பயிற்சியையும் புதிய பயிற்சியையும் வழங்கத் தமக்கெனக் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி வருகின்றன. (2)

அத்துடன் இன்றைய உயர்கல்வி விரிவாக்க முயற்சிகள் மேலைநாடுகளைப் பொறுத்த வரையில் பின்தங்கிய பிரிவினர், சுதேசிகள் (பழங்குடி மரபினர்) இன, மொழிச் சிறுபான்மையினர், பிற குறைபாடுகளை உடையோர் போன்ற சகலருக்கும் உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டவை. இம்மக்களுடைய ஆற்றல்களும் திறமைகளும் தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் வகையில் உயர்கல்வியினால் வளர்க்கப்படல் வேண்டும் என்பதே புதிய நோக்கு. இதே போன்று பெண்கள் உயர் கல்வியில் அனுமதி பெறவுள்ள தடைகள் அனைத்தும் நீக்கப்படல் வேண்டும் என்ற முறையிலும் புதிய முயற்சிகள் மேற்கொண்ட முறையிலும் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்ப டுகின்றன.

கல்வியின் விரிவு பற்றிய சிந்தனை மட்டுமன்றி வகுப்பறைக் கற்பித்தல் முறை, கல்வியின் நோக்கு, மாணவரை அணுகும் முறை, பாடசாலை நிர்வாகம் தொடர்பான சிந்தனை களில் ஏற்பட்டுவரும் மாற்றமும் பாடசாலையின் மரபுவழி அமைப்பை மாற்றி அமைத்து வருகின்றன.

**அடிக்குறிப்புக்கள்**

(1) பிரான்சில் வெவ்வேறு வகையான பல்கலைக்கழகங்கள் உண்டு. உதாரணமாக:
- The Instituts of universitaires de Technologie (IUT)
- Section de Technicians Superieurs (STS)

2. இவை Corporate Universities எனப்படும். Matorola, Medonalds, Bertelsmann, Lufthanga, Garman sofrwars giant sap ஆகிய பெருங் கம்பெனிகள் இவ்வாறான பல்கலை க்கழங்களை ஏற்படுத்திள்ளனர்.

இக்கல்விநிலையங்கள் பிற பல்கலைக் கழகங்களுடன் இணைந்து செயலாற்றுகின்றன.

# Development of an internal training system in a large co-operative organization

W.UPALI HERATH
RESIDENT REPRESENTATIVE FOR
SRI LANKA SWEDISH CO-OPERATIVE CENTRE

I feel that it is the best tribute to Mr. S.Sivamaharajah, an eminent co-operator from the North, if write on the subject for which he contributed during 1970s and '80s, when he was the President of the Tellippalai Multi Purpose Co-operative Society Ltd. He was known to me since that time, and had different relationships when I changed places from the time of serving as Principal, School of Co-operation, Project Director, ICA/SCC Project on the Training of Co-operative Trainer and the General Secretary, National Co-operative Council of Sri Lanka. He remained as the president of the Tellippalai MPCS over a decade and served as the President of the Jaffna District Co-operative Council and a Director of the national Co-operative Council of Sri Lanka subsequently. His distinction is the firm root he maintained in his village of Tellippalai serving his community all the time in spite of his national leader's position. He is a third generation of eminent co-operative leaders in the North after independence. On going conflict has not been any hindrance to his cooperative activities, and survived the problem, which some other Co-operative leaders from Jaffna could not manage. His stepping into the Parliament would certainly add one more co-operative leader who joined the national leadership, but I am certain that he would remain a co-operator working for the cause of co-operatives inside and outside the Parliament.

1. Survival of a co-operative organisations in the context of the on going open market system attached to globalisation process depends on two factors: How a co-operative organisation as a business enterprise constantly re position itself in the changing environment and how it could consolidate market power through alliances. The cycle of change in the socio economic environment has accelerated at least ten times in the 21st century from that of 18th century. The winner in the market, therefore, is the one who grasp the changing cycles and also the one who would be more proactive than re active in business.

   At the same time, the life cycle of a co-operative organisation too has changed over a period of time as any other business organisation. Today, the companies are mushrooming and also dying at the same rate. There are also long standing enterprises that have re generated themselves, by constant change of products, services, and cultures within the organisations etc.

   One Could ask 'Why the co-operatives are still surviving?' the co-operatives in Sri Lanka are still artificially kept alive by the state as in the case of Multi Purpose Cooperatives (MPCSs). The government channels its poverty alleviation programmes through cooperatives as well as essential services such as food contracts for security forces, food supplies for disturbed areas etc. However, most of the MPCSs are very sick. Some are dying. In keeping with the general decline of the economy, financial cooperatives too are facing problems of delinquency in debt recoveries.

The key factor lies with the ability of an organisation as to how fast it could the changes and adapt it self to it while responding positively. Therefore, the change has to be learn, adopted and practiced. In order to go through this process, the organisational behavior specialists have adopted two strategies in the modern enterprise systems: creation of learning organisations and recycling the life cycle of the organisation. I would comment on the learning organisation in keeping with the theme.

Peter Senge (In his book Fifth Discipline) describes a learning organisation as".. an organisation that is continually expanding its capacity to create its future. For such organisation, it is not enough merely to survive. 'Survival learning' or what is more often termed 'adaptive learning' is important - in deed it is necessary. But for a learning organisation, 'adaptive learning' must be joined by 'generative learning'. learning that enhances our capacity to create.

If an enterprise could not grasp the changes, it tends to get into problems, as the others who are proactive would win the market. Therefore, the organisational culture is essentially reposition itself to promote learning within the groups and also the stakeholders of the organisations. Rigid hierarchical structures preserved and nurtured would not be suitable for such a process, hence, the group systems should be promoted to undertake such changes. Senge used call it team learning.

The co-operatives in Sri Lanka have treated so called education as a welfare activity, as low priority given to the subject. Financial allocations for education are made from the profits of the organisation. In contrast, the private enterprises take training and development of human resource as a business activity of the company, thus allocating funds in the annual budget. Co-operatives have paid a big price for this dichotomy. Historically, the government undertook the subject for training and education for co-operatives as its own responsibility. Therefore up to 1960s, cooperative training and education centres were administered by the government. The national level training organisation was also set up as a branch of the Department of Co-operative Development.

The scenario changed gradually in late 1960s, when the training centres were handed over to the Co-operative Federation of Ceylon. However, they remained ill equipped and understaffed throughout. The Co-operative Federation survived with the meagre allocations made by the Commissioner of Co-operative Development from the Co-operative Development Fund. Until late 1980s, the Federation was dependent on the handouts from the Commissioner.

However, the Laidlaw Commission found that "...there is altogether too much learning at present towards purely theoretical...." Paulo Freire identifies this type of education as "Banking type of education". It is one way and depositing type which negates the association of trainees in planning or implementation of such training programmes. They do not address the problems the people are having in their organisations.

In such a situation, it is unrealistic to expect the co-operatives to be at par with the other enterprises in the improved organisational structures and the behavior in business.

2. In the above circumstances, it is necessary to emphasis the need to give vital importance to the establishment of a training and development function within co-operatives, without depending on the external agencies to provide the service. This is also all the more important in the context of the two distinct characteristics of co-operatives.

01. Co-operative organisation is a business enterprise with its own ethical behaviour.
02. Co-operative organisation is also a social enterprise depending on the enlightened membership and the staff.

In order to survive in the market and sustain a steady growth rate, the co-operatives should adopt new management strategies, through learning it receives from the external environment. The stakeholders should be competent enough to meet the challenges in the market. A training system evolved to suit such a task should live with the dynamics of the organisation. The learner in the system has to be developed to become critically conscious on the internal functioning of the enterprise so as enable to infuse developmental changes. However, the leaders and the executives in many cooperatives today would resist any increased budgets for training purposes. On the other hand, the stakeholders should have new insights into the issues confronting co-operatives. infuse developmental changes. However, the leaders and the executives in many co-operatives today would resist any increased budgets for training purposes. On the other hand, the stakeholders should have new insights into the issues confronting co-operatives.

Tellippalai MPCS (where Mr. Sivamaharajah was the President) and few other co-operatives in the country were engaged in an experimenting on the establishment of an internal training system. Based on such an experience one could draw lessons from the past.

Then how an internal training system in a co-operative organisation should be established?

It essentially represents the focus on objectives and the priorities of activities set by the management. It should deal with the training requirements in bringing about maximum productivity from the resources by using them effectively and economically. However, development of human resources cannot be achieved by launching a one sided effort from the point of view of the management, and it should have the involvement and the commitment of the trainees in deciding as to what they should learn and how they should learn. It is also necessary to keep in mind that the other components of the strategic plan of the organisation are interdependent and training is a part of it. These components too are influenced by the socio economic changes in a given time, in which, the co-operative has no control.

Another factor which is very important is the growing concern for measuring the effcetiveness of a system in terms of results, outputs or ends rather than the activities, processes or means.

This forces a facilitator to treat training as a dynamic prOcess rather than a static one. Therefore, the training systems prevailing in the training institutions as well as in co-operatives should undergo radical change in the philosophy of education as well as strategies.

The history of adult training has undergone from teaching technology to treating organisations

as learning organisations, passing through behavioural school and the humanist schools. However, synthesis of these approaches is required to determine the training strategies in a changing co-operative organisation. In this direction, the assumptions of Carl Rogers are still valid in formulating such a system.

* Human beings have natural potentiality for learning
* Significant learning takes place when the subject matter is perceived by the student as having relevance for his own purposes.
* Learning which involves a change in self organisation in the perception of oneself is threatening and tends to be resisted:
* Those learning which are threatening to the self are more easily perceived and assimilated when external threats are at a minimum:
* When threat to the self is low, experience can be perceived in differentiated fashion and learning can proceed:
* Much significant learning is achieved through doing:
* Learning is facilitated when the students participate responsibly in the learning process:
* Self initiated learning which involves the whole person of the learners' feelings as weak as intellect is the most lasting and pervasive:
* Independence, creativity, and self reliance are all facilitated when self criticism and self evaluation are basic and evaluation by others is of secondary importance.

(Freedom to Learn)

Therefore, the internal training system in a co-operative organisation should adopt two types of learning strategies:

1. Individual learning strategies
2. group based learning strategies

There are also two conditions that are to be considered for developing learning systems

1. On the job training
2. Off the job (institutional or class room) training

The other factor that has to be considered is that training cannot be taken in isolation. It should be an integral component of an organisational development or a management development programme. Training is a vehicle to realise other organisational objectives. Therefore, the training unit of the co-operative organisation should function as a supporting function for other units or components.

3. Considering the apathetic attitude towards training by the cooperative business organisations in Sri Lanka, it is necessary to adopt a step by step programme to introduce an internal training system, which grows and changes with the organisation.
   (a) **Developing a commitment towards cooperative training:** The facilitator has a tremendous task after entering into the existential situation in a cooperative organisation to create awareness in the need of training and a critical consciousness of the affairs in the organisation among policy makers or leaders. As Paulo Freire indicates, "The methodology of that investigation must likewise be ideological, providing the opportunity both to discover generative themes and to

stimulate peoples' awareness in regard to these themes'. (Pedagogy of Oppressed) Therefore, they need to start with the enterprise issues confronting the organisation and highlighting the relevance of training to contribute to resolve them. For this purpose, performance analysis of the enterprise has to be undertaken.

(b) **Developing a problem oriented training strategies:** This has to be undertaken after the performance analysis in order to isolate the areas or issues that could be dealt with through training activities. This needs an elimination process, to eliminate the issues that need organisational development approaches or external solutions. This also requires setting priorities considering the limited resource available for utilisation for training activities. Once the priorities are set, the analysis of the job tasks that are to be taken for setting learning objectives (cognitive, affective and psychomotor) have to be analysed. These objectives form the basis of learning strategies, methodologies, and techniques as well as contents.

(c) **Developing a comprehensive internal training system:** When the policy makers would see the positive changes in the enterprise systems in form of better productivity, profitability and the growth of the organisation, it would become easy to work for a long term training system which has a logical l relationship with the career prospects of the staff and leaders. This would start from the induction of an employee to the organisation which goes through foundation courses at each level (Co-operatives have atlest three levels operational, supervisory and managerial), competency based training in their respective jobs, and training into higher level posts.

In the process of developing such a comprehensive and long term training system, it is necessary for the co-operative organisation to establish training policies, and organisational facilities for the establishment of a separate division under a training manager. S/he has to be given a proper training as to how to develop curricula, how to conduct training activities and adjusting the manpower accordingly. Physical arrangements within the co-operative's premises are alwasy supportig the function vehemently. Allocation of separate budget for training would always help in planning and implementing training programmes.

# Planning for a more member oriented co-operative future......

P.B.Rajaguru
Chairman, centre for co-operative
Research and Development.

**1. Prelude:**

The Challenges before Co-operatives are indeed formidable, with any approach to rehabilitation requiring both a clear understanding of the Concept of CO-OPERATION, and a complete RETHINK about roles and responsibilities vis a vis Co-operatives and their members. The task becomes all the more difficult as we in Sri Lanka have had near 100 years of Co-operative experiences of various types, and where over the many decades Co-operatives have come to mean various things to various persons, with the concepts varying widely between the policy makers, the politicians, the bureaucrats the members and the community at large. In fact many a Co-operator of today is a 'born Co-operator", like the many "born Buddhists" in our country , where the understanding of the concepts of Co-operation or Buddhism are, at best minimal, but we all mouth the "Principles" and "Pansil" and. convince ourselves that we are good "Co-operators" or that we are "good Buddhists", by merely repeating these on every occasion.

**2. Co-operatives Beginnings:**

It is contended that "Co-operation" came into being in this country on a wrong footing and we have failed to realize that. All along we have been groping around for enlightenment,. but we have had no one to put us on the path to true Co-operative realization. All those concerned with Co-operative development would always refer back to its origins and in particular to the efforts made by the Rochdale Pioneers to improve their social and economic situation by "Working Together" to satisfy their various economic and other needs, through an Enterprise which they owned and managed by themselves - theirs was a self reliant effort, using their limited resources not only to satisfy their various needs, but also to compete effectively in a challenging market and to ensure their economic and social independence. The firm concepts established by the Pioneers were those of self reliance, independence and autonomy, of working together to achieve the common objectives, based on the ideologies of voluntarism and democracy.

Unfortunately, we in Sri Lanka, and others in many South Asian Colonial countries had "Co-operation" " "Introduced" into the country to satisfy what the "Imperial Masters" thought were the felt needs of the people with limited means in the country. These approaches were based on their belief that "Co-operatives" needed a separate "Identity"; they needed a separate Law which also allowed the Government to give the Co-operativesw various concessions like Tax exemptions, and a separate Government Department to "look after", "support" and later "control" Co-operative activity - in fact in our situation the Co-operator has been only rarely, for example in Jaffna the Ferry Boat Coo- operative Services the Malayalam Tobacco Growers Co-operatives ect. the "initiator" who decides on what his Cp-operative should do - all too often the decision was from external Government sources, and the Co-operator became, from the beginning a "Recipient" of services - leading to what in more recent times, has been termed a "Dependency Syndrome" as

against the Pioneer concept of "Self Reliance and Independence -

"The "Short Title" or" the Preamble"." to many a Co-operative Law in this country will clearly illustrate the way in which the Co-operators were led up the "wrong path"

eg.
* Preamble to Ordinance. No.7 of 1911 - "whereas it is expedient to encourage thrift self help. and Co-operation among agriculturists, artisans, and persons of limited means, and for that purpose to provide for the constitution and control of Co-operative credit societies, be it therefore be enacted by the Governor of Ceylon, by and with the advice and consent of the, Legislative Council there of as follows:-

* Ordinance.. No 34 of 1921 emphasized the aspect of "Control" of cooperatives by the Registrar to enable Co-operatives to achieve their objectives, which were most often decided by Government.

* Ordinance No 16 of 1936 was quite clear in its Short Title - "An Ordinance to Consolidate and Amend the Law relating to the Constitution and Control of Co-operative societies.."

It must be stated that the growth of "Guided Co-operatives", over the many decades was spectacular with the Co-operatives performing. creditable services in the fields of Food Rationing, Agricultural production, Handloom Weaving etc - but in most cases not as initiators of an enterprise, but as recipients of Government Welfare Programmes, through their Association, which was the Co-operative in fact over several decades of "recipients of benefits" from the Government programmes, the co-operatives had also earned the distinction of being "Partners with Government" in the developmental effort - which also meant that the Co-operatives got the benefit of 'Our Men" being nominated to their "Committees/ Boards of Directors" for the good of the Co-operatives and Co-operators.

* Act No 35 of 1970, quite clearly established the fact, that though theoretically the "Member" owned the Co-operative and was responsible to "Control and Manage" his Co-operative, the ground situation in Sri Lanka was at great variance with the concepts of self reliance and autonomy.

The Short Title reads as follows:
"An Act to make Special Provisions for the implementation of a Scheme to Reorganize the Co-operative Movement, in particular, for the Dissolution of Societies, and the Amalgamation to Societies, and for matters connected there with and incidental there to.."

Section 2(1). of the Act reads as a follows:
"Where for the purpose of reorganizing the Co-operative Movement the Registrar thinks it necessary to do so, he may by Order published in the Gazette, amalgamate one or more societies...... with any other society..."

Thus it becomes blatantly clear that the Co-operatives in this country are "owned" by the members only nominally and that they have little or no control over "their" - Co-operative. Had the "owner ship" aspect been given any recognition, or for that matter, if the members of Co-opertives had established their " ownership status" in the community, such an amalgamation would be possible not merely on what the Registrar "thinks" and by his "Order", but it would have been only in" Consultation with the Co-opertive members and their Co-operative and with their" consent" - this

is what is still happening in Japan and what the Laidlaw Commission recommended, using the Japanese experience.

The 1970 Throne Speech also included an item to "set up a Transferable.. Service for Co-operative Employees," merely because a powerful Trade Union backing the Government asked for it - and all the while this request totally ignored the fact that a Co-operative employee is an employee only of a particular Co-operative society - and that he is in no way connected with Government. This alone clearly shows that neither the Co-operatives nor the Co-operators had been able to establish their independence and ownership identity even by 1970.

